
வாசமானவளே!
எஸ்.உஷாராணி
வாசமானவளே!
எஸ்.உஷாராணி

# உள்ளே...

1. என் சுவாசமானவளே! 5

2. உள்ளம் என்ற ஊஞ்சல் 121

# என் சுவாசமானவளே!



## 1

ரயிலின் ஓட்டத்தைப் போலவே, அவள் இதயமும் அதை விட வேகமாகத் தட... தட... வென்று துடித்தது.

சன்னலின் ஓரமாக இருக்கை. வெளியே பார்வையை ஓட்டியிருந்தாள். ஆனால் அடர்ந்த காடுகளோ, பச்சைப் பசேல் புல்வெளிகளோ, உயர்ந்து நின்ற மரங்களோ, எதுவும் அவள் மனதில் பதியவில்லை.

தான் இப்படி ஏமாந்து விட்டோமே, என்று கூனிக் குறுகிப் போனாள். இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்து விட்டானே, பாவி! உன்னையே நம்பி வந்த என்னை எப்படி விரட்ட மனசு வந்தது.

தான் வளரும் வரை குழந்தைகளுக்குப் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்கள் வளர்ந்து நல்ல முறையில் படித்து முடித்ததும், தனக்கென்று ஒரு துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

இவ்வளவு நாள் வளர்த்த தாய் தகப்பனுக்குத் தெரியாதா? தன் பெண்ணுக்கு எப்படி மாப்பிள்ளை தேட வேண்டும். நல்ல குடும்பத்தில் மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று.

ஆனால் பிள்ளைகள் அவசரப்பட்டு விடுகிறார்கள். தான் விரும்பும் பையனை வேண்டாம் என்றால் பெற்றவர்கள் அவர்களுக்கு எதிரிகள் ஆகிவிடுகிறார்கள்.

பெற்றவர்கள் அனுபவசாலிகள். அவர்கள் வாழ்க்கையில் நல்லது கெட்டது எல்லாம் புரிந்து இந்த வழியில் போனால் நல்லது, இது தப்பான வழி. இதில் சென்றால் சரி வராது என்று அனுபவத்தால் சொல்வதுண்டு. ஒருத்தரைப் பார்த்தாலே அவன் இப்படிப் பட்டவன் என்று எடை போட்டு விடுவார்கள். ஆனால் பிள்ளைகளுக்கோ பெற்றவர்களுக்கு என்ன தெரியும், காதல் பற்றி என்று நினைப்பு.

பெற்றவர்களுக்கு இவர்கள் மாதிரி காதல் பற்றித் தெரியாமல் இருக்கலாம்.

ஆனால் அவர்கள் முறைப்படி பெண்ணோ பையனோ பார்த்து, பெரியவர்கள் முன்னின்று, எந்த ஒரு குறையும் இல்லாது, நல்ல நேரத்தில் திருமணத்தை முடித்து வைப்பார்கள் ஆசிர்வாதத்துடன்.

இப்பொழுதோ கண்டதும் காதல். ஒரே சந்திப்பில் மனதைப் பறிகொடுத்து விட்டேன். நான் இவளைத்தான்



திருமணம் பண்ணிக் கொள்வேன் என்று அடம் பிடிப்பது.

ஒரே பார்வையில், ஒரே சந்திப்பில் என்ன தெரியும், அவனைப் பற்றியும், அவன் குடும்பத்தைப் பற்றியும்.

பெரியவர்களகப் பார்த்தால், முதலில் குடும்பத்தில் உள்ள பெரியவர்களுடன் பேசிப் பழகி, உங்கள் பாரம்பரியம் என்ன என்று தெரிந்து, அவர்கள் பேச்சிலேயே நடப்பிலேயே கண்டு கொள்வார்கள். இந்தக் குடும்பம் நல்ல குடும்பம். இவர்கள் நல்லவர்களாக இருக்கும் போது பிள்ளைகளும் நல்லவர்களாகத்தான் இருப்பாங்க என்று முடிவெடுத்து, பெண்ணை எடுப்பாங்க அல்லது கொடுப்பாங்க.

இப்ப இருக்கும் பிள்ளைகள், பெரியவர்களைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. தன் காதல் மட்டுந்தான் பெரிசு, மற்றவர்கள் சம்மதிக்கா விட்டால், நீங்கள் வர வேண்டாம். நாங்கள் திருமணம் பண்ணிக் கொள்கிறோம் என்று பண்ணிக் கொள்வது.

பெற்றவர்கள் பிள்ளைகளைப் பற்றிக் கருவிலேயே கனவு காணத் தொடங்கி விடுவாங்க. அது என்ன நிறத்தில் பிறக்கணும். அது கொழு... கொழு... என்று இருக்கணும். சீக்கிரம் நடக்கணும், பேசணும், நல்ல ஸ்கூலில் சேர்க்கணும்.

அது மட்டுந்தான் பஸ்ட் ரேங்க் வாங்கணும். எதிலும் முதன்மையாக இருக்கணும் என்று அவர்கள் காணும் கனவிற்கு அளவே இருக்காது.

இந்த மாதிரி கனவு கண்டாலும் பிள்ளைகள் சரியாகப் படிக்கவில்லை யென்றாலும், கலர் கம்மியாக இருக்

தாலும், எல்லாவற்றிலும் பின் தங்கி இருந்தாலும், பெற்றவர்கள் அதே அன்பைத்தான் செலுத்துவார்கள். பிள்ளைகள் நாம் நினைத்தபடி இல்லையே என்று அன்பைச் சிறிதும் குறைப்பதில்லை.

தனக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும், தன் பிள்ளை எந்தக் குறையும் இல்லாமல் வசதியாக வளர வேண்டும் என்றுதான் நினைப்பார்கள்.

அதிலும் ஸ்கூலில் சேர்க்க பாஃம் வாங்க கியூவில் நிற்பாங்களே, வெயில் என்றும் மழை என்றும் பாராமல்

இதில் உமா கொடுத்து வைத்தவள். அன்பான பெற்றோர். அன்புக்கும் ஆஸ்திக்கும் ஒரே பெண். படு சுட்டி, நல்ல அழகு. பெற்றவர்கள் உமாதான் தங்கள் உயிர், வாழ்க்கை சகலமும் என்று உமாவுக்காகவே வாழ்ந் தனர்.

அவள் மனதில் நினைப்பதை உடனே கண் முன் கொண்டு வந்து கொடுத்தார்கள். தரையில் நடந்தால் மகள் பாதம் நோகுமே என்று காஷ்மீர் கம்பளம் விரித்து அதில் நடக்க விட்டனர்.

அவளும் பெற்றவர்கள் மீது அளவற்ற அன்பைப் பொழிந்தாள். அதிலும் அவளுக்கு அப்பா என்றால் உயிர். அவர் ஆபீசில் இருந்து வராமல் சாப்பிட மாட்டாள்.

சக்கரவர்த்தியும் மகள் சாப்பிடாமல் இருப்பாள் என்று மீட்டிங் இருந்தாலும், ஆபீசில் எவ்வளவு வேலை இருந் தாலும், அதை எல்லாம் எடுத்து வைத்து விட்டு வந்து விடுவார்.

அப்பாவோடுதான் சாப்பிடுவேன் என்று இருபத் தோரு வயது வரை வளர்ந்தவள் தீபக்கை முதன்



முறையாகப் பார்த்ததும் அப்படியே தலை கீழாக மாறினாள்.

எதிர் சீட்டில் இருந்தவர்கள், "நீ எங்கேம்மா போகிறாய்?" என்றனர்.

அவள் திடுக்கிட்டு நனவுக்கு வந்தாள்.

"என்ன கேட்டிங்க?" என்றாள்.

"நீ எந்த ஊருக்குப் போறே? என்றேன்."

"நான் பெங்களூர் போறேன்," என்றாள்

அந்தப் பெரியவரும், "நாங்களும் அங்குதான் போகி றோம்," என்றனர்.

உமா லேசாகப் புன்னகைத்தாள்.

"நீ தனியாகவா பெங்களூர் போறே?" என்றார் அந்த அம்மாள்.

"ட்ரெயின்ல இவ்வளவு பேர் வர்றாங்க. தனியாகவா போறே என்கிறே. ஏன், நாமெல்லாம் துணைக்கு இல் லையா-" என்றார் பெரியவர் கிண்டலாக.

"உங்களுக்கு எது பேசினாலும் கிண்டல்தான்!" என்று பொய்யாகக் கோபித்துக் கொண்டார்.

"இல்லை ஜானு, நீ கேட்டது தப்பு."

"ஏங்க, ஒரு வயசுப் பொண்ணு தனியா இங்கேயிருந்து பெங்களூருக்குப் போகலாமா? அழகா வேற இருக்கா. அதான் கேட்டேன்."

"நீ நினைப்பது தவறு. எங்குதான் தப்பு நடக்கலை. பெண் தனியா ட்ரெயினில் போனால் மட்டுந்தான் தப்பு நடக்குதா? வீட்டிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, சில இடங்களில்."

''பெண்களெல்லாம் இப்பொழுது நன்றாகப் படித்துப் பெரிய பெரிய உத்தியோகத்தில் இருக்காங்க. அவங்களைப் பாதுகாத்துக் கொள்ள அவங்களுக்குத் தைரியமும், தன்னம்பிக்கையும் இருக்கு. இருக்கணும்.''

''நீ அந்தக் காலத்து மனுசி. உனக்கு இதெல்லாம் புரியாது. தைரியமா இருக்கிற பெண்களைக் கூட நீ சிறிது நேரம் பேசினால் அவர்கள் கோழை ஆகிவிடுவார்கள்.''

''நீங்க என்னதான் சொன்னாலும், நாகரிகம், படிப்பு, பதவி, இதெல்லாம் இருந்தாலும், பெண்களுக்குப் பாதுகாப்பு அவசியம். முடிந்தவரை துணையுடன்தான் வெளியே போக வேண்டும்.''

''உன் வேதாந்தத்தை எல்லாம் தூக்கிக் குப்பையில் போடு. இப்பயெல்லாம் வீட்டில் இருந்தபடியே ஈமெயில், இண்டர்நெட் என்று மும்பை என்ன, அமெரிக்கா என்ன என்று பேசுகிறார்கள். நீ என்னடா என்றால் தனியாகப் போகாதே, துணையோடு போ என்கிறாய்.

''இனிமேல் நீ ஊருக்குப் போறதென்றால் இவளைத் துணைக்குக் கூட்டிப் போம்மா,'' என்றார் பெரியவர் சிரித்துக் கொண்டே.

''உன் பேர் என்னம்மா?''

''உமா,'' என்றாள் மெதுவாக.

''உனக்குக் கல்யாணம் ஆயிருச்சு போல. குழந்தை இருக்கா?''

அவளுக்குப் பகீர் என்றது. குழந்தை இல்லை எனும் போதே குரல் தழுதழுத்தது.



''இதுக்கு ஏம்மா கண் கலங்குறே? உனக்கு என்ன வயசா ஆயிட்டது. மெதுவாகப் பெத்துக்க வேண்டியதுதான்.''

''அவர் எங்கே இருக்கார்?''

''அவர் சென்னையில்.''

''அவர் சென்னையில் இருக்கார். நீ பெங்களூரில் இருக்கே. எப்பவாவது சந்தித்துக் கொள்வது. இதில் லீவு இல்லை. வேலை இருக்குது என்று கணவன் மனைவி பேசிக் கொள்ளக் கூட நேரம் இல்லை. என்னா வாழ்க்கையோ? எதுக்குத்தான் இப்படி ஓடுறீங்களோ?''

''சந்தோசமா வாழத்தான் கல்யாணம் பண்ணி வைக்கிறோம். இப்படி வேலை என்ற சாக்கில் பிரிந்திருக்கீங்க.

''எனக்கெல்லாம் இவர் ஊருக்குப் போனால், அன்று தூக்கமே வராது. அவ்வளவு கஷ்டமா இருக்கும். இவரும் உடனே தங்காமல் வந்து விடுவார்,'' என்றாள், அவரைப் பார்த்துக் கொண்டே பெருமையாக.

அவரும் சிரித்துக் கொண்டே, ''உன் மேல் அன்பிருந்தா ஓடி வந்தேன்? மறுநாள் வந்தால் உன்னிடம் உதை வாங்க முடியாது என்று பயந்து கொண்டு வருவேன்.''

பக்கத்தில் உட்கார்ந்திருந்த இளைஞன் அதைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்து விட்டான்.

உமாவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

இவ்வளவு வயசாகியும் எப்படி அன்னியோன்னியமாக இருக்காங்க.

அந்த அம்மா குடிக்கத் தண்ணீர் எடுக்க எழுந்தார். ''நீ உட்காரு ஜானு. உனக்குத்தான் மூட்டு வலி. எதுக்கு எழுந்திருக்கே. நான் எடுத்துக் கொடுக்கிறேன்,'' என்று

தண்ணீர் பாட்டிலை எடுத்து டம்ளரில் ஊற்றிக் கொடுத்தார்.

உமா இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாள். இப்படிக் கூட ஒரு கணவன் இருப்பாரா? அவளும் இப்படித்தான் இருக்க வேண்டும்என்று நினைத்தாள்.

வாழ்க்கை அவளைப் புரட்டிப் போட்டது. வெளி உலகம் தெரியாமல் வாழ்ந்த அவளுக்குக் காலம் பாடம் கற்பித்தது.



## 2

உலகில் இப்படியெல்லாம் நடக்குமா? மனிதர்கள் இப்படியெல்லாம் இருப்பாங்களா என்று நினைக்கும் அளவிற்குக் காலம் அவளைப் புரட்டிப் போட்டது.

திருமண வாழ்க்கை இனிமை என்று நினைத்தாள். சினிமா போலத்தான் வாழ்க்கையும் இருக்கும். காதலித்த வனையே கைப்பிடித்தாள். தன்னை உருகி... உருகிக் காதலிப்பான். தனக்காகவே வாழ்வான் என்று நினைத் தாள்.

ஆனால் நடந்தது....

அந்தக் கசப்பான அனுபவத்தை மறக்க முயற்சி செய் தாள். அது முடியாமல் மனக்கண் முன் விரிந்தது.

தோழி வீட்டில் தீபக்கைச் சந்தித்தாள்.

தோழி பிரியாவின் அண்ணனின் நண்பன் அவ...



அவளின் பிறந்த நாள் விழாவிற்குப் போன போது தான் அவனை அங்கு சந்தித்தாள்.

நல்ல உயரம், கருமை என்று சொல்ல முடியாது. பளீர் புன்னகை, கம்பீரமான தோற்றம். கலகலப்பான பேச்சு என்று எல்லோரையும் கவர்ந்தான்.

தீபக் தட்டில் கூல் ட்ரிங்கை எடுத்துக் கொண்டு எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தான்.

உமா மற்றத் தோழிகளுடன் பேசிக்கொண்டு மாடிப்படி இறங்கிக் கொண்டிருந்தாள்.

சிறு பிள்ளைகள் அனைவரும் ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர். மாடிப்படியில் இருந்து வேகமாக ஓடி வந்து உமாவைப் பிடித்துத் தள்ளினர்.

அவள் தடுமாறி எதிரே ட்ரேயுடன் வந்த தீபக் மீது போய் விழுந்தாள்.

அவள் விழப் போவதை அறிந்த தீபக் ட்ரேயைப் பக்கத் தில் உள்ள சேர் மீது வேகமாக வைத்துவிட்டு அவளை அப்படியே தாங்கிப் பிடித்தான்.

சின்னப் பெண் என்றாலும் வேகமாக வந்து விழுந்த தில் அவனும் தடுமாறினான்.

ஆனால் உமாவை விடவில்லை.

கண் இமைக்கும் நேரத்திற்குள் நடந்து விட்டது.

உமாவுக்குக் கால் சுளுக்கி விட்டது.

முதன் முதலில் ஒரு ஆணின் அணைப்பில் அவளுக்கு உடம்பெல்லாம் ஜில்லென்று புது இரத்தம் ஓடியது. கை காலெல்லாம் நடுங்கியது.

அவள் இதயம் அதிர்ந்தது அவனுக்குத் தெரிந்தது.

பயப்படாதீங்க. இப்படி சேரில் உட்காருங்க என்றான். அவளால் நடக்க முடியவில்லை. அவனே கைத்தாங் கலாக அழைத்துக் கொண்டு உட்கார வைத்தான்.

தண்ணீர் கொடுத்துக் குடிக்கச் சொன்னான்.

அதை வாங்கிப் பருகிய பின்தான் அவளுக்கு மூச்சே வந்தது.

ரொம்ப பயந்திட்டீங்களா மிஸ்?

என் பேர் உமா. பெயர் சொல்லியே கூப்பிடலாம் என்றாள். தலையைக் குனிந்து கொண்டே.

என் பெயர் தீபக். நான் சரவணனோட ஃபிரண்ட்.

நான் பிரியாவோட ஃபிரெண்ட்.

ரொம்ப முக்கியம் போல என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் இருவரும் பேசினர்.

உமாவுக்கு உடம்பெல்லாம் குறுகுறுத்தது. அவனை நிமிர்ந்து பார்க்க வெட்கம் பிடுங்கித் தின்றது.

எல்லோரும் கேக் வெட்டும் இடத்திற்குச் சென்றனர்.

உன்னால்... சாரி உங்களால்...

பரவாயில்லை, அப்படியே கூப்பிடுங்கள் என்றாள்.

நடந்து வர முடியுமா?

ம்... ம்.. மெதுவாக வருகிறேன் என்றாள்.

அவள் எழுந்து மெதுவாக அங்கு சென்றாள். அதுக்கு அவன் உதவி செய்தான்.

விழா முடிந்ததும் தீபக் அவள் அருகில் வந்தான். எப்படி வீட்டுக்குப் போவே என்றான்.



நான் காரில்தான் வந்தேன். இப்பொழுது என்னால் கார் ஓட்ட முடியாது. அதனால் டிரைவரை வரச் சொல் லணும்.

உங்க வீடு எங்கிருக்குது. நானே உன்னைக் கொண்டு விட்டுட்டுப் போகிறேன்.

சரி என்று தலையாட்டினாள்.

காரை லாவகமாக ஓட்டினான். அவன் பக்கத்தில் உட்கார்ந்து போவது பெருமையாக இருந்தது.

அவளை வீட்டில் விட்டுவிட்டு அவன் வீட்டுக்கு ஒரு ஆட்டோவில் சென்றான்.

அன்று இரவு முழுவதும் உமாவுக்குத் தூக்கம் இல்லை. அவன் முகமே மனதை அடைத்தது. எவ்வளவு மென்மை யாகப் பேசுகிறான். எப்படி தனக்கு என்ன தேவை என்று நடந்து கொள்கிறான். இவனைக் கட்டிக் கொள்ள யாருக்குக் கொடுத்து வைத்திருக்கோ.

ஏன் எனக்குக் கொடுத்து வைக்கக் கூடாதா? மனதிற் குள் நினைத்தாள். அப்பாவிடம் கேட்டால் உடனே சரிடா என்பார். இப்படியே நினைத்துக் கொண்டு கண் அயர்ந்தாள்.

மறுநாள் இவள் செல்லுக்கு போன் வந்தது. நம்பரைப் பார்த்தாள். புது நம்பராக இருந்தது. யாராக இருக்கும்?

ஹலோ என்றாள். மறுமுனையில் ஹலோ... நான் தீபக் பேசுறேன் என்றான்.

அவளுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. குரலில் உற்சாகம் கொப்பளிக்க, நான் உமா பேசுறேன் என்றாள்.

தெரியும் உமா. இப்போ கால் எப்படி இருக்கு?

டாக்டர் வந்து பார்த்து ஊசி போட்டார். ம்... இப்பொழுது பரவாயில்லை. லேசாக வலிக்கிறது.

எக்ஸ்ரே எடுத்துப் பார்ப்பதுதானே என்றான்.

அதெல்லாம் ஒன்றுமில்லை என்றார் டாக்டர்.

நீங்க எப்படி இருக்கீங்க என்றாள்.

ம்... நான் நல்லா இல்லை. உன் நினைவாகவே இருக்குது. நான் உன்னைப் பார்க்க முடியுமா உமா?

நான் எப்படி எங்கு வருவது. இது நாள் வரை தனியாக எங்கும் வெளியே போனதில்லை. எனக்குத் தனியா வரவும் தெரியாது.

அவள் L.K.G. முதல் டிகிரி முடிக்கும்வரை தனியாகச் சென்றது கிடையாது. அவளைக் கொண்டு விட்டுப் பிறகு கூட்டி வந்தனர்.

வெளியே தனியாகப் போனால் வீட்டிற்கு வர வழி தெரியாது.

ஆனால் இன்று தன்னந்தனியாகப் பிறந்த ஊரை விட்டு, பெற்றவர்களை விட்டு எங்கோ போகிறாள் பிழைப்பிற்காக.

கண்களில் இருந்து கண்ணீர் உருண்டோடியது.

அப்பா! என்னை மன்னிச்சிடுங்க. நீங்க எவ்வளவோ சொன்னீங்க. நான் கேட்கலைப்பா. நான் நல்லா அனுபவித்து விட்டேன். என் வாழ்நாளெல்லாம் மறக்க முடியாதுப்பா.

பெற்றவர்களைத் துச்சமாக நினைத்ததற்கு, கடவுள் எனக்குத் தண்டனை கொடுத்துவிட்டார்.

அப்பா! நீங்கள் என்னைக் கண்ணின் கருமணி போல பாதுகாத்தீங்க. அப்பா! நான் இப்பொழுது யாரும் அற்ற அனாதை போல் போய்க் கொண்டிருக்கேன். என்ன ஆவேனோ, தெரியாதுப்பா.

அப்பா, எனக்குப் பசிக்குது. பசி என்றால் என்னவென்றே தெரியாத எனக்கு, பசின்னா என்ன, கஷ்டம்னா என்ன, அடி உதைன்னா என்ன, ஏச்சு பேச்சுக்கள்னா என்ன என்று புரிய வைத்து விட்டார், அப்பா.

ஒரு பெரிய கேவல் வந்தது. எங்கே சத்தம் வெளியே கேட்டு விடுமோ என்று இரு கையாலும் வாயைப் பொத்திக் கொண்டாள்.



## 3

பளபளவெனப் பொழுது விடியப் பெங்களூர் சென்று நின்றது. மற்றவர்கள் இறங்கி விட்டனர்.

உமா தன் பேக்கோடு இறங்கிச் சுற்று முற்றிலும் பார்த்தாள். தன் ஃபிரண்டை நம்பி வந்தது தப்போ, எதுவும் தெரியாத ஊரில். கொஞ்ச நேரத்தில் ரோஸி அவளைத் தேடி வந்தாள்.

''ஹாய் உமா, எப்படி இருக்கே?'' என்றாள்.

ஃபிரண்டைப் பார்த்த சந்தோசம். ''ஹாய் ரோஸி! நான் நல்லாயிருக்கேன். எங்கே காணோமே என்று பயந்திட்டேன்.''

''சரி வா ,போகலாம்,'' என்று கூட்டிப் போனாள்.

வீட்டில் அம்மா, அப்பா, அண்ணன் அனைவரிடமும் அறிமுகப்படுத்தப் பட்டாள்.

ரோஸி, அப்பாவிடம், ''உமாவுக்கு உடனடியாக ஒரு வேலை வேண்டுமப்பா.''

''சரிம்மா, நான் ஒரு லட்டர் தர்றேன் அதைக் கொண்டு இந்த ஆபீசில் கொடுக்கச் சொல்,'' என்றார்.

உமா குளித்துச் சாப்பிட்டு வந்தாள்.

ரோஸி, ''நீ ஓய்வெடுத்துக் கொள். நாளை போகலாம்,'' என்றாள்.

சரி என்று உமாவும் கொஞ்ச நேரம் படுத்தாள்.

நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

அன்று அவளைப் பார்க்க வேண்டும் என்று சொன்னவன்,

நான் வர முடியாது என்று அவள் சொன்னவுடன், நீ உங்க வீட்டுத் தெரு முனையில் நில். நான் வந்து பிக்கப் பண்ணிக்கறேன் என்றான்.

அவளும் எதுவும் யோசியாமல் தெரு முனையில் வந்து நின்றாள். அடுத்த நிமிடமே தீபக் வண்டியில் வந்தான்.

அவளுக்குப் பயமாக இருந்தது. யாராவது பார்த்தால் வண்டியில் எப்படிப் போவது என்று தயங்கினாள்.

பரவாயில்லை, ஏறு என்றான். அவளும் மறுக்காமல் ஏறி உட்கார்ந்தாள். அவன் ரொம்ப வேகமாகப் போனான். அவள் அவனை இறுகப் பிடித்துக் கொண்டாள்.



ஒரு ஹோட்டலுக்குப் போனார்கள். என்ன சாப்பிடுறே? நீங்க என்ன சாப்பிடுறீங்களோ, அதுவே எனக்கும்.

அன்றே அவள் தனக்கு இதுதான் வேண்டும் என்று கூறியிருக்கணும். அவன் இஷ்டத்துக்கு இவள் ஆடினாள்.

அவள் அவன் மீது முழுமையான அன்பைச் செலுத்தினாள். அவனும் அவள் மீது அன்பைப் பொழிந்தான்.

கால் எப்படிடா இருக்குது என்று காலை எடுத்து மடிமீது வைத்துப் பார்த்தான். லேசான வீக்கம் இருந்தது. அதை மென்மையாக வருடிவிட்டான்.

அவளுக்கு இந்த உலகமே சொர்க்கமாக இருந்தது. இப்படி ஒரு சுகமாக இருக்குமா... அவன் கைப்பட்டதும்.

விடுங்கள் என்று அவள் காலை எடுத்தாள்.

அவன் விடாமல், ஏன் காலை எடுக்குறே உமா?

எனக்கு வெட்கமா இருக்குது. அவள் முகம் குங்குமமாகச் சிவந்தது.

நீ வெட்கப்படும்போது அழகா இருக்கே உமா. உன் கன்னம் இரண்டும ரோஜா கணக்கா சிவந்து விட்டது.

அவள் கன்னத்தைத் தடவினான். அவள் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

இவர்கள் காதல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது.

உமா சீக்கிரம் திருமணம் பண்ணிக் கொள்ளலாம் என்றாள்.

தீபக் யோசித்தான். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அவளுக்குத் திருமணம் நடந்த பிறகுதான் நமக்கு என்றான்.

உமாவுக்குச் சப்பென்றாகிவிட்டது. எதுவும் பேசாமல் இருந்தாள்.

என்ன கோபமா? நாம் இப்படியே லவ் பண்ணிக் கொண் டிருப்போம். இது எவ்வளவு சுகமா இருக்குது என்று அவளை மடியில் போட்டுக் கொஞ்சினான்.

அப்பொழுதாவது அவள் இல்லை, நமக்கு முதலில் திருமணம் நடக்கட்டும். பிறகு உங்கள் தங்கைக்குப் பார்க் கலாம் என்று சொல்லியிருக்கணும். அதுவும் சொல்ல வில்லை.

மறு நாள் காலையிலேயே கிளம்பி விட்டனர் - உமா வும், ரோஸியும். ஆபீசின் உள்ளே போயினர். பெரிய ஆபீஸ்தான்.

பியூனிடம் எம்.டி.யைப் பார்க்கணும் என்றனர். அவர்களை உள்ளே போகச் சொன்னான்.

இருவரும் உள்ளே நுழைந்தனர்.

''குட்மானிங் சார்...''

''குட்மானிங். உட்காருங்க,'' என்றார்.

உமா லெட்டரை நீட்டினாள்.

அதை வாங்கிப் படித்தார்.

''உனக்கு வேலை உண்டு உமா. நீ நாளையில் இருந்து வேலைக்கு வரலாம்.''

''தேங்க்ஸ் சார்!'' என்று இருவரும் வெளியில் வந்தனர்.

ரோஸியிடம், ''நான் லேடீஸ் ஹாஸ்டலில் தங்கிக் கொள்கிறேன்,'' என்றாள்.

''ஏன்டி. நீ எங்க வீட்டிலேயே தங்கிக் கொள்ளலாம். எங்களுக்கு ஒன்றும் கஷ்டமில்லை.''



''இல்லைடி. வேண்டாம். நான் தனியாக இருக்கத் தான் விரும்புறேன்,'' என்றாள்.

''சரி வாடி, போய்ப் பார்த்து விட்டு வருவோம்.''

ஆபீசுக்கும் ஹாஸ்டலுக்கும் ரொம்ப தூரம் இருந்தது.

பஸ்சில்தான் ஆபீஸ் போக வேண்டும்.

ரோஸி வீட்டில் இருந்து ஹாஸ்டலுக்கு வந்து விட்டாள். நாளை வேலைக்குப் போக வேண்டும்.

அவளுக்கு வீட்டின் நினைவு வந்தது.

அவள் அப்பாவிடம், நானும் உங்க கூட ஆபீஸ் வரட்டுமாப்பா.

எதுக்குடா செல்லாம். நான் சம்பாதிப்பதை, நீ ஆனந்த மாகச் செலவு செய். இந்தக் கை பூ மாதிரி. நீ வேலை செய்தால் தாங்குமா? என்னாலும் அதைத் தாங்க முடியாது.

உடனே சரி என்றாள்.

நான் வீட்டை விட்டு வந்த அன்றைக்கு அப்பா எப்படித் துடித்திருப்பார். அவள் தேம்பி... தேம்பி... அழுதாள்.

அப்பா! என்னை மன்னிச்சுடுங்க. நீங்கள் சொல்வதை நான் கேட்கவில்லை. செலவு செய்வதற்குத்தானே உன் கைகள் தவிர, வேலை பார்ப்பதற்கு இல்லை.

உன் கை ஆயிரம் பேருக்குச் சம்பளம் கொடுக்கணும். சம்பளம் வாங்க அல்ல என்று சொன்னீங்களே, அப்பா.

நாளை உங்க அருமை மகள் வேலைக்குப் போகப் போகிறேன். அடுத்தவர் முன் கை கட்டி நிற்கப் போகி றேன்.

காலையில் கண் விழித்ததுமே உன் முகத்தில் முழிக்கணும் என்று சொல்வீங்களே, அப்பா. அவர்கள் என்னைத் தரித்திரம், சனியன் என்று சொன்னார்கள்.

அம்மா ஆயிரம் முறை கொஞ்சுவாங்க. கண்ணா, என் தங்கமே, மணிப்பயலே, சின்னவனே எழுந்திருடா என்று. அங்கு ஏ மூதேவி எழுந்திரு என்று சொல்வாங்க.

இது நானே தேர்ந்தெடுத்த வாழ்க்கை. இதை நான் தான் அனுபவிக்கணும்.

நான் அவர் பேசியதெல்லாம் உண்மை என்று நம்பி விட்டேன், அப்பா. அவன் உன்னைக் காலம் பூராவும் வைத்துக் காப்பாற்ற மாட்டான் என்று சொன்னீங்களே. எவ்வளவு தீர்க்க தரிசிப்பா நீங்க.

வேண்டாம்மா. உனக்கு நான் வேற மாப்பிள்ளை பார்க்கிறேன். உனக்கு எப்படி மாப்பிள்ளை வேண்டும். என்ன வேலை செய்ய வேண்டும் என்று மட்டும் சொல். இந்த நொடியே உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் உன் முன்னாடி கொண்டு வந்து நிறுத்துறேன்.

வேண்டாம்பா. எனக்குத் தீபக்தான் வேண்டும். அவரைத்தான் பிடிச்சிருக்குது. அவரையே கல்யாணம் பண்ணி வைங்க என்றாள்.

அவர் துடிதுடித்தார். வேண்டாம் மகளே. நான் சொல்வதைக் கேள். நான் அனுபவப்பட்டவன். நான் சொல்வதைக் கேளுடா, தங்கம் என்று மகளிடம் கெஞ்சினார்.

அவள் ஒரே பிடிவாதமாக இருந்தாள்.

கடுமையாகப் பேசினால் ஒரு வேளை மகள் கேட்பாளோ என்று நினைத்தார்.





## 4

மறுநாள் கிளம்பி ஆபீஸ் சென்றாள். அங்கு அனைவருக்கும் அறிமுகப்படுத்தப்பட்டாள்.

கோபி என்பவனிடம் வேலையைக் கேட்டுத் தெரிந்து கொள். அவன் உமாவிற்கு வேலையைக் கற்றுக் கொடுத்தான்.

உமாவும் வேலையைக் கவனமாகக் கற்றுக் கொண்டாள்.

ஆபீசில் எல்லோரும் நன்றாகப் பழகினர். இவளைப் போலப் பெண்களும் இருந்தனர்.

ஆபீசில் இருக்கும் வரை வேலையில் மனதைச் செலுத்துவாள். ஹாஸ்டலுக்கு வந்தாலே, செக்கு மாடு மாதிரியே நினைவு அதே இடத்திற்கு வந்து நின்றது.

அவனை நம்பி அம்மா, அப்பா, சொந்த பந்தங்கள் அனைவரையும் விட்டு அவனுடன் போய்ப் பதிவுத் திருமணம் செய்து கொண்டாள்.

பெற்றவர்கள் மனநிலைமை எப்படி இருக்கும் என்று சிறிது கூட உமா யோசிக்கவில்லை. மனது நிறையத் தீபக்கே இருந்தான்.

கோயிலில் தாலி கட்டி வீட்டுக்குக் கூட்டிப் போனான். அவன் அவர்கள் வீட்டிலும் சொல்லவில்லை

அவர்களைப் பார்த்ததும், அவன் அம்மா அதிர்ச்சி யாகி விட்டார்.

அடப்பாவி! என்ன காரியம் பண்ணிக் கொண்டு வந்திருக்கே. பெத்த தாய் நான் உயிரோடு இருக்கும் போது. வயதுக்கு வந்த தங்கை இருக்கிறாள். அவளுக்குக் கல்யாணம் செய்யாமல் உனக்கு என்ன அவசரம் என்று கண்டபடி திட்டினார்.

தீபக் எதுவும் பேசாமல் உள்ளே சென்றான்.

அவளும் அவன் பின்னாடியே சென்றாள்.

ஆரத்தி கரைத்து அவர்களை வரவேற்கவில்லை யாரும்.

அவர் அழுது கொண்டே இருந்தார். அதைப் பார்த்து அவன் தங்கை மஞ்சுவும் அழுதாள்.

நீ என் பையனுக்கு என்ன சொக்குப் பொடி போட் டாயோ. என் பிள்ளை இப்படி மாறி விட்டானே.

இதுவரை என் பிள்ளை எனக்குத் தெரியாமல் எந்த ஒரு காரியமும் செய்ததில்லை. உன்னால்தான் என் பிள்ளை இப்படி மாறிவிட்டான்.

நான் என்ன செய்வேன். இந்தப் பொண்ணை எப்படிக் கரையேற்றுவேன் என்று திட்டினார்.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டுதான் தீபக் இருந் தான். ஏன் அம்மா இப்படிப் பேசுறீங்க. உமா ரொம்ப நல்ல பெண் என்று சொல்லவில்லை.

அப்படி நினைத்தாலும் உடனே தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். உடனே தாயிடம் தன்னைப் பற்றிப் பேசினால் தவறாக எடுத்துக் கொள்வார். பிறகு பேசிப் புரிய வைப்பான்.



இப்பொழுது எதுவும் பேசக் கூடாது. அது பெரிய பிரச்னையாகி விடும் என்று அவளும் பேசாமல் இருந் தாள்.

ஒரு நாள் வீட்டில் இருந்தான் தீபக். அந்த ஒரு நாளும் உமா கூடப் பேசவே இல்லை.

உமாவுக்கும் புரியவில்லை. தனக்கு எவ்வளவு வேதனையாக இருக்குது. பெற்றவர்களை விட்டு வந்தது.

அவன் அம்மா வேறு பேசுவது.

அவளிடம் நான்கு வார்த்தை ஆறுதலாகப் பேசக் கூடாதா என்று நினைத்தாள்.

மறுநாளே தீபக் ஆபீஸ் கிளம்பி விட்டான்.

அவனுடன் தனியாகப் பேச முடியவில்லை.

பொதுவாக ஆபீஸ் போயிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவன் போனதும் மாமியார் உமாவைத் திட்ட ஆரம்பித் தார். இப்படி எல்லாம் திட்டுவார்கள் என்று கூடத் தெரி யாது அவளுக்கு.

அன்பிலேயே மூழ்கி, அன்பிலேயே குளித்து, அன்பி லேயே வாழ்ந்தவளுக்கு, இவர்கள் பேசும் பேச்சும், அவன் நடந்து கொள்ளும் முறையும், அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அப்பா தனக்கு மாப்பிள்ளை பார்க்கப் போகிறார். உடனே என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்கள் என்று சொன்னாள்.

அவனும் உடனே சம்மதித்துக் கல்யாணத்தை ஏற்பாடு பண்ணினான்.

இப்பொழுது பாரா முகமாக இருக்கிறான்.

மாலை வந்ததும், அவனுக்குக் காபி கொண்டு போனாள். காபியை வாங்கிக் கொண்டு நீ சாப்பிட்டியா உமா என்றான் மெதுவாக.

அதற்குள் அவன் அம்மா வந்துவிடவே, அவன் பேச்சை நிறுத்தினான்.

உமாவுக்கு என்னவோ போல் இருந்தது. உடனே வெளியே வந்துவிட்டாள்.

இரவு அவன் அறைக்குச் சென்றாள்.

தீபக்கை அவன் அம்மா கூப்பிட்டாள்.

என்னம்மா என்றான்.

இது வயசுப் பெண் இருக்கிற வீடு. கொஞ்சம் ஒழுக்கமாக நடந்து கொள்ளுங்கள். எங்கள் முன்னாடியே என்ன இது, உள்ளே போய்க் கதவைச் சாத்துறது. அவளை வந்து வெளியே படுக்கச் சொல் என்றாள்.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டு உமாவும் இருந் தாள்.

இதைவிட அவமானம் வேற என்ன வேண்டும் ஒரு பெண்ணுக்கு. அவளே வெளியே வந்து விட்டாள்.

இப்படி இருக்கிறதனாலேதான், பெத்தவங்களை விட்டு ஓடி வந்திருக்கா.

இந்த வார்த்தை அவளை நடுவில் நிற்க வைத்துச் சுற்றிலும் நெருப்பை எரிய விட்ட மாதிரி இருந்தது. துடியாய்த் துடித்தாள்.

ஒரு தாய் இப்படியெல்லாம் பேசுவாளா?

இதுவரை அவள் தேன் மழையில் நனைந்தாள். தென்றலில் ஆடினாள். சந்தோசம்... சந்தோசம்... என்ற வார்த்தையைத் தவிர வேறெதுவும் அவள் அறிந்த தில்லை.

இப்பொழுது கண்ணீரில் கரைந்தாள்.

தீபக் தாயை எதுவும் கேட்கவில்லை.

அவன் போய்ப் படுத்துவிட்டான்.

ஒரே வீட்டில் இருந்து கொண்டு இருவரையும் பேச விடவில்லை. இதை விட ஒரு கொடுமை எதுவும் கிடை யாது.

தீபக் ரொம்ப மனம் நொந்து போனான். அம்மா ஏன் இப்படிப் பண்ணுறாங்க. பாவம், உமா எப்படித் துடித்துப் போவாள். அழாதே என்று கூடச் சொல்ல முடிய வில்லை.

அவளை இப்படிக் கூட்டி வந்து கஷ்டப்படுத்து கிறேனே. இதுக்கு என்ன செய்வது? வெளியேயும் எங்கும் கூட்டிப் போக முடியவில்லை.

அவளிடம் மனம் விட்டுப் பேச முடியவில்லை.

நாம் ஏதாவது பேசினால் வீட்டில் சண்டைதான் நடக்கும்.

தீபக் ஆபீஸ் போகிற வரைக்கும் உமா கண்ணில் படவே இல்லை.

அவன் சென்றதும் உமாவை அத்தனை வேலையும் செய்யச் சொன்னார்.

உமாவும் அத்தனை வேலையும் செய்தாள். பாத்திரம் விளக்கிக் கை எல்லாம் புண்ணானது. துணி துவைத்தாள்.

சமைத்தாள். அதில் எத்தனை கோளாறு சொன்னார் மாமி யார்.

எதுவும் பேசாமல் இருந்தாள். தான் இப்படி வந்தது தப்பு. அப்பா எத்தனையோ எடுத்துச் சொன்னார். இதற் குத்தான் நமக்குத் தகுந்த இடமாய்ப் பார்க்கலாம் என்று சொன்னாரா?

இவள் தகுதியைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. அவனை மட்டுந்தான் முழுமையாக நம்பினாள். இப்போ அந்த நம்பிக்கை பொய்த்துப் போனது.

எப்படி ஒரு கேள்வி கேட்கிறாங்க, ஏன் இப்படி பேசுறே என்று கேட்டானா? என்ன மனிதன் இவன். இவனை நம்பி இந்த வீட்டில் இருக்க முடியுமா?

சாப்பாடு கூட உமாவுக்குத் தனியாகப் போட்டார். காய் கூட்டு எதுவும் இல்லாமல். காபி கூட தங்களுக்குத் தனியாகவும், உமாவுக்குத் தண்ணீர் ஊற்றித் தனியாகவும் போட்டார்கள்.

அவளுக்கு அந்தக் காபியைக் குடிக்க முடியாது. வயித் தைக் குமட்டும். அதையும் கண்ணீரோடு விழுங்குவாள்.

நேரத்திற்கு விதவிதமான சாப்பாடும், மணிக்கொரு தடவை ஜூஸும் வரும். அதை எனக்கு வேண்டாம் என்பாள்.

அம்மா அப்பாவிடம், இப்படி இவளுக்கு ஊட்டி விடாதீங்க. நாளைக்குப் போற இடத்தில் இப்படி ஊட்டி விடுவாங்களா? இது அவளுக்குப் பழகிப் போய்விடும் என்பார்.

அதற்கு அப்பா, என் தங்கம் ஏன் அடுத்த வீட்டுக்குப் போகப் போறா. நான் வீட்டோட மாப்பிள்ளை



பேன். என் செல்லம் என்ன சொல்லுதோ, அதைக் கேட்டுக் கொண்டு நான் சம்பாதிப்பதை இருவரும் செலவு செய்து கொண்டு இருபத்து நாலு மணி நேரமும் சந்தோசமாக இருந்தாலே போதும்.

அப்பா! நான் ஒரு நிமிசம் கூட நிம்மதியாக இல்லைப்பா. அவளால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை.



# 5

பெங்களூரின் குளுமை உமாவுக்கு ரொம்பப் பிடித் திருந்தது. அந்தக் காலை வேளையில் இழுத்துப் போர்த்திக் கொண்டு, படுத்திருப்பது உமாவுக்கு ரொம்பப் பிடிக்கும்.

போர்வைக்குள் விழித்திருப்பது. ஆனாலும் எழுந் திருக்க மனசு வராது. அப்படியே படுத்திருந்தாள்.

இன்று ஞாயிறு விடுமுறை. ரோஸி வருகிறேன் என்று சொல்லியிருக்கிறாள். வெளியில் எங்காவது போக வேண்டும்.

பகல் முழுவதும் வேலை. இரவு முழுவதும் ஹாஸ்டெல் அறை.

ரோஸி பத்து மணிக்கெல்லாம் வந்து விட்டாள்.

இருவரும் கிளம்பி பார்க்குக்குச் சென்றனர். கால்கள் ஓயும் மட்டும் இருவரும் சுற்றினர். மதிய உணவை முடித்துக் கொண்டு சிறிது ஓய்வெடுக்கனர்

ரோஸி உமாவையே பார்த்துக் கொண்டிருந்தாள். என்ன மாதிரி இருந்தவள். எப்படி எல்லாம் வளர்த்தார்கள். இன்று இப்படி இருக்காளே.

ரோஸி மெதுவாக, ''உமா என்னதான் நடந்தது உன் வாழ்வில்?''

உமா திடுக்கிட்டாள். ''என்னடி இப்படி திடீர்னு கேட்கிறே. அதெல்லாம் ஒன்றும் இல்லை. நேரம் வரும் போது நானே சொல்கிறேன்.''

''சரி. உன் விருப்பம்.''

உமா சுற்றிலும் பார்வையை ஓட விட்டாள். ஜோடியுடனும், குழந்தைகளுடனும், பெரியவர்களுடனும் உட்கார்ந்திருந்தனர். இளஞ்ஜோடிகள் தங்களை மறந்து கண்களினால் பேசிக் கொண்டனர்.

இது மாதிரிதான் தானும் ஒரு காலத்தில் நினைத்தோம். உலகமே தனக்குக் கீழ்த்தான் என்று.

அத்தனையும் மறக்கும்படி ஆயிற்றே.

பழைய நினைவுகளை அசை போட ஆரம்பித்தாள்.

எப்படி எல்லாம் பேசினார்கள் எதிர் காலத்தைப் பற்றி

இப்படி எதிர்காலமே இல்லாமல் பண்ணி விட்டானே.

எவ்வளவு ஆசையாகப் பேசுவான். சீக்கிரத்தில் நேரம் ஆகிவிட்டதே. இப்போதான் வந்தது போல் இருக்குது. அதற்குள் மணி ஆகிவிட்டதே. உன்னைப் பிரியவே மனம் வரவில்லை என்று சொன்னவன், எப்படிப் பேசினான். அவனுக்குள் இப்படி ஒரு மனம் இருக்கும் என்று தெரியாமல் போய்விட்டதே. எப்படி மாறிவிட்டான்.

அதைப் பற்றி நினைத்தாலே நெஞ்சுக் கூட்டினுள் சிலீர் என்ற நடுக்கம் தெரிந்தது.



அவள் இதயமும், மனமும் எவ்வளவு அமைதியாக இருந்ததோ, கல்யாணத்திற்குப் பிறகு தலைகீழாக மாறி விட்டது. தூக்கத்தில் கூட மனது துடிதுடித்தது. இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

அமைதியாக இருக்க முயற்சி செய்தாலும், முடியவில்லை. இப்படியே நிலைமை இருந்தால், தனக்குப் பைத்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும்.

மாமியார் சாதாரணமாகப் பேசினாலும், இவளுக்கு அதிர்ச்சியாக இருக்கும்.

மஞ்சு சின்னப் பெண்தானே. உமாவோடு பேசுவோம் என்று பேச மாட்டாள்.

அவள் ஃபிரண்ட்ஸ் எல்லோரும் வருவாங்க. அவர்களுடன் அரட்டை அடிப்பாள். ஒரு வார்த்தை உமாவோடு பேச மாட்டாள்.

உமாவாகச் சென்று பேசினாலும், முகத்தில் அடித்தது போல் பதில் வரும்.

மறுபடி வாய் திறந்து பேச முடியாதபடி.

இந்த வயதில் எப்படிப் பேசுகிறாள்.

தான் இவ்வளவு செல்லமாக வளர்ந்தாலும், சிறிதும் பண்பாடு தவறாமல் வளர்ந்தாள். வந்தவர்களை எப்படி வரவேற்கணும். பெரியவர்களிடம் எப்படி மரியாதையாக நடந்து கொள்வது. பொது இடத்தில் எப்படிப் பேச வேண்டும். தெரியாத ஆண்கள் வீட்டிற்கு வந்தால் எப்படி நாகரிகமாக ஒதுங்கிப் போவது என்று அவள் அத்தனையும் அறிந்திருந்தாள்.

பணம் மட்டும் இருந்தா போதாதுடா, செல்லம். அதைவிடப் பண்பாடு அதிகமா இருக்கணும். அப்பத்தான் சேர்த்து வைத்த சொத்தைக் காப்பாற்ற முடியும்.

இப்படிச் சொல்லிச் சொல்லியே வளர்க்கப் பட்டாள்.

இப்படி வளர்ந்தவளே நூலிழை தவறியது போல் காதல் என்ற வட்டத்துக்குள் சிக்கிக் கொண்டாள்.

உமாவைக் கடைக்கு மார்கெட்டுக்கு எல்லாம் போகச் சொன்னார் மாமியார்.

அவளுக்குக் கைகாலெல்லாம் உதறியது. கடைக்கெல் லாம் போய்ப் பழக்கமில்லை. காய் எப்படி வாங்க வேண் டும் என்று தெரியவில்லை.

கூடையுடன் சென்றாள். வண்டிகளில் கீரை, தக்காளி, காய்கள் என்று வரிசையாக இருந்தன. கடைகளிலும் இருந்தது.

ஒரு வண்டியில் தக்காளி வாங்கினாள். விலை கேட்கத் தெரியவில்லை. பக்கத்து வண்டியில் இதை விடக் குறைவாக விற்றான். அவளுக்கு ஏன் நீ காசு கூடக் கேட் கிறாய் என்று கேட்கப் பயமாக இருந்தது.

பேசாமல் வாங்கிக் கொண்டு போனாள்.

இலையை வாங்கிக் கடையிலேயே வைத்து விட்டுச் சென்று விட்டாள்.

வீட்டிற்குப் போனதும்தான் தெரிந்தது. இலையை எடுத்து வரவில்லை என்று. தெரிந்தால் என்ன சொல் வார்களோ என்று பயந்து கொண்டு, அந்த வெயிலில் வேகமாகச் சென்றாள். மனிதாபிமானக் கடைக்காரர் அதை எடுத்து வைத்திருந்தார்.

இந்தாம்மா, மறந்து விட்டுட்டுப் போய்ட்டே என்று இலையைக் கொடுத்தார்.

ரொம்ப தேங்க்ஸ் என்று இலையை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்தாள்.

அவளைப் பிடிபிடி என்று பிடித்துக் கொண்டார் மாமியார். ஒரு காய் வாங்கக் கூட துப்பில்லை உனக்கு. அதுக்குள்ளே கல்யாணம் கேட்குதா? என்னதான் பெத்து வளர்த்தாங்களோ உன்னை.

உன்னைச் சொல்லிக் குத்தமில்லை. உன்னைப் பெத்த வங்களைச் சொல்லணும் என்று நீட்டி முழக்கினார்.

தப்பு செய்யக் கூடாது. திட்டு வாங்கக் கூடாது என்று தான் நினைக்கிறாள். எப்படித்தான் கவனமாக நடந் தாலும் இப்படி நடந்து விடுகிறது.

அவள் ஒரு மன நிலையில் இல்லை.

அன்று ஞாயிறு விடுமுறை. வீட்டில் தீபக் இருந்தான். உமா என்று மெதுவாகக் கூப்பிட்டான்.

என்ன என்பது போல் தலையை உயர்த்தினாள்.

இங்கு வா என்றான் ஜாடையாக.

அவள் எழுந்து அவன் முன்னே நின்றாள்.

என்ன பேச மாட்டேங்கிற என்றான்.

சரேலென நிமிர்ந்து அவன் கண்களை நேராக ஊடுரு விப் பார்த்தாள். அந்தப் பார்வையில் அனல் தெறித்தது.

எனக்குப் பேச்சு மறந்து ஆறு மாசம் ஆகிறது.

அதுவும் உங்களிடம் பேச எனக்கு என்ன இருக்கிறது என்று அந்த இடத்தை விட்டு வந்து விட்டாள்.

நாட்கள் உருண்டோடின. தீபக்குக்கும் மன நிம்மதி யில்லை. ஒரு நாள் கோயிலுக்குப் போகலாம் வா என்று உமாவைக் கூப்பிட்டான்.

அவள் வர முடியாது என்றாள்.

ஏன் இப்படி பண்றே உமா. நீ என்னைப் புரிந்து கொள்ள.

உங்களை என்னை விட யார் புரிந்து கொள்ள முடியும்? நல்லா புரிந்து கொண்டேன். உங்க சுயரூபம் என்ன வென்று.

அவனுக்குச் 'சுருக்'கென்றது.

மறுபடியும் கூப்பிட்டான். உன்னிடம் பேச வேண்டும் என்று பிடிவாதமாக.

சரி என்று கிளம்பிப் போனாள். கோயிலுக்குப் போய் விட்டு அப்படியே ஹோட்டலுக்குக் கூட்டிப் போனான்.

என்ன சாப்பிடுறே?

எனக்கு எதுவும் வேண்டாம். நீங்கள் மட்டும் சாப் பிடுங்க என்றாள் எங்கோ வெறித்தபடி.

உனக்கு என் மேல்தானே கோபம். சாப்பாட்டின் மீது என்ன?

ரொம்ப அக்கறை தான். ஏதோ இத்தனை மாதத்திற்குப் பிறகாவது சாப்பிடு என்று சொல்ல மனசு வந்ததே.

நீ என் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். நான் பேசினால் வீட்டில் வீணாகப் பிரச்னைதான் வரும். நீ கொஞ்சம் அனுசரித்துப் போக வேண்டும்.

நடுத்தரக் குடும்பத்தில் இதெல்லாம் சகஜம்.

எதெல்லாம் சகஜம், கட்டின கணவன் கூடப் படுக் காதே. பேசாதே. என்று அசிங்கமாகப் பேசுவதா?

நாளைக்கு உங்கள் தங்கைக்குக் கல்யாணமானால் இப்படித்தான் இருப்பாளா? என்றாள் கோபக் குரலில்.





# 6

ஹோட்டலில் இருந்து எழுந்து வெளியே வந்து விட்டாள்.

அவனுக்குச் சினம் தலைக்கேறியது. வீட்டில்தான் எதுவும் பேச முடியவில்லை. வெளியிலாவது வரலாம் என்று வந்தால். இவள் இப்படிப் பேசுகிறாள். என்ன செய் வது என்று இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தான்.

வீடு செல்லும்வரை இருவரும் பேசவில்லை.

வீட்டிற்குள் நுழைந்ததும், அவன் அம்மா ஆரம்பித்து விட்டார்.

இரண்டு பேரும் போய் ஊரைச் சுற்றி விட்டு வந்தீங் களே, நீங்கள் சாப்பிடாமலா வந்திருப்பீங்க? எங்களுக்கு எதுவும் வாங்கிட்டு வரணும் என்று தோணலியா? அவள் விட்டிருக்க மாட்டாள். எங்கே என்னைப் பற்றிக் குறை கூறவே அவளுக்கு நேரம் பத்தாது. இதில் எங்கள் நினைப்பேது?

தீபக் ஆத்திரமானான். ஆமா, ஊர் சுற்றிவிட்டுத்தான் வர்றோம். அது பொறுக்கவில்லையா உங்களுக்கு. இதே வேலையாய்ப் போச்சு உங்களுக்கு என்று மெதுவாக, ஆனால் அழுத்தமான குரலில் கூறினான்.

அவ்வளவுதான். அவர் அழுது ஆர்ப்பாட்டம் செய் தார். நாங்கள் இந்த வீட்டைவிட்டுப் போகிறோம். நானும்

என் மகளும் எங்காவது ஆற்றிலோ கிணற்றிலோ விழுந்து சாகிறோம் என்று கிளம்பினர்.

தீபக்குக்குச் சங்கடமாகப் போய் விட்டது.

அம்மாவைச் சமாதானப் படுத்தவே முடியவில்லை. இனிமேல் நான் அவளைக் கூட்டிக் கொண்டு வெளியே போக மாட்டேன் என்று கூறி அவர்களைச் சமாதானப் படுத்தினான்.

அவனுக்குச் சீ என்றிருந்தது.

என்ன வாழ்க்கை இது. அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு இந்தப் பாடு படுத்துறோம். அவள் தாங்க முடியாமல் ஏதாவது தவறான முடிவுக்குப் போய் விடுவாளோ என்று பயமாக இருந்தது.

எப்படித் தேன் சிட்டுப் போல் பறந்து திரிந்தவளை இப்படிக் கொண்டு வந்து பாடாய்ப் படுத்துகிறோமே என்று வருந்தினான்.

மனதிற்குப் பிடித்தவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, பக்கத்திலேயே இருந்தும், பேச முடியவில்லை. சந்தோசமாக இருக்க முடியவில்லையே.

பெற்ற தாயையும் நோகடிக்க முடியவில்லை. சீக்கிரமே தங்கைக்கு மாப்பிள்ளை பார்த்து முடிவு பண்ணி விட வேண்டும் என்று நினைத்தான்.

உமா சாப்பிடவும் இல்லை. வீட்டில் எதுவும் இல்லை. பேசாமல் ஒரு டம்ளர் தண்ணீரை மட்டும் குடித்து விட்டுப் படுத்துவிட்டாள்.

தீபக்கை மட்டும் சாப்பிட அழைத்தார் தாய். அவனும் சாப்பிடப் போய் உட்கார்ந்தான். மூவருக்குமே தட்டு வைத்தார்.



தீபக் உமாவை அழைத்தான்.

எதுக்கு அவளைக் கூப்பிடுகிறே. சாப்பாடு நமக்கு மட்டுந்தான் இருக்கு. சாப்பிடாமலா வந்திருப்பீங்க. சும்மா நடிக்காதே என்று சாப்பாடு போட்டாள்.

தீபக்கால் சாப்பிட முடியவில்லை. அப்படியே வைத்து விட்டு எழுந்து சென்றுவிட்டான்.

உமாவைத் திரும்பிப் பார்த்தான். தரையில் தலைக்குக் கையை வைத்துக் கொண்டு குறுகிப் படுத்திருந்தாள்.

அவளை அப்படியே அள்ளி அணைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. அம்மாவை நினைத்தால் வெறுப்பாக வந்தது.

இரவு முழுவதும் அவன் தூங்கவில்லை. எப்படி இருந்தவள். பஞ்சு மெத்தையில், விதவிதமான சாப்பாடு, கை தட்டி அழைத்தால், வேலை செய்வதற்கு ஆள். இப்படி இருந்தவள், தன்னால் ஒரு வேலைக்காரி போல் நடத்தப் படுகிறாள். தன்னால் ஏன் என்று தட்டிக் கேட்க முடியவில்லை.

முடியவில்லை என்று இல்லை. அம்மாவின் குணம் தெரிந்ததுதான். கத்தி ரகளை பண்ணி, ஊரைக் கூட்டி விடுவார். தீபக்கிற்கு ரசாபாசங்கள் பிடிக்காது.

காலையில் ஐந்து மணிக்கே உமா எழுந்து விட்டாள்.

தீபக்கும் அப்பொழுதே எழுந்து அவள் அருகில் வந்து உமா என்று அவளை லேசாக அணைக்க முற்பட்டான்.

கோபமும் எரிச்சலுமாக அவன் கையைத் தட்டி விட்டாள். உங்களுக்கு வெட்கமாக இல்லை, இப்படி நடப்பதற்கு.

அவன் அவளைச் சமாதானப் படுத்த வந்தான். ஆனால் அவள் எரிமலையாகக் கொதிக்கிறாள்.

இப்ப எப்படி நடந்துவிட்டேன் என்று, இப்படி அலட்சியமா பேசுறே என்றான் சுள்ளென்று.

அதை நான் என் வாயால் சொல்லணுமா? கட்டின மனைவியிடம், யார் வீட்டுக்கோ போய் அவளுடன் நடப்பது போல் நடந்து கொள்றீங்க. இது உங்களுக்கு அசிங்கமா இருக்கோ இல்லையோ. எனக்கு அவமானமா இருக்கு. தள்ளுங்க. இதைக் கூட உங்க அம்மா பார்த்தால் நான் உங்க கூடப் படுத்து விட்டேன் என்று ஊரைக் கூட்டி விடுவாங்க.

உங்களுக்குத்தான் எதுவுமே தெரியாதாமே. எனக்குத் தான் எல்லாம் தெரிந்து உங்க கூட ஓடி வந்து விட்டேன்.

ஒரு வேளை உங்க அம்மா சொல்வது உண்மையோ என்னமோ. உங்களுக்கு ''எதுவுமே'' என்று அழுத்தம் கொடுத்துத் 'தெரியாதா? இல்லை முடியாதா?' என்று அவள் வாய் மூடும் முன் அவள் கன்னத்தில் தீப்பொறி பறந்தது.

கன்னம் எரிந்த பிறகுதான் அவன் தன்னை அடித்தது புரிந்தது.

உமா என்றான் அழுத்தமாக.

கண்ணில் நீருடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறாயா? உனக்கு நான், என் குடும்பம், அம்மா, தங்கை என்று யாரும் வேண்டாமா?

என் உடம்பு மட்டுந்தான் வேண்டுமா? வா, எடுத்துக் கொள் என்று அவளைப் பிடித்து இழுத்தான்.



அவள் வராமல் காதைப் பொத்திக் கொண்டு அழுதாள். என்னை விடுங்க. நானா வந்து உங்களிடம் பேசினேனா? எதுக்குக் காலையிலே வந்து இப்படி வம்பு பண்றீங்க.

தெரியாமல் எதுக்கு இப்படி நடக்கணும். தைரியமா உங்க மனைவிதானே நான். எதுக்கு தெரியாமல் இப்படி பண்ணுறீங்க. தப்பா நடக்கிறவங்கதான் இப்படித் திருட்டுத் தனம் பண்ணணும்.

உங்களுக்கு இப்படித்தான் பழக்கம் போல என்று கொதித்தாள்.

ஆமாடி. எனக்கு அப்படிப் பழக்கந்தான். நீ எத்தனாவது என்று கூட கணக்கில்லை. தினமும் அங்கு போய் விட்டுத்தான் வருகிறேன். அதனால்தான் உன்னைத் தள்ளி வச்சிருக்கேன் என்று அழுத்தமாகச் சொன்னான்.

தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் உமா.

அவளை ஆழமாகப் பார்த்துவிட்டு அங்கிருந்து அகன்று விட்டான்.

அந்த ஒரு 'டி'யில் கூனிக் குறுகினாள். பெயர் சொல்லிக்கூட அழைக்காமல் செல்லமே, தங்கமே, என் கண்மணி, அம்முக்குட்டி என்று செல்லமாகக் கூப்பிட்டுப் பழகினவளுக்கு இந்த 'டி' போட்டுப் பேசவும் அவன் மீது வெறுப்பாக வந்தது.

குளியலறையில் போய் வெகு நேரம் அழுதாள்.

தீபக் கவனித்துக் கொண்டிருந்தான். அவள் ரொம்ப நேரம் குளியலறையில் இருந்து வெளியே வராததை. உள்ளே அழுது கொண்டிருப்பாள்.

மனது உறுத்தியது அவனுக்கு. அவளை அடித்திருக்கக் கூடாது. ஏன் இப்படி நடந்து கொண்டோம்

தரமாக அம்மா மீது உள்ள கோபம். தன்னால் முடியவில்லையே என்ற ஆதங்கம். எல்லாம் சேர்ந்து அவள் மீது பாய்ந்து விட்டது.

எப்பொழுதுமே நிதானத்தை இழக்காதவன் இப்போது இழந்து விட்டான். நீ ஒரு ஆண்மகனா, என்று கேட்காமல் கேட்கிறாள். என்ன தைரியம் அவளுக்கு. ஒரு வார்த்தை பேசாமல் இருந்தவளை எல்லோரும் சேர்ந்து பேச வைத்து விட்டோம்.

பூப்போன்ற மனசைக் குத்திக் கிழித்து இரத்தம் வடிய வைத்தாகிவிட்டது. வீட்டைவிட்டு வந்தவளைத் தன் அன்பால் குளிப்பாட்ட வேண்டும். பெற்றவர்கள் நினைப்பே இல்லாமல் அவளை வாழ வைக்க வேண்டும் என்று நினைத்தான்.

அது முடியவில்லை. அவன் அறைந்ததும், அப்பா என்றுதானே கத்தினாள். நாம் இப்படிப் பண்ணவும், தன் வீட்டு நினைவு அவளுக்கு வரும். ஏன் அவனை நம்பி வந்தோம் என்று நினைப்பாள்.

நினைப்பாள் என்ன, நினைக்கத் தோன்றும். யாரும் இந்தச் சூழ்நிலையில் இருந்தால்.

ரொம்ப நேரம் கழித்துக் கதவு திறந்தது.

காபி போட்டு எடுத்துக் கொண்டு அவன் அறைக்கு வந்தாள்.

அவன் பேசாமல் படுத்திருந்தான்.

கொஞ்ச நேரம் நின்றாள். பிறகு காபியை டொக்கென்று வைத்து விட்டுப் போய்விட்டாள்.

அவனுக்கு மனது குறுகுறுத்தது. நானாவது காபியை வாங்கியிருக்கணும். பேசாமல் இருக்கவும் அவள் போய் விட்டாள்.



என் மேல் எவ்வளவு கோபம் இருக்க வேண்டும். இதை இப்படியே விட்டால் நல்லதில்லே. வெறுப்பில் எப்படி வாழ்க்கையைத் தொடங்க முடியும்.

கொஞ்ச நேரம் கண்மூடிப் படுத்திருந்தான். அவன் விழிகள் கலங்கின.

கொலுசுச் சத்தம் கேட்டது. உமாதான் அருகில் வந்து நின்றாள். இந்தாங்க காபி, குடிங்க என்றாள் மெதுவாக.

அவனுக்கு இதயத்தைப் பிளந்தது போல் வலித்தது.

நான் அவளைச் சமாதானப் படுத்த முயற்சிக்கவில்லை. ஆனால் அவளோ, காபி குடிக்கவில்லை என்று மறுபடியும் வந்து பேசுகிறாள்.

அவன் உடனே எழுந்து உட்கார்ந்தான்.

குனிந்த தலை நிமிராமல் காபியை நீட்டினாள். காபியோடு அவள் கையைப் பிடித்துத் தன் அருகில் உட்கார வைத்தான்.

அவள் விழிகளில் இருந்து கண்ணீர்த் துளிகள் சிதறி விழுந்தன. அது அவன் கையில் பட்டுத் தெறித்தது.

அவளை அப்படியே அணைத்துக் கொண்டான்.

அவன் தோளில் சாய்ந்து கொண்டு அழுதாள்.

அவள் முகத்தை நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டான். காபியை அவன் எடுத்து அவள் வாயருகே கொண்டு போனான்.

அவள் வேண்டாம், நீங்கள் குடியுங்கள் என்றாள்.

இல்லை, நீ குடி. இராத்திரியும் சாப்பிடவில்லை.

காபியைக் குடிக்க விட்டான்.

குடித்து முடிந்ததும் அவள் எழுந்தாள். எதற்கு அவசரம். கொஞ்ச நேரம் இரு இப்படியே.

உங்களுக்குக் காபி கொண்டு வருகிறேன்.

பரவாயில்லை. சிறிது நேரம் ஆகட்டும் என்றான்.

அவள் கன்னத்தில் அவன் கைவிரல் பதிந்திருந்தது.



# 7

சாரிடா, என்னை மன்னித்து விடு. ஏதோ கோபத்தை உன்னிடம் காட்டி விட்டேன்.

வலிக்குதாடா?

அவள் எதுவும் பேசவில்லை.

அவன் என்னதான் சமாதானப் படுத்தினாலும், அவள் மனது சமாதானம் அடையவில்லை. அது அவனுக்குத் தெரிந்தது.

பெற்றவர்கள் இது மாதிரி சில பேர் இப்படி நடந்து கொள்கிறார்கள். எங்கே தன் மகன் தன்னை விட்டுப் போய் விடுவானோ, மனைவி பேச்சைக் கேட்டுக் கொண்டு.

கல்யாணம் மகனுக்கு ஆனாலே, மனதில் ஒரு பயம் வந்து விடுகிறது. அதுவும் ஒரு மகன் வைத்திருப்பவர்களோ கேட்கவே வேண்டாம்.

கடைசிவரை தன் பேச்சைத்தான் கேட்க வேண்டும். மனைவியைப் பேசணும், சண்டை போடணும், என் அம்மா போல் உண்டா என்று மனைவியைத் திட்டணும் என்று நினைக்கிறார்கள்.

இது தப்பு என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. எவ்வளவு நாளைக்கு இப்படிப் பிடித்து வைத்திருக்க முடியும். அதுவே தன் மீது வெறுப்பு வந்து விடும் என்று தெரிவதில்லை.

கணவன் மனைவியைப் பிரித்து வைத்திருப்பது பாவமில்லையா? தன் மகள் மட்டும் கணவன் கூட சந்தோசமாக வாழ வேண்டும். அதைக் கண் குளிரப் பார்க்க வேண்டும். பேரப் பிள்ளைகள் வேண்டும்.

ஆனால் மருமகளோ, கல்யாணம் ஆகி வந்தவுடனேயே, ஏதோ பத்துப் பதினைந்து வருடம் ஆன மாதிரி கணவனிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர் பார்ப்பது.

அவளும் எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் புது இடத்திற்கு வருகிறாள். இப்பொழுதுதான் கணவனின் முழு அன்பும் அவளுக்குத் தேவை. திடீர் என்று அடுத்த வீட்டுக்கு வந்தவுடன் அந்த வீட்டுச் சூழ்நிலை புரியாது. உடனேயே நம் வீட்டில் எப்படி நடப்போமோ அது போல் நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது.

இல்லையென்றால் அவளை உடனே குறை சொல்வது. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமலேயே குற்றம் சொல்லி, வெறுப்பை வளர்த்துக் கொள்வது. இதில் எங்கே மற்றவர்களைப் புரிந்து கொள்வது.

மகனிடம் உன் மனைவி என்னை மதிப்பதில்லை என்று குறை கூறி, மகனிடமும் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வது.

அவள் இந்த வீட்டிற்கு வந்ததுமே, தன்னுடைய கருத்துக்களைத் திணிக்கக் கூடாது. கொஞ்சம் கொஞ்ச மாகப் புரிய வைக்கணும்.

புரியவில்லை யென்றால் எடுத்துச் சொல்லணும்.

அவள் பழக்கத்திலிருந்து தன்னை மாற்றிக் கொள்ள அவகாசம் கொடுக்க வேண்டும்.

முதலில் கணவனைப் புரிந்து கொண்டால்தான் வீட்டில் உள்ளவர்களைப் புரிந்து கொள்ள முடியும்.

அதை விட்டுட்டுப் பெரியவர் முதல் சிறியவர்வரை அவர்கள் என்ன நினைக்கிறார்களோ அதைச் செய்ய வேண்டும் என்று நிபந்தனை போடுவது.

முதலில், அவளின் எண்ணங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உனக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்று அதன் படி வீட்டிலுள்ளவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

பிறகு அவளே புரிந்து கொள்வாள். தனக்காக எல்லோரும் விட்டுக் கொடுக்கிறாங்க. நாமும் அது போலச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும்.

மருமகள் என்று தானாகப் பிறப்பதில்லை.

யாரும் திட்டம் போட்டுத் தன் புகுந்த வீட்டில் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்வதில்லை.

ஒரு குடும்பத்தின் சந்தர்ப்ப சூழ்நிலைதான் ஒரு பெண்ணை மாற்றுவது. இவர்கள் இப்படி நடக்கிறார்களே, நாமும் இனிமேல் இப்படித்தான் நடக்க வேண்டும் என்று செயல்படுவது.

ஒரு பெண் கெட்டவளாகவே இருந்தாலும், வீட்டுச் சூழ்நிலை அவளை நல்லவளாக மாற்ற முடியும். நல்லவளைக் கெட்டவளாக மாற்ற முடியும். எதுவும் நம் கையில் தான் இருக்கிறது.

ஒரு சில பேர் எந்தச் சூழ்நிலையிலும் தன்னை மாற்றிக் கொள்ளாமல் மனச்சாட்சிக்குப் பயந்து உண்மையாகவே இருப்பார்கள்.

அது போலத் தான் உமாவும் இருந்தாள்.

அருமையான பெண். அவளை நல்ல முறையில் நடத்தி அவள் நல்ல குணங்களைப் புரிந்து கொள்ளவில்லை அவள் மாமியார்.

இந்தப் பொறுமை எவ்வளவு நாளைக்கு. இதுவும் ஒரு நாளைக்கு வெடிக்கும். அப்போது விளைவுகள் விபரீதமாக இருக்கும்.

''என்னடி உட்கார்ந்துக்கிட்டே தூங்குறே?'' என்று ரோஸி உமாவைத் தட்டி எழுப்பினாள்.

''ஏன்டி, உன் அவர் ஞாபகம் வந்து விட்டதா? எப்படியடி அவரை விட்டு இருக்கிறே?'' என்றாள்.

''ச்சு...'' என்று ஒரு பெருமூச்சு விட்டாள்.

''உமா, நான் உன்னிடம் ஒன்று சொல்லணும்,'' என்று இழுத்தாள்.

''என்னடி பீடிகை எல்லாம் பலமா இருக்குது.''

''நான் ஒருத்தரை விரும்புறேன்,'' என்றாள் கன்னம் சிவக்க.

''அய்யோ!'' என்றாள் - அவளையும் அறியாமல்.

"என்னடி! நான் நல்ல விசயத்தைப் பற்றிப் பேசுறேன் நீ அபசகுனமாக அய்யோ என்கிறே."

"நான்... வேற நினைப்பில் ஏதோ சொல்லி விட்டேன். சரிடி. என்ன சொன்னாய்?"

"அது கெட்டுச்சு போ... நான் ஒருத்தரை விரும்புறேன் என்றேன்."

"அவர் என்ன வேலை செய்யறார்?"

"அவர் பெரிய போலீஸ் ஆபிசர்."

"பெரிய போலீஸ் ஆபிசர்னா ஏழு அடி இருப்பாரா?" என்றாள்.

"ஏன்டி, நான் பேசுவது உனக்குக் கேலியா இருக்கா? நான் சீரியசாகப் பேசுறேன். நீ என்னைக் கேலி பண்றே."

"இல்லை... சொல்லு. அவர் உன்னை விரும்புறாரா?"

"ஆமாம். அவரும் என்னை விரும்புறார். வீட்டில் இன்னும் சொல்லவில்லை."

"அவரை எங்கே சந்திச்சே?" என்றாள்.

"அது ஒரு விசயமாக என்னைச் சந்திச்சார். அதில் இருந்து பழக்கம். அதுவே இப்ப காதலா மாறிவிட்டது."

"பார்த்துடி, உன்னை ஏமாத்தி விடப் போறான். எதுக்கும் நீ கவனமாக இருக்கணும்."

"எத்தனை பேர் கண்டதும் காதல் என்று அவர்கள் வாழ்க்கையையே கெடுத்துக் கொள்றாங்க."

"முதலில் அப்பா, அம்மாவிடம் சொல்லு. அவர்கள் விசாரிக்கட்டும். பிறகு கல்யாணம் பண்ணிக் கொள்."

"ஆனால் பெற்றவர்கள் பேச்சை மட்டும் தட்டி விடாதே."

"அவர்கள் உனக்கு நல்லதுதான் செய்வார்கள். காதல் என்ற பேரில் நீயாக உன் வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்காதே. எத்தனை பேர் காதலிக்கும் போது நல்லவனாகக் காட்டிக், கல்யாணத்திற்குப் பிறகு அம்மாதான் பெரிசு என்று கட்டின மனைவியை விரட்டி விடுறாங்க, தெரியுமா?"

அதைச் சொல்லும் போது குரல் தழுதழுத்தது. ரோஸி அதைக் கவனிக்கவில்லை. அவள் அவன் நினைவில் இருந்ததால்.

"சரிடி, வீட்டுக்குப் போகலாம்," என்று எழுந்து சென்றனர்.

உமாவை ஹாஸ்டெலில் விட்டுட்டு, ரோஸி அவள் வீட்டிற்குச் சென்றாள்.

உமா மறுபடியும் கூண்டுக்குள் அடைந்தாள்.

ரோஸி சொன்னதை மனம் அசை போட்டது. காதல்! நினைக்கும் போதே போதை தரும். சாதாரண மனிதனையும் கவிஞனாக்கும். நெருப்புக் கூட குளிரும். தென்றல் சுடும். இப்படி எண்ணி... எண்ணியே மனிதனை நிலை தடுமாற வைக்கும்.

கடவுளே! ரோஸிக்கு நல்ல வாழ்வை அமைத்துக் கொடு, என் வாழ்வு போல் வீணாக்கி விடாதே என்று நினைக்கும் போதே கண்களில் கண்ணீர் வழிந்தது.

அவளுக்குச் சிறு வயதில் இருந்து அழுகை என்றால் என்னவென்று தெரியாது. அவள் கண்ணில் ஒரு பொட்டுக் கண்ணீர் வந்ததில்லை.

இப்பொழுது இம்மெனும் முன் கண்களில் கண்ணீர் வந்து விடுகிறது. அவளின் மென்மையான மனது தாங்க முடிவதில்லை.

. அவள் தனியாக எங்கும் போனதில்லை. இப்பொழு அவள் வாழ்க்கையே தனிமையாகி விட்டது. கொஞ்ச தைரியம் வந்த மாதிரி இருக்குது.

பெற்றவர்கள் பார்த்துச் செய்த திருமணம் தோல்வி யுற்றால், அவர்கள் பிள்ளைகளை வைத்துத் தாங்குவார்கள் அது அவர்கள் கடமையுங்கூட.

ஆனால் பிள்ளைகளால் தேர்ந்தெடுத்த வாழ்க்கை தோல்வியுற்றால் என்ன செய்வது? பெற்றவர்களிட போக முடியாது. போனாலும் நீயாகத் தேடிக்கொண்ட வாழ்க்கைதானே. நீயே அனுபவி என்பார்கள்.



# 8

பெற்றவர்களிடம் போயிருந்தால் தன்னை ஏற்றுக் கொண்டிருப்பாங்களோ? நாம் தப்பு செய்து விட்டோம். போயிருந்தால் அப்பா கட்டாயம் தன்னை ஏற்றிருப்பார்

அவளுக்குத்தான் மனம் இல்லை. எந்த முகத்தை வைத்துக் கொண்டு போவது. அவ்வளவு சொல்லியும் எடுத்தெறிந்து பேசிவிட்டு, வீட்டை விட்டு வெளியே வந்தோமே. அவர்கள் முகத்தில் எப்படி முழிப்பது?

நான் சொன்னது நடந்து விட்டது அல்லவா? வெளியே சொல்லாவிட்டாலும் மனதில் தோன்றத்தான் செய்யும்.

இருந்தாலும் கட்டிய கணவனைக் குறை சொல்ல முடியுமா? அது எவ்வளவு அசிங்கம்.

என்ன அசிங்கம் வேண்டிக் கிடக்குது. அவன் அந்த மாதிரி நினைத்தானா?

ஒரு நாள் மாமியார் கோயிலுக்குப் போயிருந்தார். மஞ்சு காலேஜில் இருந்து இன்னும் வரவில்லை.

காலிங் பெல் அடித்தது. போய்க் கதவைத் திறந்தாள். தீபக் நின்றிருந்தான். என்ன இந்நேரத்திற்கு வந்திருக்கான் என்று மனதில் நினைத்துக் கொண்டே உள்ளே சென்றாள்.

உமா, எங்கே ஒருவரையும் காணோம்.

அத்தை கோயிலுக்குப் போயிருக்காங்க. மஞ்சு காலேஜ்ல இருந்து வரவில்லை.

காபி ஒரு டம்ளர் குடு உமா, என்றான்.

அவள் காபி போட்டு எடுத்துப் போனாள்.

கட்டிலில் கைலியுடன் படுத்து இருந்தான்.

உமா என்று ஆசையாக வந்தான். காபியைக் கொடுத்து விட்டு ஒதுங்கி நின்றாள்.

பக்கத்தில் வா உமா என்று கட்டியணைத்தான். உமாவுக்கு இது பிடிக்கவில்லை. விடுங்க. என்ன இது, உங்க அம்மா வந்து விடுவாங்க.

அவன் எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவள் மறுப்பையும் சட்டை செய்யவில்லை.

அவள் எவ்வளவோ தடுத்தும் அவன் கேட்கவில்லை.

அவளுக்கு இந்த அணுகு முறை பிடிக்கவில்லை. எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு கணவன் கையில். அது அவளுக்கு ஆனந்தத்தைத் தரவில்லை. மாறாக வெறுப்பைத் தந்தது.

என்ன உமா, பேச மாட்டேங்கிறே. உனக்குச் சந்தோசம் தானே என்றான். அவள் எனக்குச் சந்தோசம் இல்லை. ஒரு கணவன் கூட இருந்த மாதிரி தெரியவில்லை எனக்கு என்றாள்.

அவன் ஒரு கணம் கண்களை மூடித் திறந்தான். கிடைக்கும் சந்தர்ப்பத்திலாவது அவளைச் சந்தோசப் படுத்த வேண்டும் என்ற எண்ணம்தானே தவிர அவனால் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று அவன் இப்படி நடக்கவில்லை.

அவள் இப்படிப்பட்ட உறவை வெறுக்கிறாள் என்று தெரிந்து கொண்டான்.

அவ்வப்போது இது அடிக்கடி தொடர்ந்தது. அவளால் முழுமையாக எதிர்ப்பைக் காட்ட முடியவில்லை. யாரும் இல்லாத நேரத்தில் அன்பாகத்தான் இருந்தான்.

அவர்கள் திருமண நாள் வந்தது. அது அவளுக்கு மறந்தே போய் விட்டது.

தீபக் உமாவுக்கு ஒரு புடவை எடுத்தான். அம்மா, தங்கைக்கும் எடுத்து வந்தான்.

அம்மா, தங்கையிடம் துணியைக் கொடுத்து விட்டு, உமாவையும் கூப்பிட்டான். அவள் வந்ததும் அவளிடம் புடவையைக் கொடுத்தான்.

அவன் அம்மா உடனே, இப்ப எதுக்கு தேவையில்லாமே புடவை எடுத்து வந்தே என்றார்.

அம்மா, எங்களுக்கு நாளைக்குத் திருமண நாள் அதாம்மா என்றான்.

ஆமாம், அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து முறைப்படி நடந்த கல்யாணம் பார். இதுல கல்யாண நாள் ஒன்று தான் குறைச்சல்.



புடவை எடுத்ததைச் சேர்த்து வைத்தால், நாளைக்கு மஞ்சுக்கு ஆகும். கல்யாணம்னா, உடனே எடுக்க முடியுமா? கொஞ்சம் கொஞ்சமாகத்தான் சேர்க்க வேண்டும்.

இல்லை யென்றால் உன் பெண்டாட்டி மாதிரி, கட்டின துணியோட போக முடியுமா? நீ இப்படிச் செலவு செய்தால் எப்படி நீ இவளைக் கரையேத்தப் போறே என்று உமா கையில் இருந்த புடவையைப் பிடுங்கிக் கொண்டு போனார்.

தீபக்குக்கே என்ன செய்வதென்று தெரியாமல் நின்றான்.

உமா விருட்டென்று உள்ளே போய்விட்டாள்.

மறுநாள் அவள் மாமியார் கறியை எடுத்து வந்து சமைக்கச் சொன்னாள். அவளுக்கு அதைப் பார்த்ததுமே குமட்டியது.

முடியாது என்று சொல்ல முடியாது.

எப்படிக் குழம்பு வைப்பது என்று தெரியவில்லை. கேட்கவும் பயமாக இருந்தது. கேட்டால் அவ்வளவுதான். பெரிய புராணத்தையே இழுத்து விடுவார் என்று பேசாமல் இருந்தாள்.

கறியைத் தொடவே அருவருப்பாக இருந்தது. அதைக் கை வைக்காமல் ஸ்டீல் ஸ்பூனால் கழுவினாள். கழுவி ஏதோ வைத்து விட்டாள்.

மாமியார் சாப்பிட்டுப் பார்த்து விட்டு அப்படியே வைத்து விட்டார்.

மகன் வந்து சாப்பிட உட்காரவும், உன் பெண்டாட்டி வைத்திருக்கும் குழம்பைப் பார். என் மகள் ஒரு வாய் கூடச் சாப்பிடவில்லை என்று அவன் முன்னாடி போட்டுடைத்தார்.

உமா அப்படியே திகைத்துப் போய்விட்டாள்.

அம்மா! என்ன இது. ஏன் இப்படி செய்தீங்க என்றான் கோபமாக.

குழம்பாடா... இது. வாயில் வைக்க முடியவில்லை.

அதற்காக இப்படிப் போட்டு உடைப்பதா? பிடிக்க வில்லை யென்றால் பேசாமல் இருப்பதுதானே. ஏன் இப்படி தினம்... தினம் பிரச்னை பண்றீங்க என்று சீறினான்.

உன் பொண்டாட்டியை அடக்க முடியாமல் என்னிடம் பாயுறே. கறியை ஸ்பூனால் கழுவுறா. எங்கு நடக்கும் இந்தக் கூத்து. மருமகள் வீட்டுக்கு வந்தும் நான் நாயா வேலை பார்க்க வேண்டியிருக்குது என்று அழுதார்.

அவன் கோபம் உமா மீது திரும்பியது. மகாராணிக்கு ஒழுங்காகக் குழம்பு கூட வைக்கத் தெரியாதாக்கும். ஊசியால் குத்தினான்.

எனக்குக் கறியே பிடிக்காதுங்க. நான் பார்த்தது கூட இல்லை. எனக்குத் தொட்டாலே வாந்தி வருது. நான் என்ன செய்யட்டும்?

இதையாவது அவங்க செய்யலாமே. எனக்குப் பிடிக் காதததை எடுத்து வந்து கொடுத்து விட்டு, எப்ப பார், என்னையே குறை சொல்றது.

பார்த்தியாடா, எப்படி பேசுறா என்று. இந்த திமிர் இருக்கக் கூடாது.

ஆமா, நீங்க வாங்கிப் போட்ட திமிர்தான். அதான் பேசுறேன். வாய் வார்த்தை முற்றிப் பெரிய பிரச்னை யாகி விட்டது.



உமா பின் பக்கம் போய்க் கிணற்றடியில் உட்கார்ந்து கொண்டாள்.

தீபக் எழுந்து போய்விட்டான்.

ரொம்ப நேரம் கழித்து அவன் அம்மா வந்து டேய் தீபக், அவளைக் காணோம்டா. எங்கே இன்னோரத்திற்குப் போனாளோ தெரியவில்லை.

அவன் அலறி அடித்துக் கொண்டு எழுந்தான். வீட் டில் எல்லா இடத்திலும் பார்த்தான். அவனுக்குத் தேகமே பதறியது.

பின்புறக் கதவைத் திறந்து கொண்டு போய்ப் பார்த் தான். துவைக்கும் கல்லின் மேல் உட்கார்ந்திருந்தாள்.

அவசரமாகப் பக்கத்தில் போய் உமா என்றான்.

அவள் திரும்பிப் பார்க்க வில்லை.

எவ்வளவு திமிர் பார்டா, நீ கூப்பிட்டும் திரும்பிப் பார்க்கக் கூட இல்லை.

அம்மா... நீங்கள் தயவு செய்து உள்ளே போங்க. என்னை மனுசனா இருக்க விடுங்க. மிருகமா மாத்தா தீங்க. ப்ளீஸ்.

கழுத்தை நொடித்துக் கொண்டு உள்ளே போனார்.

அவர் போனதும் உமாவிடம் திரும்பி, உமா! ஏன் பனியில் இப்படி உட்கார்ந்திருக்கே? எழுந்து வா, என்று கெஞ்சினான்.

அவள் அவனை அலட்சியமாகப் பார்த்து விட்டு, பின் திரும்பிக் கொண்டாள்.

உமாவுக்கு உள்ளம் கொதித்தது. உங்களை மணந்த தற்கு எனக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்.

இந்த மாதிரி எல்லாம், கதைகளிலும், சினிமாக்களிலும் தான் பார்த்திருக்கேன். அது எனக்கே என் வாழ்க்கையில் நடக்கும் என்று நினைக்கவில்லை.

சீக்கிரம் போங்கள். இந்த இடத்தில் என் கூடப் படுத்து விடுவீங்க என்று உங்க அம்மா எட்டிப் பார்க்கப் போறாங்க என்று சீறினாள்.



# 9

உமா என்றான் அதட்டலாக.

என்னை வந்து அதட்டுங்க. இதை உங்க அம்மாவிடம் காட்ட வேண்டியதுதானே.

எழுந்து உள்ளே வா என்றான் அழுத்தமாக.

என்ன உத்தரவா, இதை என்கிட்டே வைச்சுக்காதீங்க.

உன்னிடம் வைத்துக் கொள்ளாமல் வேறு யாரிடம் வைத்துக் கொள்வது என்றான் கேலியாக.

அவன் கேலியைப் புரிந்து கொண்டு, நான் இருந்தால் என்ன, செத்தால் என்ன, நான் செத்தால் உங்களுக்கும் நிம்மதி, உங்க அம்மாவுக்கும் நிம்மதி.

எதற்கு இந்தப் பேச்செல்லாம் பேசுறே?

நான் வர முடியாது. போய் உங்க அம்மாவைச் சமாதானப் படுத்துங்க.

போங்க. நான் செஞ்ச தப்புக்குத் தண்டனை அனுபவிக்கிறேன். நீங்கள் எதற்காக இங்கு நிக்கறீங்க? என்னிடம்



இனிமே பேசாதீங்க. எனக்குப் பத்திக்கிட்டு வருது என்றாள்.

ஒரு வாரம் அவனுடன் பேசவில்லை. அவன் முகத்தை ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை.

அவன் வலிய வந்து பேசினாக்கூட முகத்தைப் பார்த்துப் பதில் சொல்லாமல் ஏதோ முணுமுணுத்து விட்டுச் சென்றாள்.

இதுவே தொடரவும் அவனுக்குக் கோபம் வந்தது.

உமா! என்ன இது. இப்படி நடந்துக்கிறே. நான் என்ன பண்ண முடியும்? அம்மாவையும் அனுசரித்துத்தான் போக வேண்டும்.

நீ வளர்ந்த விதம் வேறு. நான் வளர்ந்த விதம் வேறு. அப்பாவுக்குப் பின் அம்மாதான் எங்களுக்கெல்லாம். அம்மாவை மீறி நடக்க முடியாது. மீறி நடந்தால் அது அவங்களுக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கும்.

முடிந்தவரை அவங்களை நோகடிக்காமல் இருக்கணும் என்றுதான் நினைக்கிறேன்.

இதை நீயும் புரிந்து நடந்துக்கணும்.

உங்க அம்மாவை நோகடிங்க, பேச்சைக் கேட்காதீங்க என்று நான் சொன்னேனா?

இல்லை. அது எனக்குத் தெரியும். அவங்களுக்குத் தெரியாதே?

உங்களுக்குத் தெரிந்து என்ன பயன்? என்னைத் தானே திட்டுறீங்க. உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதுக்கு இதுதான் எனக்குக் கொடுத்திருக்கீங்க.

அதுதான் அவங்களே உங்களைக் கவனிச்சுக்கிறாங்களே, பின்னே நான் எதற்கு. எதுக்குப் பேசு என்கிறீங்க?

சாப்பாடு அவங்க போடுறாங்க. எது தேவை என்றாலும் அவங்க வந்து எடுத்துக் கொடுக்குறாங்க. மத்தப் படி நான் எதுக்கு, நான் சாப்பிடும் சாப்பாட்டுக்குத்தான் வேலைக்காரி மாதிரி வேலை செய்றேன்.

உங்க அம்மாவுக்கு வேலைக்கு ஆள் வைத்தால் சம்பளம் கொடுக்கணும் என்றுதானே என்னை ஏமாற்றிக் கல்யாணம் பண்ணிக் கொண்டீங்க. எவ்வளவு வேலை வாங்குறாங்க உங்க அம்மா. ஏம்மா இப்படிச் செய்றீங்க என்று கேட்கிறீங்களா? வந்து பெரிசா பேச வந்திட்டீங்க.

சண்டை போட்டாத்தான் இப்படி வந்து என்கிட்ட பேசறீங்க. பிறகு எதற்குப் பேசறீங்க? எனக்கு உங்களை ஏன்தான் கல்யாணம் பண்ணிக் கொண்டோம் என்று இருக்குது.

அவனுக்கும் கோபம் வந்தது. இரண்டு பேரும் என்ன தான் நினைத்துக் கொண்டிருக்கீங்க. அவங்க அப்படிப் பேசறாங்க. உன்கிட்டே வந்தா இப்படிப் பேசறே. கொஞ்ச நாள் பொறுத்துக்க. என் தங்கைக்குக் கல்யாணம் ஆகும்வரை என்றால் நீ ரொம்ப பேசறே என்று சீறினான்.

அவளுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

சாப்பிடு உமா என்றான்.

சுவர்ப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

அவளுக்குக் கண்ணீர் வழிந்தது.

அப்பாவாக இருந்தால் இப்படி நடக்குமா?

அவனின் ஒவ்வொரு செய்கையும், அவளைப் பிறந்த வீட்டை நினைத்து ஏங்க வைத்தது.



ஒவ்வொரு கணவனும், மனைவியிடம் அன்பையும், பாசத்தையும் கொட்டினால்தான் அந்த அன்பில், பிறந்த வீட்டை ஒவ்வொரு கணமும் நினைக்கத் தோன்றாது.

அது கிடைக்கவில்லை என்றால்தான் ஒவ்வொரு நிமிடமும் நாம் அப்படி இருந்தோமே, இப்படி இருந் தோமே, என்ன மாதிரி நம் வீட்டில் இருந்தோம் என்று நினைக்கத் தோன்றும்.

பிறந்த வீட்டைச் சாகும்வரை எந்தப் பெண்ணாலும் மறக்க முடியாது.

இந்த அன்பில், அவர்களைச் சிறிது மறக்கத் தோணும்.

உமாவுக்கு அந்த நினைப்பு அதிகம் ஆனதே தவிர, குறையவில்லை. அவனும் அந்த ஏக்கத்தைப் போக்க முயற்சி செய்யவில்லை.

உமா உள்ளுக்குள்ளேயே உருகினாள். ரொம்பவும் மெலிந்து போய் விட்டாள். நிறம் கறுத்து, கை எல்லாம் சொரசொரத்து, காலில் பித்த வெடிப்பு, சேற்றுப்புண் என்று ஆளே மாறி விட்டாள்.

தீபக் தங்கைக்குத் தீவிரமாக மாப்பிள்ளை பார்த்தான்.

தீபக் வீட்டின் உறவில் ஒரு கல்யாணம். அதற்கு நான் வர முடியாது அம்மா. நீங்களும், தங்கையும் போயிட்டு வாங்க என்றான்.

அவன் அம்மாவிற்கு மனதிற்குள் இவர்களைத் தனியே விட்டுப் போகிறோமே என்று இருந்தது.

இருந்தாலும் அவன் சொன்னது சொன்னதுதான். லீவு கிடைக்கவில்லை என்கிறான். இரண்டு நாள்தானே. முக்கியமான கல்யாணம் வேறு.

கல்யாணத்திற்குச் சென்றால் அவர்களிடம் மாப்பிள்ளை பார்க்கச் சொல்லிவிட்டு வரலாம் என்று நினைத்தாள்.

பகல் முழுவதும் ஆபீஸ் சென்று விடுவான். இரவில் ... என்று அவர் சிந்தித்தார்.

தீபக் உடனே முடிந்தால் கல்யாணத்திற்குப் போங்கள், இல்லையென்றால் விடுங்கள் என்றான்.

இன்னும் தயங்கினால் போக வேண்டாம் என்று சொல்லிவிடுவான், என்று சரி, போய்விட்டு வருகிறோம் என்று கிளம்பினர்.

கிளம்பிச் செல்லும்போது பூடகமாக அவனிடம் அவன் அம்மா, உங்க கல்யாணம்தான், நாள் நட்சத்திரம் பார்க்காமல் நடந்து விட்டது. மற்ற சடங்கு எல்லாம் நல்ல நாள் பார்த்து முறைப்படி நடக்கணும் என்று மறைமுகமாகச் சொல்லிவிட்டுப் போனார்.

அவர்களை ட்ரெயினில் ஏற்றிவிட்டு, ஒரு பந்து மல்லிகைப் பூவோடு வீட்டுக்கு வந்தான். இன்னும் இவளைச் சமாதானப் படுத்த வேண்டும்.

வீட்டுக்கு வந்ததுமே நேரே உமாவிடம் வந்தான்.

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

உமா பிளீஸ், தயவு பண்ணி கிடைக்கும் தனிமையை வீணாக்காதே. நான் ஆபீஸ் லீவு போட்டுவிட்டு வந்திருக்கேன்.

நீங்க லீவு போட்டா என்ன, போடவில்லை என்றால் எனக்கென்ன, என்றாள் அலட்சியமாக.

நாம் வெளியில் எங்காவது போகலாம். இல்லை, வீட்டிலேயே இருக்காலாமா? என்றான்.



எனக்கு இந்த வீட்டை விட்டு, உங்களை விட்டு நிரந்தரமாகத் தொலைய வேண்டும், அதுதான் எனக்கு நிம்மதி.

அவன் அமைதியாக ஆழ்ந்த குரலில், நீ இன்று சமைக்க வேண்டாம். நாம் வெளியில் போய்ச் சாப்பிடுவோம்.

நீ சீக்கிரம் கிளம்பு, வெளியே போகலாம்.

அவள் அப்படியும் பிடிவாதமாக இருந்தாள்.

எதுக்கு உங்க அம்மா இல்லாத நேரத்தில் இப்படி நடந்துக்கிறீங்க. அவங்களுக்கு வந்த பிறகு தெரிந்தால் என்ன ஆகும்? நீங்கள் பாட்டுக்கு ஆபீஸ் போய் விடுவீங்க. நான்தானே உங்க அம்மாகிட்டே திட்டு வாங்கணும்.

இப்ப எதுக்கு, அவங்களைப் பற்றிப் பேசுறே?

எனக்கு இது மாதிரி நடந்துக்கிறது பிடிக்கவில்லை. எனக்கு என்னமோ வேற யார் கூடவோ தப்பு பண்ற மாதிரி இருக்குது.

உங்களுக்குத் தைரியமிருந்தா, உங்க அம்மா முன்னாடி இப்படி இருக்க வேண்டியதுதானே.

அவனுக்குக் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்தன. கை பரபரவென இருந்தது.

இதுக்கு மேலே பேசினே... தொலைத்து விடுவேன், என்றான் அழுத்தமாக.

அந்தக் குரலில் அவள் உடம்பு நடுங்கியது

அதைப் பார்த்த அவன், அவளைச் சட்டென இழுத்து அணைத்தான்.

அவள் அப்படியே அவன் மார்பில் சாய்ந்து அழுதாள்.

அவன் ஆறுதலாக அவள் தலையை வருடினான்.

போதும்டா. போய் முகத்தைக் கழுவிவிட்டு வா என்றான்.



## 10

அன்று முழுவதும் வெளியில் சுற்றினார்கள். மாலை சினிமாவுக்குச் சென்றனர். ஹோட்டலில் சாப்பாட்டை முடித்துக் கொண்டு இரவு வீடு திரும்பினர்.

விடிந்தும் ரொம்ப நேரம் ஆகியும் எழுந்திருக்கவில்லை. அவன் அவளை விடவில்லை.

ஹோட்டலுக்கு போன் பண்ணி டிபன், சாப்பாடு டோர் டெலிவரி பண்ணச் சொன்னான்.

அவளை ஒரு வேலை செய்ய விடவில்லை.

அவன் அம்மா வர இன்னும் இரண்டு நாள் ஆனது.

சொர்க்கத்தையே அவள் கண்முன் கொண்டு வந்தான். விதவிதமாகப் புடவை, நகை எல்லாம் வாங்கிக் கொடுத்தான்.

அவன் அம்மா வந்து விட்டார்.

உமாவின் முகத்தில் இருந்த பூரிப்பு அவரைச் சந்தேகப் பட வைத்தது.

பெங்களூர். அன்று எம்.டி கூப்பிட்டு அனைவரிடமும் நான் மாற்றலாகிப் போகிறேன். உங்களுக்குச் சென்னை



யில் இருந்து புது எம்.டி வந்து விடுவார். எனக்கு நீங்கள் உதவி செய்தது போல, எல்லோரும் அவரிடமும் நடந்து கொள்ள வேண்டும்.

எல்லோருக்கும் ஒரு மாதிரி ஆகிவிட்டது. இந்த எம்.டி வயதானவர். எல்லோரையும் தட்டிக் கொடுத்து, புன் சிரிப்பு மாறாமல், ஆனால் தடங்கல் இல்லாமல், அத்தனையும் வேலை வாங்கி விடுவார்.

உமாவிடம் அனுசரணையாக இருப்பார். சின்னச் சின்ன விசாரிப்புகள். அதற்கு மேல் மூக்கை நுழைக்க மாட்டார்.

உமாவுக்குத்தான் வருத்தமாக இருந்தது.

மற்றவர்கள் கூட இந்தக் கிழம் இருந்து கொண்டு உயிரை வாங்குது என்று முணுமுணுப்பார்கள்.

கோபி உமாவிடம் ரொம்ப நெருங்கிப் பழக ஆசைப் பட்டான்.

உமா ஒதுங்கியே இருந்தாள். பெண்களிடம் கூட

அவர்களுக்கும் உமாவைக் கண்டால் பொறாமை.

அழகு என்ற திமிர். அதனால்தான் தங்களிடம் பேசாமல் ஒதுங்கியே இருக்கா என்றனர்.

இவளைப் பார்த்தா இல்லாத வீட்டுப் பெண் போல் இல்லை. முகத்தைப் பார்த்தாலே ராயல் லுக் தெரியுது. இவள் ஏன் வேலைக்கு வர வேண்டும். இவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா? என்று அவர்களுக்குள்ளே பேசிக் கொண்டனர்.

அன்று உமாவிடம் கோபி வந்து நின்றான். ஏதோ வேலையாகக் குனிந்திருந்த உமா பக்கத்தில் நிழலாடவும் நிமிர்ந்தாள்.

கோபி நிற்பதைப் பார்த்துவிட்டு, ''என்ன சார், என்ன வேண்டும்?'' என்றாள் சிரித்த முகமாக.

கோபி ஒரு கணம் தடுமாறி விட்டான் அந்த முகத்தைப் பார்த்து.

''என்ன சார், சொல்லுங்க,'' என்றாள் மறுபடியும்.

''உமா, இன்று வெளியில் போகலாமா? ஏதாவது ஹோட்டல்...'' என்று இழுத்தான்.

அவளுக்கு அதிர்ச்சியாகப் போய்விட்டது. என்ன திடீர்னு இப்படிக் கூப்பிடுகிறான். இன்றுவரை மரியாதையாகத் தானே நடந்து கொண்டான்.

நாம் எங்காவது தவறு செய்தோமா? இந்த மாதிரி கூப்பிடும் அளவிற்கு அவனிடம் அதிகமாக வைத்துக் கொண்டோமா?

உலகிலேயே அதிவேகமாகச் செயல்படுவது சிந்தனை தான்.

ஒரு வினாடிக்குள் அவள் என்னென்னமோ நினைத்துக் கலங்கி விட்டாள்.

கோபி அவள் முகமாற்றத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான். இதில் இவ்வளவு யோசிப்பதற்கு என்ன இருக்கு? இவள் ஏன் இப்படிப் பயப்படுகிறாள்?

தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டாளோ? தான் நினைத்த மாதிரியே உமா இருப்பதை அவன் முதன் முதலில் பார்த்த போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

கற்பனையில் உதித்த பெண். நேரில் பார்க்கும் போது 'இது கனவா? இல்லை நனவா?' என்று தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டான்.



அவளிடம் பிரண்ட்ஷிப் வைத்துக் கொள்ள ஆசைப் பட்டான். அவள் ஏன் இங்கு தனியாக வந்திருக்கா? சென்னையில் இல்லாத வேலையா?

ஹாஸ்டலில் ஏன் தங்கியிருக்கா? இவளுக்குப் பெற்றவர்கள் இருக்காங்களா? இல்லையா? என்று தெரிந்து கொள்ள முடியும். எதுவுமே பேசாதவளிடம் மனதைப் பூட்டி வைத்திருப்பவளிடம் எப்படி நெருங்குவது?

அவளிடம் மெதுவாகப் பழகி, அவளைப் பற்றி முழு விவரமும் தெரிந்து கொண்டு, தன்னைப் பற்றியும் தெரியப் படுத்தி, பின் மெதுவாகத் தன் விருப்பத்தைச் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தான்.

ஆனால் அவள் பேசவே பயந்தாள். அளந்து... அளந்து வார்த்தையை வெளியிட்டாள். எதுவும் கேட்டால் அதற்குச் சின்னப் புன்னகை ஒன்றையே பதிலாகத் தந்தாள்.

அப்படியிருந்தாலும், அவள் முகத்தில் ஏதோ ஒரு சோகமா? இல்லை, கலக்கமா? பயமா? அது என்ன என்றே தெரியாத அளவுக்கு இருந்தது.

சிறிது நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''இல்லை சார், நான் வரவில்லை. ரொம்ப தேங்க்ஸ். நீங்கள் போய்ட்டு வாங்க.''

அந்த எம்.டி.க்குப் பிரிவு உபசாரமாக ஒரு விருந்து வைத்தனர்.

அவரும் சந்தோசமாக ஏற்றுக் கொண்டார். ''நான் இத்தனை வருடமாக வேலையில் உங்களிடம் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டிருக்கலாம். அதையெல்லாம் மறந்து மன்னித்து விடுங்கள். ஏன் என்றால், நாம்

வாங்கும் சம்பளத்திற்கு வேலை செய்தாக வேண்டும். கடமையைச் சரியாக நிறைவேற்ற வேண்டும். அதனால் உங்களிடம் நான் கண்டிப்பாகப் பேசியிருக்கலாம்.'' என்று பேசிவிட்டுக் கிளம்பிச் சென்றார்.

இந்த எம்.டி வருடம் ஒருமுறை சுற்றுலா கூட்டிச் செல்வார். குடும்பத்தோடு வேலையும் பார்க்க வேண்டும். அதற்கு நடுவில் குடும்பத்தோடு சின்னச் சின்ன சந்தோசத்தை அனுபவிக்க வேண்டும்.

அவரும் குடும்பத்தோடு வருவார். எல்லோருடனும் சந்தோசமாகப் பொழுதைக் கழிப்பார். அது அத்தனையும் ஆபீஸ் செலவுதான்.

இனி வரும் எம்.டி எப்படி நடந்து கொள்வாரோ, தெரியவில்லை. இவர் மாதிரி நடந்து கொண்டால்கூட நல்லது. இப்போ எந்தக் கிழம் வரப் போகிறதோ, தெரியவில்லை என்று ஆளாளுக்குப் பேசிக் கொண்டனர்.

நாளை வருகிற எம்.டி. அவருக்கு எதுவும் சுத்தமாக இருக்க வேண்டுமாம். அதனால் ஆபீசையே ஒரு புரட்டுப் புரட்டிச் சுத்தப்படுத்தினர்.

உமா எப்பவுமே அவள் கேபினைச் சுத்தமாக வைத்திருப்பாள். அவள் எதற்கும் அலட்டிக் கொள்ளவில்லை. யார் வந்தால் என்ன, நம் வேலையை ஒழுங்காப் பார்த்தாப் போதும்.

மறுநாள் மற்றப் பெண்கள் எல்லாம் நல்ல அலங்காரமாக வந்தனர். உமா எப்பவும் போல் சாதாரணமாக வந்திருந்தாள்.

அவன் சரியாக 8.50 க்கு காரில் வந்து இறங்கினான். அவனை வரவேற்கும் விதமாக அனைவரும் வெளியே நின்றிருந்தனர்.



அவனைப் பார்த்த அனைவரும் வாயைப் பிளந்தனர். பெண்களைக் கேட்கவே வேண்டாம். அவ்வளவு ஸ்மார்ட்டாக இருந்தான்.

அவன் காரை விட்டு இறங்கிய அழகே தனியாகத் தான் இருந்தது. எல்லோரும் ஒரு வயதானவரைத்தான் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஒரு இளைஞன் அதுவும் இவ்வளவு கம்பீரமாக, இவ்... வளவு உயரமாக ஒருவன் வந்து இறங்கினால். அத்தனை பேருக்குமே ஆச்சரியம் தான்.

தட்டில் இருந்த பூவைச் சரிப்படுத்திக் கொண்டு இருந்ததால், உமா இதையெல்லாம் கவனிக்கவில்லை.

மேனேஜர் அவனுக்கு அனைவரையும் அறிமுகப்படுத்தினார்.

உமாவிடம் வந்ததும், ''இவள் உமா. தனிப்பட்ட பைல்களை இவள்தான் பார்க்கிறாள்,'' என்று அறிமுகப்படுத்தினார்.

உமா என்றதும், கைகளைக் குவித்து, ''வணக்கம் சார். வாங்க!'' என்று நிமிர்ந்தவளின் பார்வை அப்படியே நிலை குத்தி நின்றது.

பூமி இரண்டாகப் பிளந்து அதில் தான் உள்ளே போய் விட மாட்டோமா என்று இருந்தது.

அவள் தலைக்குள் ஆயிரம் வண்டுகள் குடைவது போல் இருந்தது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

இவன் எங்கே இங்கே? எப்படி வந்தான்? அய்யோ, கடவுளே! எனக்கு ஏன் இந்தச் சோதனை? யார் முகத்தைப் பார்க்கக் கூடாது. இனி அவனை மறக்க வேண்டும்

என்று நினைத்து யாருக்கும் தெரியாமல் இங்கு வந்தாளோ அவனே கண் எதிரில்.

அவளால் அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் தடுமாறி விட்டாள். அதற்குள் பக்கத்தில் நின்ற கோபி பதறிவிட்டான். "என்ன உமா, உங்களுக்கு என்ன செய்யுது? இப்படி பக்கத்தில் உக்காருங்கள்," என்று சேரை இழுத்துப் போட்டான்.

தீபக்கின் பார்வை அவள் முகத்தில் இருந்து கோபி பக்கம் திரும்பியது. அவன் முகத்தில் எந்த ஒரு உணர்ச்சியும் இல்லை.

பொதுவாகத் தலையை அசைத்துவிட்டு உள்ளே சென்று விட்டான். உமாவுக்குக் குளிர் ஜுரமே வந்து விட்டது.



## 11

மதியத்துக்கு மேல் அவனிடம் இருந்து அழைப்பு வந்தது.

அவள் பைல்களை எடுத்துக் கொண்டு சென்றாள். கால்கள் தள்ளாடின.

கதவைத் திறந்து கொண்டு, உள்ளே சென்றாள். உள்ளே வேறு ஒருவர் பேசிக் கொண்டிருந்தார்.

தான் கதவைத் தட்டாமல் வந்தது அப்போதுதான் புரிந்தது. "சாரி... சார்!" என்று தடுமாறினாள்.

அவன் அவளைப் பார்த்துவிட்டு, "சரி, நீங்கள் போகலாம். பிறகு பார்க்கலாம்," என்று அனுப்பி வைத்தான்.

அவள் பைலை அவன் முன் வைத்துவிட்டு நின்றாள்.

அவன் பைலை எடுத்துப் பார்த்துவிட்டு, அதில் இருந்து சில கேள்விகளைக் கேட்டுவிட்டுத் தொடர்ந்து, "நலமா? நல்லாயிருக்கியா?" என்றான்.

அவளால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை. பற்களால் உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டாள்.

"நான் கேட்டதற்கு என்ன பதிலைக் காணோம்."

அவள் பேச்சை மாற்றும் விதமாக, "சார்! இந்த பைல் இன்று அனுப்ப வேண்டும்," என்று கூறினாள்.

"சார்... ரொம்ப நல்லாயிருக்குது. நான் உன் எம்.டி என்ற நினைப்பிருந்தால் நீ கதவைத் தட்டிக் கொண்டு, 'உள்ளே வரலாமா?' என்று என்னிடம் கேட்டுக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

"என்னமோ ஆசைக் கணவனைப் பார்க்க வருவது போல், பெட்ரூம் கதவைத் திறப்பது போல், திறந்து கொண்டு வந்தே. இந்த நினைப்பு அப்போ இருந்திருக்கணும்."

அவள் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை.

அவள் குனிந்த தலையையே பார்த்துக் கொண்டிருந்தான். "என்னடா நாம் இங்கு வந்து நிம்மதியாக இருக்கோம். இங்கும் வந்து விட்டான், கொடுமைப்படுத்த என்று நினைக்கிறாயா?" என்று வேகமாக சேரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு இரண்டெட்டு அவள் முன் வந்தான்.

அதைப் பார்த்த அவள் இரண்டடி பின்னால் நகர்ந்தாள். அவன் அப்படியே நின்று விட்டான்.

"எப்படி இருக்கே, உமா?" என்றான் கனிவாக.

அந்தச் கனிவை அவளால் தாங்க முடியவில்லை. உடனே கதவைத் திறந்து கொண்டு அவள் இடத்துக்கு வந்து விட்டாள்.

அவளுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. எங்கே அழுது விடுவோமோ என்று இருந்தது.

எப்பொழுது நேரம் ஐந்து ஆகும் என்று இருந்தது. ஐந்து ஆனதும் எழுந்து சென்று விட்டாள்.

மற்றவர்கள் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

வேலை... வேலை என்று அதிலேயே மூழ்கி இருப்பவள். எவ்வளவு நேரம் ஆனாலும் இருந்து வேலையை முடித்து விட்டுச் செல்பவள் இன்று ஏன் இப்படி ஓடுகிறாள்.

சீக்கிரமே எடுத்து வைத்துவிட்டு ஆயிரம் பொய்க் காரணம் சொல்லிவிட்டுச் செல்பவர்கள் கூட இன்று உட்கார்ந்திருந்தனர்.

மறுநாள் உமாவுக்கு நல்ல ஜுரம். எழுந்திருக்கக் கூட முடியவில்லை. அவளுக்கு அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவனைப் பார்த்த பிறகு மனம் தவியாய்த் தவித்தது. அவனை மறந்து விட்டோம் என்று தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டிருக்கோம்.

இவ்வளவு நாள் நினைத்ததெல்லாம் பொய்... அவனை மறக்க முடியவில்லை. மனம் நிறைய அவனே நிறைந்திருந்தான். பேதைப்பெண் ஒரு கணவனை, நெஞ்சத்தில் தாங்கியவனை மறக்க முடியுமா என்று தெரியவில்லை.

அதிர்ச்சி, அழுதது வேறு எல்லாம் சேர்ந்து கொண்டு, அவளுக்கு ஜுரம் வந்துவிட்டது.



ஆபீசுக்கு லீவு சொல்லணுமே. இல்லையென்றால், அவன் நான் வேண்டும் என்றேதான் பயந்து கொண்டு லீவு போட்டுவிட்டாள் என்று நினைப்பான்.

கீழே மெதுவாக இறங்கி வந்து ஃபோன் பண்ணினாள். செல்லில் பண்ணினால் நம்பர் தெரிந்து விடும் என்று.

அப்பொழுதுதான் உள்ளே வந்து கொண்டிருந்தான். ஃபோன் அடித்ததும் உடனே எடுத்தான்.

''ஹலோ... தீபக் ஸ்பீக்கிங்...'' என்றான் கம்பீரமாக.

அந்தக் குரல் அவளுக்குப் புரிந்துவிட்டது. அவள் அந்த ஃபோனை டக்கென கட் பண்ணினாள்.

அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. நம்பரைக் குறித்துக் கொண்டான்.

அன்று உமா ஆபீஸ் வரவில்லை என்று தெரிந்து கொண்டான். லீவும் சொல்லவில்லை. காலையில் போன் பண்ணியது அவளாக இருக்குமோ? என் குரலைக் கேட்டதும் வைத்து விட்டாளோ?

இந்த ரோசத்தில் ஒன்னும் குறைச்சல் இல்லை. முட்டாள்!

அந்த நம்பருக்கு ஃபோன் போட்டான்.

ஹாஸ்டலில் கீழே எடுத்து, ''ஹலோ...'' என்றனர்.

''இது லேடீஸ் ஹாஸ்டல். உங்களுக்கு யார் வேண்டும்?''

''உமா என்பவள் இங்குதானே தங்கியிருக்கா?'' அவர்கள் சொல்லத் தயங்கினார்கள். இவன் தான் யார் என்பதைச் சொன்னவுடன், ''ஆமாம். இங்குதான் இருக்கா. அவளுக்கு ஜுரம். அதனால்தான் ஆபீஸ் வரவில்லை.''

''ஹாஸ்பிடலுக்குப் போனாளா?''

''இல்லை சார். நாங்கள் கேட்டோம் அவர்கள் வேண்டாம் என்று கதவைச் சாத்திக் கொண்டார்கள்,'' என்று போனை வைத்தனர்.

அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தான் நேரில் போகலாம். ஆனால் அவள் வர மாட்டாள். பிரச்னை பண்ணுவாள்.

இந்த நேரத்தில் இது தேவையில்லாதது.

அவன் ஃபிரண்ட்டுக்கு போன் போட்டான்.

மாதவன் எடுத்தான். ''நான்தான்டா தீபக் பேசுறேன்.''

''என்னடா? காலையில் உன் மனைவி உன்னைச் சேர்த்துக் கொண்டாளா? நல்லா ஜமாய்டா கண்ணா. உன் வீட்டுக்குக் கூட்டி வந்து விட்டாயா இரவே?''

''டேய்...'' என்று கத்தினான். ''நிறுத்துடா. என்னைப் பேசவிடு. அவளுக்கு ஜுரம்டா. ஆபீஸ் வரவில்லை. நான் போய்க் கூப்பிட்டால் ஹாஸ்பிடல் வர மாட்டாள்.''

''அதனால் நான் கூட்டிப் போகட்டுமா?

''ஏன்டா, நீயே பயப்படுறே. நான்போய்க் கூப்பிட்டால் நீ யார் என்று போலீசில் பிடித்துக் கொடுத்தாலும் கொடுத்து விடுவாள்.''

''ஏன்டா, என்னோட தவிப்பு உனக்குக் கேலியாக இருக்கா... உன்னை யார் போகச் சொன்னது. உன் லவ் வருகிட்டே சொல்லி போய்ப் பார்க்கச் சொல்லுடா. ஹாஸ்பிடலுக்குக் கூட்டிப்போகச் சொல்.''



''ஏன்டா, நாங்க தனியாகக் கூடச் சந்திக்க முடியவில்லை. என்மேல் கோபமா இருக்கா. இப்ப நான் போய் ஹாஸ்பிடலுக்குக் கூட்டிச் செல் என்றால் என்னை உதைக்காமல் விடமாட்டாள்.''

''டேய்... அவள் முதலில் உமாவோட ஃபிரண்டுடா. அதுக்கப்புறம்தான் உனக்கு லவ்வர். நீ இப்பச் சொல்லலே, உன்னை நான் வந்து உதைப்பேன்.''

''தீபக்...'' என்றான் மெல்ல.

''என்னடா?''

''இவ்வளவு அன்பை மனதில் வைத்துக் கொண்டு ஏன் இப்படி நடிக்கிறே?''

மறுமுனையில் மௌனம் நிலவியது.

''சரிடா, நான் சொல்றேன், ரோஸிகிட்டே.''

அறையில் உமா படுத்திருக்க முடியவில்லை.

ரோஸியையாவது வரச் சொல்லலாமா என்று நினைத்தாள். தனியாக ஹாஸ்பிடலுக்குப் போக முடியாது.

சிறிது நேரத்தில் கதவு தட்டப்பட்டது. அவளுக்கு எரிச்சலாக இருந்தது. யார் இந்த நேரத்தில்? மெல்ல வந்து கதவைத் திறந்தாள்.

திறந்தவள் ரோஸியைப் பார்த்ததும், திகைத்தாள். ''வாடி. உனக்கு ஆயுசு நூறு. இப்பத்தான் நினைத்தேன்.''

''எதுக்கு இந்த தண்டனை. நூறு ஆயுசு என்கிறே. என்னடி செய்யுது. நான் சும்மா வந்தேன். இந்தப் பக்கம்.''

''ஜுரம்டி.''

''ஹாஸ்பிடல் போகலாம், வா.'' என்று அழைத்துக் கொண்டு போனாள்.



# 12

ஒரு வாரம் சென்று ஆபீஸ் சென்றாள். ரொம்ப சோர்வாக இருந்தாள். நெஞ்சுக் கூடு எல்லாம் காலியாகி விட்டது போல் இருந்தது.

அறைக்குள் நுழைந்ததும், தீபக் அவளைப் பார்த்து, ''ஜுரம் சரியாகி விட்டதா, உமா?'' என்றான்.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இவனுக்கு எப்படித் தெரிந்தது எனக்கு ஜுரம் என்று.

''உங்களுக்கு எப்படித் தெரியும், எனக்கு ஜுரம் என்று?''

''நீதானே ஃபோன் பண்ணி லீவு சொல்லியிருக்கே. அதனால் தெரிந்தது. நீ லீவு போட்டா எனக்குத் தெரியாமல் போகுமா?''

தான் போன் பண்ணி அன்று இவன் குரலைக் கேட்டதும் பேனை வைத்து விட்டோமே. பிறகு போன் பண்ணவில்லை.

வேறு யார் போன் பண்ணிச் சொல்லியிருப்பாங்க? ஒரு வேளை ரோஸி சொல்லியிருப்பாளோ?

''ஒரே ஒரு கேள்வி கேட்டேன். ஜுரம் நல்லாயிருச்சா என்று. வேற யாருக்கும் ஆபீசில் முடியவில்லை என்றாலும், இதைத்தான் நான் கேட்டிருப்பேன். அதே போல்தான் உன்னிடமும் கேட்டேன்.



''இதற்குப் போய் நீ எதைஎதையோ நினைத்துக் கொண்டால் நான் பொறுப்பாக முடியுமா?

''போ. போய் வேலையைப் பார் மனதை அலையவிடாமல். என் வேலையையும் கெடுக்காமல். கெடுத்ததெல்லாம் போதும்,'' என்றான்.

அவனை நிமிர்ந்து எரித்து விடுவது போல் பார்த்தாள்.

''அம்மாடியோவ்! பயமா இருக்குது. கண்ணகி கூட உன் அளவுக்கு இப்படி முறைத்துப் பார்த்திருக்க மாட்டா.

''எனக்கு எதுவும் ஜுரம் வந்துவிடப் போகுது!''

அவனை விட்டு வந்து இரண்டு வருடம் ஆகிவிட்டது. அவன் தங்கைக்குக் கல்யாணம் ஆகி இருக்கும். அவன் அம்மா? எப்படி விட்டுத் தனியாக வந்தான்? அம்மாவுக்காகக் கட்டின மனைவியையே வீட்டை விட்டு விரட்டியவன் ஆச்சே. இப்பொழுது அம்மாவை விட்டு ஏன் வந்தான்?

ஒரு வேளை அவன் அம்மா... நினைக்கும்போதே நெஞ்சம் நடுங்கியது. ஒருவர் சாவில் இன்பம் காணும் ரகமில்லை உமா.

அப்படி எதுவும் நடந்திருக்கக் கூடாது என்று நினைத்தாள்.

தீபக் பேசும்போதெல்லாம் பற்றிக் கொண்டு வந்தது. என்னமா நடிக்கிறான். நல்லவன் போல். இங்கு ஏன் தான் வந்தானோ... தெரியவில்லை.

அங்குதான் தன்னை நிம்மதியாக வாழ விடவில்லை. இங்கும் வந்து விட்டான். நிம்மதியைக் குலைக்க.

மாதங்கள் உருண்டோடின. அவ[illegible]ந் அன்று பிறந்த நாள். காலையில் எழுந்ததில் இ[illegible]க மனதே சரியில்லை.

அப்பா, அம்மா நினைவு அதிகமாக [illegible]ந்தது.

அன்று இரவு அவள் செல்லுக்கு போன் வந்தது. மணி பன்னிரண்டு இருக்கும். இந்த நேரத்தில் யாராக இருக்கும் என்று எடுத்துப் பேசினாள்.

நம்பரும் புதுசா இருக்கே என்று.

தீபக்தான் பேசினான். ''பிறந்த நாள் வாழ்த்துடா, செல்லம்!'' என்றான்.

அவள், ''நீங்கள் யார் எனக்கு வாழ்த்துச் சொல்ல?''

''நான் யார் என்று உனக்குத் தெரியாதா?''

''தெரியாமல்தானே சார் கேட்கிறேன்.''

''உன் முதலாளியாக வாழ்த்துச் சொன்னேன்.''

''இப்படித்தான் இவ்வளவு நாளும், உங்க ஆபீசில் வேலை பார்ப்பவளுக்கெல்லாம், பன்னிரண்டு மணிக்கு ஃபோன் பண்ணி வாழ்த்துச் சொல்வீங்களா? வாழ்த்துச் சொல்வதோடு மட்டும் நிறுத்திக்குவீங்களா? இல்லை, நேரடியாக பெட்ரூம் வரைக்கும் போய்விடுவீங்களா?'' என்றாள் கடுமையாக.

''உமா...'' என்று அதட்டினான்.

டக்கென போனை கட் பண்ணினாள்.

தீபக்குக்கு ஆத்திரமாக வந்தது. எப்படிப் பேசுறா. இவளைக் கண்டுபிடிக்க எவ்வளவு பாடுபட்டேன். இங்கு எவ்வளவு சிரமப்பட்டேன்.



மறுநாள் ஆபீசில் வேலை அதிகமாக இருந்தது. வேலையாகத் தீபக் வெளியூர் சென்றுவிட்டான்.

அவளின் பிறந்த நாளுக்காக அவன் ஒரு பொக்கே ஆர்டர் பண்ணியிருந்தான். அது ஆபீசுக்கு வந்தது.

உமாவின் முன்னாடியே அதைத் தூக்கிக் குப்பையில் போட்டான்.

அவனின் பி.ஏ., ''ஏன் சார், ரொம்ப முக்கியமானவர்களுக்குப் பிறந்த நாள் என்று சொன்னீங்க. அதைக் குப்பையில் போட்டு விட்டு விட்டீங்களே!'' என்றாள்.

''அதுக்கு இந்த இடந்தான் தகுந்த இடம். அதது இருக்க வேண்டிய இடத்தில் இருக்க வேண்டும்,'' என்றான்.

உமாவை ஒரு பார்வை பார்த்துக் கொண்டு.

அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. இவனிடம் கேட்டேனா? எனக்குப் பிறந்த நாள் பொக்கே கொடு என்று. அதை வாங்கிக் குப்பையில் போட்டால் எனக்கென்ன?

உங்களை நம்பியதற்கு எனக்கு இதுவும் வேண்டும். இன்னமும் வேண்டும்.

அன்று மதியம் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். உமாவும் கேண்டீனில் போய் உட்கார்ந்தாள். எல்லோரும் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

''என்னடி நான் எம்.டி. என்றவுடன் வயதான கிழம் வரும் என்று எதிர்பார்த்தால், இப்படி ஜம்மென்று, ஸ்மார்ட்டா வந்து இறங்குறான்.''

''அவன் உடம்பைப் பாருடி. எப்படி திண்ணென்று வலிவும் வனப்புமாக இருக்குது. என்ன ஒரு நடை.

அதில் ஒரு திமிர்வு. நாம் பேசினால் கூட, என்னமோ விழுங்கி விடுவது போல் பதில் சொல்வதில்லை.''

''நீ வலையைப் போட்டுப் பாரேன், சிக்குமா என்று!''

மற்றவர்கள் சிரித்தனர்.

''ஏன்டி. அந்த பி.ஏ. இருக்காளே, மா... தவி. விடுவாளா? அவள் எப்பேர்ப்பட்ட ஆள். வயதானவர்களையே விட மாட்டாள்.''

''நம்ம எம்.டி.யை இவ்வளவு நாள் விட்டிருப்பாளா?''

''ஆளைப் பார்த்தால் அந்த மாதிரித் தெரியவில்லை.''

''யாரைடி நம்ப முடியும். இந்தப் பூனையும் பால் குடிக் குமா என்று இருக்கும். வெளியில் நல்லவன் மாதிரி நடிக்கலாம். இருவரும் சேர்ந்து வெளியூர் போறாங்க. இவள் அவர் வீட்டுக்கே சென்று வேலை பார்க்கிறாள்.''

''இதுவரை இருவருக்கும் கசமுசா இல்லாமலா இருக்கும்.''

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள், உமா. அவளுக்குச் சாப்பாடே உள்ளே இறங்கவில்லை. இப்படிக் கூட பேசுவாங்களா பெண்கள்? ஒருவரைப் பற்றித் தெரி யாமல்.

அவளுக்கு ஆத்திரமாக வந்தது. இன்னும் இங்கிருந் தால் ஏதாவது பேசிவிடுவோமோ என்று எழுந்து சென்றாள்.

அவளுக்கு மனது படபடவென அடித்துக் கொண்டது. என்னதான் இருந்தாலும், தன் கணவனைப் பற்றித் தன் முன்னாடியே பேசினால் அவளுக்கு எப்படி இருக்கும்?



இவள்களும், இவள்கள் டிரெசும். பார்க்கச் சகிக்கலை.

அவள் பிறந்த நாள் அன்று கோபி வாழ்த்துச் சொன் னான். அவளுக்கு ஒரு கிப்ட் வாங்கி வந்து கொடுத்தான்.

நாசூக்காக அதை வேண்டாம் என்று சொன்னாள். இதைத் தீபக்கும் பார்த்தான். அதை உமாவும் பார்த்தாள்.

அவன் இகழ்ச்சியாக உதட்டைப் பிதுக்கினான்.

''என்ன உமா, எங்களுக்கெல்லாம் ட்ரீட் இல்லையா?'' என்றான்.

''என்ன கோபி சார், நான் என்ன அவ்வளவு பெரிய ஆளா?''

''ஒரே ஆபீசில் வேலை பார்க்கிறோம். இதெல்லாம் சாதாரணம்.''

''நான் பிறந்த நாள் கொண்டாடி மூன்று வருடத்துக்கு மேலாகுது. இப்ப எல்லாம் எனக்கே என் பிறந்த நாளே மறந்து விட்டது.'' என்று குறிப்பாகத் தீபக்கைப் பார்த்தாள்.

தீபக்கும் அதை உணர்ந்தான்.

''எதுக்கு உமா இவ்வளவு கவலைப்படுறீங்க. உங் களைக் கல்யாணம் பண்ணுகிறவன், உங்க பிறந்த நாளைக் கொண்டாடுவான்.''

''அதற்கு நீங்க தான் அனுமதி கொடுக்க வேண்டும்.''

''எப்படி சார், இப்படி ஜோசியம் கூடத் தெரியுமா? '' என்று அப்பாவியாகக் கண்களை விரித்தாள்.

''நல்லவனாக இருந்தாத்தான் பரவாயில்லை. உங் களைப் போல். சாரி... எல்லா ஆம்பிள்ளைகளும் அப் படியா இருக்காங்க?''

''கல்யாணம் செய்து கொண்டு, விரட்டி விடுற வங்களும் இருக்காங்க. இல்லையா? உங்களுக்கு எவ்வளவோ அனுபவம் இருக்கும்,'' என்றாள் சிரித்துக் கொண்டே குத்தலாக.

''நீங்கள் எப்படி சார். உங்க மனைவியோட பிறந்த நாளைத் தினமும் கொண்டாடுவீங்களா?'' என்றாள்.

''என் மனைவியோட அனுமதி கிடைத்தால் தினமும் பிறந்த நாள் கொண்டாடுவேன்!'' என்று யாருக்கும் தெரியாமல் அவளைப் பார்த்துக் கண்ணடித்தான்.

மற்றவர்கள் பேசிக் கொண்டனர். ''எவளுக்குக் கொடுத்து வைத்திருக்கோ!'' என்று பெருமூச்சு விட்டனர்.



## 13

ரோஸி அன்று போன் பண்ணியிருந்தாள். ''இன்று உன் கூடப் பேசணும். வெளியில் போகலாம்,'' என்று.

ரோஸி வரவும் இவளும் கிளம்பி அவள் வண்டியில ஏறிக் கொண்டாள். ''எங்கேடி போறோம்?'' என்றாள்.

''என் லவ்வரை உனக்கு அறிமுகப்படுத்தப் போறேன்.''

''ரோஸி! நான் சொல்வதை கேள். நான் பட்டது பத்தாதா? நீ வேற ஏன்டி கஷ்டப்படணும்? உன் அம்மா, அப்பா பார்த்த மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொள். ஏமாந்து விடாதேடி.''



''கல்யாணம் ஆகும்வரை தன்னைப் போல் யாருமே இல்லை என்ற அளவுக்கு நடந்து கொள்வாங்க. கல்யாணம் ஆகிவிட்டால், அவர்கள் வைத்ததுதான் சட்டம்.''

''நாம் காதலிக்கும் போது தன்னைப் பற்றி மட்டுமே சிந்திப்பது. கல்யாணம் ஆன பிறகுதான் மற்றவற்றைப் பற்றி சிந்திப்பது.

''அதன் பிறகுதான் ஏமாந்து விட்டோமே என்று தவிப்பது.

''என் அப்பா, அம்மாவை விட்டு எப்படி நம்பி வந்தேன். என்னை வீட்டை விட்டுப் போ என்று ஒரு நாயைத் துரத்துவது போல் துரத்தினார்.

''அன்றே நான் செத்திருக்கணும். நான் செய்த தப்புக்குத் தண்டனை எனக்கு வேண்டும் என்றுதான் இப்படி இருக்கேன்.

''அன்பைக் கொட்டிக் கொடுத்த பெற்றவங்களை அலட்சியப் படுத்தியதற்கு எனக்குத் தண்டனை வேண்டாமா? இன்று அன்பு இல்லாமல், பாசம் இல்லாமல், அனாதை போல் இருக்கேன்.

''நம்மை அனுபவிக்கிறவரைதான் காதல், கத்தரிக்காய் என்பாங்க.

''இவங்க ஒரு ரகம். எங்கே கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இருந்தால் இவள் நமக்குக் கிடைக்க மாட்டாள் என்று கல்யாணம் என்ற பெயரில் பண்ணிக் கொள்வது. பிறகு அனுபவித்து விட்டுப் போ என்று கை கழுவி விடுவது.

''இதுக்கு யாரையாவது சப்போர்ட்டுக்கு வைத்துக் கொள்வது. அம்மா, தங்கை என்று. ஏன் காதலிக்கும் முன் அம்மாவைப் பற்றித் தெரியாதா? தங்கையைப் பற்றித் தெரியாதா? இல்லை, கல்யாணம் செய்யும் முன் கூடத் தெரியாதா?

''இவர்கள் செய்யும் தப்பை, அவர்கள் மேல் போடுவது. இதற்கெல்லாம் தைரியமில்லாதவன் ஒரு பெண்ணைக் காதலிக்கக் கூடாது. கல்யாணம் பண்ணிக் கொள்ளக்கூடாது. மத்ததுக்கெல்லாம் அவள் வேண்டும். இது மட்டும் நல்லாத் தெரியுது. வந்தவளைக் கண் கலங்காமே பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது தெரிவதில்லை.''

இதை யெல்லாம் இவர்கள் உட்கார்ந்து பேசிய டேபிளுக்கு மறைப்பின் பின் உட்கார்ந்திருந்த தீபக்கும், மாதவனும் கேட்டனர்.

தீபக், உமா பேசப் பேசக் கண்களை இறுக மூடித் திறந்தான். கை விரல்களை இறுக மூடித் திறந்தான்.

மாதவன் அவன் கையைப் பற்றிக் கொண்டான்.

''தீபக்! ஆத்திரப்படாதே. சிஸ்டர் கோபத்தில் பேசுறாங்க.''

''என்ன மாதிரி பேசுறா பார்த்தியா, மாதவா. இரண்டு வார்த்தை சரியாகச் சேர்த்துப் பேசத் தெரியாதவள். இன்று எப்படிப் பேசுறா!

''என் மேல்தான் தப்பு. அன்று நடந்ததை என்னாலும் மறக்க முடியவில்லை. அவளால் எப்படி மறக்க முடியும்? ஆனால் அவள் நினைப்பது போல் அனுபவித்துவிட்டுக் கை விட்டு விடணும் என்று நான் நினைத்ததில்லை. நீ



நம்புறாயாடா?'' என்று அவன் கையில் முகம் புதைத்தான்.

கையில் ஈரம் தெரிந்தது. ''ஏன்டா, உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? நான் நம்புறேன்டா உன்னை. மனதைத் தளர விடாதே. தைரியமாக இரு. இவ்வளவு கஷ்டப்பட்டு, இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து இங்கேயே, ஒரே ஆபீசுக்கு வந்தும் விட்டே. கொஞ்சங்கொஞ்சமாக அவங்க மனசு மாறும்.

''அவங்களும் ரொம்ப அடிபட்டிருக்காங்க. அது அவங்க வளர்ந்த முறை. அவங்களைச் சொல்லியும் தப்பில்லை.''

''நான் அவளைக் குறை சொல்லவில்லை. என்னைத் தான் தப்பு சொல்கிறேன். நான் அன்று அப்படி நடந்து இருக்கக் கூடாது.

''என் அம்மாவும் அப்படி நடந்திருக்கக் கூடாது. நான் ஒரு நல்ல கணவனாக நடந்து கொள்ளவில்லை,'' என்றான்.

''சரி, விடுடா. வா, நாம் அங்கு போகலாம்.''

''நான் வரவில்லை, மாதவா. இப்பொழுது அவளை என்னால் பார்க்க முடியாது. அவள் மனதில்தான் எவ்வளவு வெறுப்பு.''

''நான் எவ்வளவோ முடிந்தவரை இருவருக்கும் நல்லவனாகத்தான் நடந்து கொள்ள முயன்றேன். இது என்னால் முடியவில்லை.

''அவள் சொல்வது போல் இவளை நான் காதலித்து இருக்கக் கூடாது. கல்யாணமும் பண்ணி யிருக்கக் கூடாது.''

அவனால் தாங்க முடியவில்லை. "ஒருத்தி வாழ்க்கையை நான் இப்படி வீணடித்து விட்டேன். அவள் அம்மா, அப்பா விட்ட கண்ணீர்தான்டா என்னை இப்ப துடிக்க வைக்குது.

"அவள் என்னை என்ன பேசினாலும், எனக்கு வேணும்டா. நீ சொல்லுடா நான் அவள் உடம்புக்காகத் தான்... எனக்குச் சொல்லவே நாக் கூசுது.

"இந்த மாதிரி பேச்செல்லாம் அவளுக்குத் தெரியாது. அவளின் வேதனை. நாங்கள் படுத்திய பாடு. என்னைப் புரிந்து கொள்ளவே மாட்டாளாடா?" என்று குமுறினான்.

மாதவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அவன் கையைப் பிடித்து அழுத்தியவாறு, "தீபக் இது! பொது இடம். கண்ட்ரோல் யுவர் செல்ஃப். எழுந்திரு. போகலாம்."

"நீ போடா. நான் மட்டும் வீட்டுக்குப் போறேன்."

"இல்லை. நீ இருக்கும் மன நிலையில் தனியாகப் போக வேண்டாம்."

"இல்லைடா. ரோஸி வந்திருக்கா. என்னால் உங்கள் சந்திப்பு..." என்றான்.

"பரவாயில்லை. ரோஸி எங்கேயும் போய்விட மாட்டாள். வா," என்று அவனை காருக்குக் கூட்டிப்போனான்.

காரில் இருந்து கொண்டே ரோஸிக்கு போன் செய்து, "எனக்கு ஒரு முக்கியமான வேலை இருப்பதால் வர முடியவில்லை," என்று தெரிவித்தான்.

"அதனால் என்ன, நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். பிறகு பார்க்கலாம்," என்றாள்.



அன்று இரவு தீபக்கின் இதயம் ரம்பம் கொண்டு அறுத்தது உமா! உன்னை ஏமாற்ற நான் நினைக்கவில்லை. நீ இந்த மாதிரி என்னை விட்டுப் போவாய் என்று எனக்குத் தெரியாது.

காதல் என்பது முட்டாள்களின் சொர்க்கம் என்றாய். எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? என்னால் என் அம்மாவையும் விட்டுக் கொடுக்க முடியவில்லை.

நீ வீட்டை விட்டு வரும்போது எதையுமே எடுத்து வரவில்லையே! நீ என்ன செய்தாய்? அவனுக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.

உமாவைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அவளின் அன்பைப் போலவே, கோபமும் அவளுக்கு. அவளின் அன்பை நினைத்து நெகிழ்ந்தான்.

அவனின் அணைப்பில் ஒரு குழந்தையாகத் துவளுவாள். அவளின் நெகிழ்வும் அணைப்பும், அவன் மார்பில் ஒண்டியதும் அவனைத் திக்குமுக்காட வைத்தது.

படுக்கையில் இருந்து எழுந்து விட்டான். படுக்கை அவனுக்கு முள்ளாகக் குத்தியது. இவ்வளவு பெரிய வீட்டில், அவன் மட்டும். இதெல்லாம் எதற்கு?

எனக்கு நீ மட்டும் போதும், உமா. உனக்காகவே நான் இங்கு வந்து விட்டேன். என் அன்பு முழுவதுமே உனக்கே உனக்கு மட்டுந்தான்.

என் கண்மணியே! வந்துவிடு. என்னை நம்பு. நான் என்ன செய்ய வேண்டும்? சொல். உடனேயே செய்கிறேன் என்ற மனதினுள் புலம்பினான்.

தோட்டத்தில் கால் வலிக்கும் மட்டும் நடந்தான். மனதில் வேதனை குறையவில்லை.


காலையில் ஆபீஸ் கிளம்பிவிட்டான். இரவு தூங்காததால் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன.

அன்று அவன் உமாவை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. ஒரு வார்த்தை பேசவில்லை.

உமாவுக்கே என்னவோ போல் இருந்தது. கண்கள் ஏன் இப்படிச் சிவந்து இருக்குது. உடம்புக்கு ஏதும் முடியலியோ?

இவள் உள்ளே போகும் போது, அவன் கண்மூடி அமர்ந்திருந்தான். இவள் வந்தது கூடத் தெரியாமல்.

சிறிது நேரம் நின்று அவனையே பார்த்தாள். அவன் முகத்தில் சோர்வு தெரிந்தது.



## 14

ஹாஸ்டெல் அறையில் அன்று இரவு கரண்ட் இல்லை. தோட்டத்தில் அமர்ந்திருந்தாள்.

இது மாதிரி ஒரு நாள் தோட்டத்தில் அவள் கோபித்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவன் எப்படிக் கெஞ்சினான். இன்று தனிமையில் எவ்வளவு நேரம் உட்கார்ந்து இருந்தாலும் உள்ளே வா என்று கூப்பிட ஆள் இல்லை.

அதற்குள் கரண்ட் வந்து விட்டது. குளிர் வேறு. உள்ளே போனாள். அவன் இன்னேரம் என்ன செய்வான்? தூங்கியிருப்பானா? இந்தக் குளிர், தனிமை. உடம்பு கெஞ்சியது அவளுக்கு.



இவ்வளவு நடந்த பிறகும் அவனைப் பற்றி மனது நினைக்குது. அன்று அந்தச் சம்பவத்தை நினைத்தாலே, உடம்பு ஆத்திரத்தில் வெடவெடத்தது.

அன்று காலையில் எழுந்திருக்கும் போதே தலை சுற்றியது. எழுந்திருக்க முடியவில்லை.

ரொம்ப நேரம் ஆகியும் அவள் எழுந்து வரவில்லை. தீபக் சென்று அவளைப் பார்த்தான். அவள் இருந்த நிலை அவனுக்குப் பயமாக இருந்தது.

என்ன உமா? என்ன பண்ணுது? ஏன் இப்படி இருக்கிறே?

எனக்கு என்னமோ பண்ணுதுங்க. எழுந்திருக்கவே முடியவில்லை. பயமாக இருக்குது என்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டு அழுதாள்.

அழாதேடா. டாக்டரிடம் போகலாம் என்று கூட்டிச் சென்றான். அவர் பார்த்துவிட்டு, கன்கிராஜ் தீபக். உமா கன்சீவாகி இருக்கா.

அவன் உள்ளுக்குள் அதிர்ந்தான். ஆனால் உமாவோ சந்தோசத்தில் மிதந்தாள். குழந்தை என்றால் அவளுக்குக் கொள்ளை உயிர். தனியாகப் பிறந்து வளர்ந்ததாலோ என்னவோ, அவளுக்குக் குழந்தை என்றால் அலாதிப் பிரியம்.

தீபக் எதுவும் பேசவில்லை. வீட்டுக்கு வந்தனர்.

என்னங்க, எதுவுமே பேச மாட்டேங்கிறீங்க. உங்களுக்கு சந்தோசமா இல்லையா? என்றாள்.

அதெப்படி உமா, எனக்கு சந்தோசமா இல்லாமே இருக்கும்? ஆனால் அம்மாவை நினைத்தால்தான் கொஞ்சம் தயக்கமா இருக்குது.

ஏன், அவர்கள் என்ன சொல்லப் போறாங்க? பேரப் பிள்ளை என்றால், அவர்களும் சந்தோசப்படுவாங்க.

இல்லை. உமா. இந்த... இந்தக் குழந்தை வேண்டாம். இது அம்மாவுக்குத் தெரியாமல் அபார்ஷன் செய்து விடலாம்.

உமா அதைக் கேட்டு அதிர்ந்தாள். என்ன... என்... ன சொல்றீங்க என்று திக்கித் திணறினாள்.

ஆமாம், உமா. இதுதான் நமக்கு நல்லது. மஞ்சுக்குக் கல்யாணம் ஆன பிறகு, நாம் குழந்தை பெத்துக்கலாம்.

அவளுக்கு ஆத்திரம் வந்தது. இதை அப்போதே நினைத்திருக்கணும். இப்ப நினைத்து என்ன பயன்? அன்று நான் மட்டும் உங்களுக்குத் தேவை. இப்போ குழந்தை மட்டும் வேண்டாம்.

அம்மாவுக்குப் பயந்த நீங்க, எதுக்கு என்னை மட்டும்... என்று வாயை மூடும் முன் அறைந்தான்.

நான் சொல்வதைக் கேட்டால் இந்த வீட்டில் இரு. இல்லை யென்றால் வீட்டை விட்டுக் கிளம்பு என்றான்.

அதற்குள் அவன் அம்மாவிற்குத் தெரிந்து, ஒரு பெரிய பிரச்னையே பண்ணிவிட்டார்.

நான் எவ்வளவு சொல்லியும் நீங்க கேட்கலை. ஒரு பொம்பளை அடக்க ஒடுக்கமா இருக்கணும். ஆம்பளை என்ன பண்ணுவான் என்று அவளைத் திட்டித் தீர்த்தாள்.

தீபக்கும் உமாவைத் திட்டினான். நாளைக்கு ஹாஸ்பிடலுக்கு வா என்று பேசினான்.

அவன் அம்மாவும் ஹாஸ்பிடல் போகவில்லை என்றால், நீ இந்த வீட்டில் இருக்காதே என்றார்.



உமா விடிய விடிய அழுதாள். இரண்டு நாள் எதுவும் சாப்பிடாமல் படுத்திருந்தாள்.

அப்படியிருந்தும் தீபக் அவளை விடவில்லை. வா ஹாஸ்பிடலுக்கு. அப்பாய்ன்ட்மெண்ட் வாங்கி வந்திருக்கேன் என்று பிடிவாதமாக அழைத்துச் சென்றான்.

அவள், எனக்குப் பயமா இருக்குங்க. நான் வேணா எங்க அப்பா வீட்டுக்குப் போறேன். என்னை விட்டுவிடுங்க என்று கதறி அழுதாள்.

அவன் உள்ளுக்குள் அழுதான். வெளியே சொல்ல முடியவில்லை. உன்னையே நான் சந்தோசமாக வைத்துக் கொள்ள முடியவில்லை. இதில் குழந்தை வேறா? என்னைப் புரிந்து கொள், உமா. உன்னிடம் நான் உண்மையைச் சொன்னால், நீ ஒத்துக் கொள்ள மாட்டாய்.

அதனால் தான் நான் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியிருக்குது. எனக்கும் விருப்பம் இல்லை என்று உள்ளுக்குள் அழுதான்.

இதற்கு மேல் பிடிவாதம் பிடித்து, அழுது ஆர்ப்பாட்டம் செய்து விருப்பம் இல்லாமல், இந்தக் குழந்தை பூமியில் பிறந்து என்ன செய்யப் போகிறது. சரி என்று உள்ளே போனாள்.

வெளியே அவன் துடியாய்த் துடித்தான். இதை அவளிடம் காட்டிக் கொள்ளவில்லை.

முடிந்ததும், உள்ளே போய்ப் பாருங்கள். மயக்கமா இருக்கா. மயக்கம் தெளிந்ததும் கூட்டிப் போங்கள். உடம்பு ரொம்ப வீக்கா இருக்குது. நல்லா பாத்துக்குங்க.

உள்ளே சென்று பார்த்தான். வேறுந்த கொடி போல், வதங்கிப் போய்க் கிடந்தாள். மயக்கத்தில் பார்த்த அவன் அப்படியே கதறிவிட்டான்.

நர்ஸ் வந்து, என்ன சார் நீங்க. இப்ப பேஷண்ட் பக்கத்தில் வந்து அழறீங்க. இது எல்லாம் சாதாரணம். அவங்க கூட இப்படித் தான் மயக்க ஊசி போடும் முன் அழுதாங்க. இந்தப் பூமிக்கு என் குழந்தை வரும் முன்னே உலகை விட்டுப் போகிறது என்று அழுதாங்க.

உமா, என் கண்ணே. இப்படி படுத்திருக்காயே. பயமா இருக்குதுங்க என்று அழுதாயே. நான் என் மனசைக் கல்லாக வைத்துக் கொள்ள வேண்டியிருந்ததே.

என் அம்மாவும் ஒரு பெண்தான். ஏன் இப்படி நடந்து கொள்றாங்க. அவன் அன்று அழுத அழுகை யாருக்கும் தெரியாது.

மயக்கம் தெளிந்ததும் வீட்டுக்குக் கூட்டி வந்தான். அவளால் நடக்க முடியவில்லை. வலி வேறு இருந்தது. மருந்து மாத்திரை எதுவும் சாப்பிடவில்லை. அதனால் வலி ரொம்ப இருந்தது. இரவெல்லாம் அனத்திக் கொண்டே, அழுது கொண்டே இருந்தாள்.

அழாதே உமா, அழுதால் ஜூரம் வந்துவிடும். இந்த பால், பிரட் சாப்பிடு என்று கொடுத்தான்.

பாலை வாங்கிக் கீழே விட்டெறிந்தாள். மாத்திரையைத் தூக்கிக் குப்பையில் போட்டாள்.

அவளுக்கு அந்த வீட்டில் இருக்க முடியவில்லை. எங்காவது செல்லலாமா என்று இருந்தது.

எங்கு செல்வது. இது தானா தேடிக் கொண்ட வாழ்க்கை. இதுக்குத்தான் தாய், தந்தை தேடித் தரும் வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பிரச்னை என்றால், ஒரு நாளாவது சென்று தங்கி வரலாம். கொஞ்சம் மாற்றம் இருக்கும்.

மறுநாள் ஒரு ஆட்டோ பிடித்து பீச்சுக்குச் சென்றாள். யாரிடமும் சொல்லவில்லை. அங்கு சென்று பகல் முழுவதும் அமர்ந்திருந்தாள்.

மாலையானதும், ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்தாள். வந்ததும், மகனிடம், பார்த்தியாடா. காலையில் போனவள். எங்கே போய் ஊர் சுற்றிவிட்டு வருகிறாளோ, தெரிய வில்லை. ஒரு வார்த்தை என்னிடம் சொல்ல வேண்டாம். உன்னிடம் சொல்லிவிட்டுப் போக வேண்டாம்? நல்ல குடும்பத்துப் பெண் செய்யும் காரியமா இது? அந்தக் காலத்தில் நாங்கள் எல்லாம் வீட்டுப் படி தாண்டியிருப் போமா?

இவள் காலையில் போய்விட்டு, இப்போ வருகிறாள். எங்கே இருந்து பிடித்து வந்தாயோ, இப்படிப்பட்டவளை. நான் எங்கும் பார்த்தது இல்லை. இவளைப் போல.

உமாவுக்கு ஆத்திரம் வந்தது. ஆமா, நான் ஊர் சுற்றி விட்டுத்தான் வருகிறேன். உங்கள் மகள் காலேஜுக்குத் தானே போறா. அதை நம்புறீங்களே, அவள் மட்டும் என்ன காலேஜுக்குத்தான் போறாளா? இல்லை, வேறெங் கும் போறாளா?

பாத்தியாடா, உன் பெண்டாட்டி எப்படி என் பெண் ணைப் பற்றி பேசுறா. என் பெண்ணை நடத்தை கெட் டவள் என்கிறாள். நீ போய்ப் பகல் முழுவதும் ஊர் சுற்றி விட்டு வர்றே. நீ யாரு கூடப் போய்ட்டு வர்றே என்றார்.

ஆமா, யார் கூடவோதான் போய்ட்டு வர்றேன். உங்க மகனோட பொண்டாட்டியா இருக்கிறதை விட, இதுவே

மேல் என்று, கோபத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் கத்தினாள்.

தீபக்குக்குக் கோபம் எல்லை மீறியது. உமாவைக் கைநீட்டி அடித்தான். இரண்டு அடியில் அவள் மயக்கம் போட்டு விழுந்தாள்.

மூன்று நாட்களாக அவள் சாப்பிடவில்லை. இந்த மாதிரி செய்தது வேறு. கோபம் ஆற்றாமை எல்லாம் சேர்ந்து மயங்கி விழுந்தாள்.

அவன் கோபம் அம்மா பக்கம் திரும்பியது. எதுக்கும்மா வீட்டில் இப்படி பிரச்னை பண்றே. அவள் வெளியே போய்ட்டு வந்தால் வரட்டுமே. அது ஒரு தப்பா? அவளுக்குப் போறதுக்கு எந்த இடம் இருக்குது? என்னால், அவள் அனாதை ஆக்கப்பட்டு விட்டாள்.

நீங்கள் அன்பாக நடக்காவிட்டாலும், சண்டையாவது போடாமல் இருக்கலாமே. என் முதல் குழந்தை. அதை வேண்டாம் என்றீங்க. உங்க பேச்சைக் கேட்டு நான் அவளை இந்த மாதிரி ஆக்கிவிட்டேன். இன்னும் உங்களுக்குத் திருப்தி வரவில்லையா? அவள் செத்தால் தான் உங்களுக்கு நிம்மதியா? அவள் செத்தால் நான் உயிரோடு இருப்பேன் என்று கனவிலும் நினைக்காதீங்க. உங்களைத் திருப்திப்படுத்த நான் எவ்வளவோ முயன்றேன். அது முடியவில்லை.

ஒரு பெண்ணுக்கு இப்போ, இந்த மாதிரி நேரத்தில் எப்படி இருக்கும் என்று உங்களுக்குத் தெரியும். அவள் அப்படி எங்கு போயிருப்பாள்? அவள் ஃபிரண்ட் வீட்டுக்குப் போயிருப்பா. நான் மெதுவாகக் கேட்டிருப்பேன். இதில் நீங்கள் தலையிட்டுச் சின்னப் பிரச்னையைப் பெரிசா ஆக்கிட்டீங்க.



இவ்வளவு அவன் பேசியது அவளுக்குத் தெரியாமலேயே போய்விட்டது.

தீபக் அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தான். அப்படியிருந்தும் அவளுக்கு மயக்கம் தெளியவில்லை.

டாக்டருக்கு போன் பண்ணி வரச் சொன்னான். டாக்டர் வந்து பார்த்துவிட்டு, தீபக்! நீ படித்தவன்தானே. எந்த சூழ்நிலையில் இருக்கிறா என்று உனக்குத் தெரியுமா? அன்று அப்படி அழுதாயே! ஒரு டாக்டரா நான் இல்லாமே, உன் கூடப் படித்தவள் என்று அக்கறையாகச் சொல்கிறேன்.

இந்த நேரத்தில் நீ இப்படி நடந்து கொண்டது முட்டாள்தனம். நீயா இப்படி நடந்து கொண்டாய்? ஏன் இப்போ என்ன செய்யப் போறே?

அபார்ஷன் என்பது எவ்வளவு மோசம் என்பது உனக்குத் தெரியுமா? எப்படி ரெஸ்ட் எடுக்க வேண்டும். இப்படிப் போட்டு அடித்திருக்காயே. எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்வது என்பதில்லையா? ஒரு மனிதனுக்குக் கோபம் வருவது சகஜம்தான். இப்படி வரக் கூடாது.

ஊசி போட்டு விட்டு, மாத்திரை கொடுத்தாள். மாத்திரை எல்லாம் ஒழுங்கா சாப்பிட்டாளா என்றாள்.

இல்லை, கீதா. மாத்திரையும், சாப்பிடவில்லை, சாப்பாடும் சாப்பிடவில்லை. நான் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்து விட்டேன்.

மாத்திரை சாப்பிடவில்லை என்றால், வலி அதிகமாக இருக்குமே. சாப்பிடாமல் மாத்திரை சாப்பிடக் கூடாது என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

எப்படியெல்லாம் உன்னைப் பூ மாதிரி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். இப்பொழுது உன்னை அடிக்கும்படி ஆகி விட்டதே என்று தவித்தான்.



# 15

மறுநாள் லீவு போட்டுவிட்டுக் கூடவே இருக்க வேண்டும் என்று இருந்தான். அவள் அவனிடம் எதுவும் பேசவில்லை. பேசாமல் படுத்தே இருந்தாள்.

சாப்பாடு எடுத்து வந்து ஊட்டி விட்டான். இருந்தும் அவள் சாப்பிடவில்லை. பேசாமல் சுருண்டு படுத்து விட்டாள்.

அவன் அடித்ததும், அவள் அப்பா என்று கத்தி விட்டாள். அவனுக்கு மனச்சாட்சி உறுத்தியது. அவளை எப்படி வளர்த்திருப்பாங்க! நான் அடித்துவிட்டேனே என்று நினைத்து நினைத்து மறுகினான்.

உமாவுக்கு அடித்தது அவ்வளவு கோபம். அதைவிட அவர்கள் பேசியது. அப்பொழுது ஏன் இப்படிப் பேசுறீங்க என்று கூடக் கேட்கவில்லை. தன் மீது பழி சுமத்தும் போது... அதுவும் எப்பேர்ப்பட்ட பழி. என் ஒழுக்கத்தையே சந்தேகப்பட்டுப் பேசும் போது. ஒரு நல்ல கணவன் கேட்டுக் கொண்டிருப்பானா?

இவன் என்ன மனிதன்! அவனை நினைத்தாலே அருவருப்பாக இருந்தது. இனிமேல் இங்கு ஒரு நிமிடம் இருக்கக் கூடாது.



இவன் முகத்திலேயே முழிக்கக் கூடாது. இனியும் இங்கு இருந்தால் இதை விடக் கேவலம் இல்லை.

மறுநாள் அவன் ஆபீசுக்குச் சென்று விட்டான்.

அவள் பிரண்ட் ரோஸிக்கு பெங்களூருக்கு ஃபோன் செய்தாள்.

சுருக்கமாக. எனக்கு ஒரு வேலை வேண்டும். நான் வீட்டை விட்டு வந்து விட்டேன். நான் வரட்டுமா? வேலை கிடைக்குமா? என்றாள்.

அவளும், நீ உடனே கிளம்பி வா. நான் உனக்கு வேலை வாங்கித் தருகிறேன். என் அப்பாவிடம் சொல்லி.

யாருக்கும் தெரியாமல் கொஞ்சம் செலவுக்கு மட்டும் பணம் எடுத்துக் கொண்டு ட்ரெயின் ஏறிப் பெங்களூர் வந்து விட்டாள்.

கண்களிலிருந்து கண்ணீர் நிற்காமல் வழிந்தது. எவ்வளவு நேரம் அழுதாளோ, தெரியவில்லை. இரவு கண் மூடவில்லை. எதை மறைக்க இப்படி ஊரை விட்டு வந்தாளோ, அதை மீண்டும் நினைக்கும் விதமாக நடந்து கொண்டான்.

இவன் இங்கு வராமல் இருந்தாலாவது கொஞ்சம் நிம்மதியாக இருக்கும். இப்பொழுது கண் முன்னாடி பார்த்துக் கொண்டு எப்படிப் பேசாமல் இருப்பது.

அவனும் இத்தனை மாதங்களில் தன்னை யார் என்று காட்டிக் கொள்ளவில்லை. தான் மட்டும் ஏன் இப்படித் தடுமாற வேண்டும்.

நாமும் அவனைப் போல் பாறாங்கல்லாக இருக்க வேண்டியதுதான்.

விழாக்கள் வந்ததால் விடுமுறை இரண்டு நாள் கிடைத்தது. ரோஸி, ''நான் என் லவ்வரோடு வருகிறேன். எங்காவது வெளியே போகலாம் உனக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறேன்,'' என்றாள்

''வேண்டாம்டி. நீங்கள் போய்விட்டு வாங்க. இடையில் நான் எதற்கு? நீங்கள் சந்தோசமாகப் போய்ட்டு வாங்க.''

''ஏய், நீயும் வாடி. உனக்காகத்தான் இந்த ட்ரிப்பே. மூவரும் சேர்ந்து போய்விட்டு வருவோம். அப்போதான் வீட்டிலும் விடுவாங்க,'' என்று கட்டாயப்படுத்தி அவளிடம் அனுமதி பெற்றாள்.

காலையில் காருடன் வந்து விட்டாள். ஹாஸ்டெலுக்கு. மாதவன் டிரைவர் சீட்டில் இருந்தான்.

அவனைப் பார்த்து ''ஹலோ'' என்று புன்னகைத்தாள்.

அவனும், ''ஹலோ சிஸ்டர், வாங்க. நீங்க வர மாட்டேங்க என்று சொன்னீங்களாமே. ஏன் சொன்னீங்க? விடுமுறைதானே. வாங்க. ஒரு நாள்தானே. போயிட்டு வருவோம்.''

ரோஸி பின்னாடி ஏறப் போனாள். ''நீ முன்னாடி உட்கார்டி. நான் பின்னாடி உட்காந்துக்கிறேன்,'' என்றாள்.

ரோஸியும் சரி என்று முன்புறம் உட்காந்து கொண்டாள்.

சிறிது தூரம் சென்றதும் கார் ஓரமாக நின்றது.

''ஹலோ தீபக், என்ன இங்கே நிற்கிறே?''

அவனும், ''ஹலோ மாதவா. என்ன இந்தப் பக்கம்?''

''நாங்க பிக்னிக் போறோம். நீ...''

''நானும் வெளியில் எங்காவது போகலாம் என்று வந்தேன். வழியில் கார் ரிப்பேர். மெக்கானிக்கை வரச் சொல்லி ஃபோன் பண்ணியிருக்கேன். வந்து விடுவான்.''

''அப்ப சரி. நீயும் எங்களுடன் வா. மாலை வந்து விடலாம்.''

''இல்லை. நீங்கள் போய்ட்டு வாங்க. இடைஞ்சலா நான் எதற்கு?'' என்றான்.

''இல்லை, நீ கட்டாயம் வர வேண்டும். நாம் வெளியில் சேர்ந்து போய் எவ்வளவு வருடங்கள் ஆகிவிட்டன.''

காரை வந்து மெக்கானிக் எடுத்துக் கொண்டு போனான்.

பின் கதவைத் திறந்து கொண்டு ஏறினான். அங்கு உமா இருப்பதைப் பார்த்துவிட்டுத் தயங்கினான்.

''ஏறுடா. நேரம் ஆகிவிட்டது.''

அவனைப் பார்த்ததும், உமா கீழே இறங்க முற்பட்டாள்.

''நான் வரவில்லை. நீங்கள் போய்ட்டு வாங்க,'' என்றாள்.

''என்ன சிஸ்டர், நீங்கள் உங்க ஃபிரண்ட்கூட வரவில்லையா? நான் என் பிரண்டைக் கூட வரச் சொல்கிறேன். ரொம்ப வருடம் கழித்துச் சந்திக்கிறோம். உங்களுக்குப் பேச எவ்வளவோ இருக்கும். உங்களுக்குத் தடையாக இருக்க மாட்டோம்.

''இல்லடா மாதவா. நீங்கள் கிளம்புங்கள். நான் எதற்கு? வீண் சிரமம். நான் வருகிறேன்,'' என்று இறங்கினான்.

ரோஸியும், ''நீங்க வாங்க சார். ஏன் இறங்கறீங்க? உமா, நீயும் சொல்லேன்,'' என்றாள்.

உமா எதுவும் பேசவில்லை. அவன் ஏறி அவள் பக்கத்தில் அமர்ந்தான். கார் லால் பாக் சென்றது. நன்றாகச் சுற்றினார்கள்.

ஐஸ் கிரீம் கடைக்குச் சென்றனர். எல்லோருக்கும் ஐஸ்கிரீம் வாங்கினர்.

''உமா, இது எனக்குப் பிடிக்காது, வேற சொல்லட்டுமா?'' என்றான் தீபக்.

அவள் பார்வையில் தீப்பொறி பறந்தது. ஐஸ்கிரீமை அவன் மீது வீசினாள். அது அவன் சட்டையில் பட்டுக் கீழே விழுந்தது.

இதை ரோஸியும் மாதவனும் கவனிக்கவில்லை.

மாதவன் திரும்பிப் பார்த்தான். ''என்னடா இது, எப்படிப் பட்டது - உன் கையில் ஐஸ்கிரீம் இருக்கும் போது?''

''இல்லடா. தவறி விழுந்து விட்டது. பரவாயில்லை. நான் கழுவி விட்டு வருகிறேன்.''

தீபக் சென்று சட்டையில் இருந்த ஐஸ்கிரீமைக் கழுவி விட்டு வந்தான்.

உமாவுக்கு மட்டும் கேட்கும் குரலில், ''ரொம்ப குளு குளுன்னு இருக்குது, உமா.''

அவள் பற்களை நற... நறவெனக் கடித்தாள்.

''விடுமுறையை நிம்மதியாகக் கழிக்கலாம் என்று வந்தேன். இங்கேயும் வந்திட்டீங்க. என் நிம்மதியைக் கெடுக்க.''

''நான் உன் நிம்மதியைக் கெடுத்தேனா? ஏதாவது உன்னிடம் பேசினேனா? இல்லை, உன் கையைப் பிடித்து இழுத்தேனா?'' என்றான்.

''என் கையைப் பிடித்துப் பாருங்கள். உங்கள் கன்னம் பழுத்து விடும்.''

''ம்... ம்... என்ன ரொம்ப வாய் நீளுது.''

''ஏன் உங்க பி.ஏ. என்னவானாள்? அவளுடன் சேர்ந்து ஊர் சுற்றுவதுதானே!'' என்றான்.

அவன் கண்கள் பளிச்சிட்டன. இதழ் ஓரம் துடிக்க, குறும்பாக அவளைப் பார்த்து, மென்சிரிப்புச் சிரித்தான்.



''எதுக்கு இப்ப சிரிக்கிறீங்க. நான் பேசுவது உங்களுக்கு ஜோக்கா இருக்கா?''

'ஜோக்கா இல்லை. நீ எதற்கு இப்படிப் பொறாமைப் படுறே. நீதான் வேண்டாம் என்று வந்து விட்டாய். பிறகு நீ எதற்குப் பேசுறே?''

''நான் யார் கூடச் சுற்றினால் உனக்கென்ன?''

''எனக்கென்ன வந்தது? நீங்க எங்கேயோ போங்க. ஊர் சுற்றுங்கள்.''

அவர்கள் வரவும் இருவரும் பேச்சை நிறுத்தினர்.

மாலை ஆகிவிட்டது. கிளம்பி விட்டனர். முதலில் ஹாஸ்டெலுக்கு வந்ததும் உமாவை இறக்கி விட்டனர்.

பொதுவாக, ''வருகிறேன்,'' என்று சொல்லி விட்டுச் சென்று விட்டாள்.



## 16

மறுநாள் காலை ரோஸி அங்கு விட்டுச் சென்ற ஸ்கூட்டியில் ஆபீஸ் வந்தாள்.

ஆபீஸ் வாசலில் வந்ததும், ஒரு ஆட்டோ வேகமாக வந்தது. இவள் திரும்புவதற்குள் வண்டி ஆட்டோ மீது மோதியது. ஆட்டோக்காரன் இறங்கி அவளைத் திட்டினான்.

''ஆட்டோ லைட் உடைந்து விட்டது. பணத்தைக் கொடுத்துவிட்டுப் போ,'' என்று பிடித்துக் கொண்டான்.

அவளுக்குக் கையில் காயம் பட்டது. அவன் திட்டவும் இவளுக்குப் பயமாக இருந்தது. அதற்குள் கூட்டம் சேர்ந்து விட்டது.

அப்பொழுதுதான் தீபக்கின் கார் உள்ளே வந்தது. என்ன வாசலில் கூட்டம் என்று காரை வாசலிலேயே நிறுத்திவிட்டு இறங்கிப் போனான்.

கூட்டத்தின் நடுவில் உமா நின்றிருந்தாள். கையில் இரத்தம் வழிந்தது. தீபக் ஆடிப் போய்விட்டான். கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே போனான். ''என்ன உமா, என்ன நடந்தது? ஏன் கையில் இரத்தம்?'' என்று பேண்ட் பாக்கெட்டில் இருந்து டவலை எடுத்துக் கையில் கட்டுப் போட்டான்.

அவனைப் பார்த்ததும் அவளுக்குக் கண்ணீர் வந்து விட்டது. நடந்ததைச் சொன்னாள். வேகமாகத் திரும்பியவன் ஆட்டோக்காரனை ஓங்கி ஒரு அறை விட்டான்.

''ஏன்டா, நீ வந்தது ராங்ரூட். வந்ததும் இல்லாமே, இடித்து விட்டு இப்ப பணம் வேற கேட்கிறியா? எவ்வளவு பணம் வேண்டும் என்று சொல். நான் தருகிறேன்,'' என்று மறுபடியும் கையை ஓங்கினான்.

அதற்குள் ஆபீசில் இருந்த அத்தனை பேரும் வந்து விட்டனர். ஆட்டோக்காரன் பயந்து ,''என்ன சார், இதுக்குப் போய் அடிக்கிறீங்க. நீங்கள் சொன்னால் நான் போகிறேன்,'' என்று அவசரமாக ஆட்டோவை எடுத்துக்கொண்டு போனான்.

வாட்ச்மேனிடம், ''வண்டியைக் கொண்டு போய் ரிப்பேருக்கு விடு,'' என்றான்.

பிறகு திரும்பிப் பார்க்காமல் சென்று விட்டான்.

அவளுக்கு அழுகையும் ஆத்திரமும் பொத்துக் கொண்டு வந்தது. ஆபீசில் போய் இரத்தத்தைத் துடைத்து விட்டு மருந்து போட்டுக் கொண்டாள்.



காலம் யாருக்கும் காத்திராமல் சென்றது. அன்று ஒரு பெரிய அரசியல் தலைவரைச் சுட்டு விட்டனர். அதனால் கடைகள் உடைத்து நொறுக்கப் பட்டன. பஸ், ஆட்டோ எதுவும் ஓடவில்லை.

மீறினால், கல் விட்டு எறிந்து, பஸ்சைக் கொளுத்தினார்கள். ஆபீசில் அனைவரும் அவரவர் வண்டியில் வீட்டுக்குப் போயினர்.

தீபக் ஏதோ வேலையாக மதியமே வெளியே சென்று விட்டான். உமாவால் ஹாஸ்டெலுக்குப் போக முடியவில்லை. நடந்து போகவும் முடியவில்லை. குண்டர்கள் ரோட்டில் சுற்றிக் கொண்டு இருந்தனர்.

ஆட்டோ எதுவும் கிடைக்கவில்லை இவளுக்கு. எப்படிப் போவது என்று பயந்து கொண்டிருந்தாள்.

மணி ஆறாகியது. என்ன செய்வதென்றே புரியவில்லை. ஆபீஸ் வாசலிலேயே ஒரு ஓரமாக நின்றாள்.

ரோடே வெறிச்சோடிக் கிடந்தது. நேரம் ஆக ஆக அவளுக்கு வயிற்றைக் கலக்கியது.

வேகமாக வாசலில் கார் வந்து நின்றது. அதில் இருந்து தீபக் இறங்கி வந்தான்.

வந்தவன் வேகமாக அவள் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து கதவைத் திறந்து காரில் ஏற்றிவிட்டுத் தானும் அமர்ந்து வேகமாகக் காரை எடுத்தான்.

அவள், ''என்னை ஹாஸ்டெலில் விட்டு விடுங்கள்'' என்றாள். அவனுக்குக் கோபம் வந்தது. ஹாஸ்டெல் பக்கம் வண்டியைத் திருப்பினான். அந்த வழியில்தான் பெரிய கலவரமே நடந்தது. அந்த அரசியல்வாதி வீடு பக்கம் அதனால், அங்குப் பக்கமே போக முடியவில்லை.

அவன் பேசாமல் அவன் வீட்டுக்குக் காரைத் திருப்பி னான்.

கார் காம்பவுண்டுக்குள் சென்றதும், காரை நிறுத்தி விட்டு, "இது உன் வீடு உள்ளே வருவதென்றாலும் வரலாம். இல்லை, நான் ஹாஸ்டெலுக்குத்தான் போவேன் என் றாலும், நீ போகலாம்," என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டான்.

வா என்று உள்ளே கூப்பிடாமல், வந்தால் வா, இல்லையென்றால் போ என்கிறான். இவனை யார் வந்து கூட்டி வரச் சொன்னது.

நான் எப்படியோ போய்ட்டுப் போறேன். இங்கே வந்து இப்படி நிற்பதுக்கு, நான் அங்கேயே நின்றிருக்கலாம்.

இவனுக்கு இப்படி இடையில் விரட்டி விட்டே பழகிப் போச்சு. இது என் வீடாமே. எப்படி சொல்கிறான்.

உங்களால்தான் நான் இன்று நடுத் தெருவில் நிற் கிறேன் என்று எரிமலையாய்க் கொதித்தாள்.

உள்ளே போவதற்கும் அவள் கால்கள் இடம் பெயர வில்லை. வெளியிலேயே வராண்டாவில் உட்கார்ந்திருந் தாள். குளிர் காற்று உடலை உலுக்கியது. கைகளைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

தீபக் வெளியே வந்தான். "உனக்கு இதுதான் தெரி யுமா? இதுக்கு மேலேயும் தெரியுமா? பிடிவாதத்திற்கு ஒரு அளவில்லை? விடிய விடிய இப்படியே உட்காந் திருப்பியா? உள்ளே வா. உன் கோபமும், பிடிவாதமும் தான் இவ்வளவு தூரத்துக்குக் கொண்டு வந்து விட்டது."

அவளும் ஆத்திரத்தின் உச்சத்தில் இருந்தாள். "என் கோபம்தான் இப்படி நடந்ததா? உங்களுக்கு மனச்சாட்சி



இல்ல. நானா கோபப்பட்டேன். நானாகவா வீட்டை விட்டு வந்தேன். உங்க கதை முடிந்தது. அதனால் என்னை விரட்டி விட்டீங்க," என்று கத்தினாள்.

"உஸ்... எனக்கு மட்டுந்தானே கேட்க வேண்டும். ஏன் இப்படி வெளியில் இருந்து கொண்டு கத்துறே? வேலைக்காரங்களெல்லாம் இருக்காங்க. எழுந்து உள்ளே வா. விடிய விடியப் பேசலாம்."

"என்னை விடுங்க. எதாவது பேசினீங்க, நான் மனு சியா இருக்க மாட்டேன். நான் உங்க வீட்டுக்குள் வர மாட்டேன். நான் எப்படியோ போறேன். உங்களுக்குத் தான் நடுவழியிலேயே விட்டுப் பழக்கம் ஆயிற்றே," என்றாள் ஆத்திரமாக.

"இது என் வீடுடா, நீ யார் எனக்கு, உமா? நான் உனக்கு என்ன வேண்டும்? நீ இதுவரை செய்ததெல்லாம் பொறுத்துப் போனேன். ஆபீசில் என்னை அலட்சியப் படுத்தினாய். மற்றவர் முன் அவமானப் படுத்தினாய். குத்திப் பேசினாய். விரட்டி விட்டாய்... விரட்டி விட்டாய் என்று நூறு... ஆயிரம் முறை சொல்லிவிட்டாய்.

"நானும் மனுசன்தானே. அன்று நடந்தது தப்புத்தான். நான் தப்பு பண்ணவில்லை என்று சொல்லவில்லை. நான் அந்த நேரத்தில் அப்படிப் பண்ணியிருக்கக் கூடாது.

"நானும் என்னை எவ்வளவோ கட்டுப்படுத்திக் கொண்டேன். இரண்டு பேரும் கேட்டீங்களா? என்னை என்ன பண்ணச் சொல்றே? நான் உன் மீதுதான் என் கோபத்தைக் காட்ட முடியும்."

''அதுக்குனு அடிக்கிறதா?''

''தப்புத்தான். நான் அடித்திருக்கக் கூடாதுதான். அதுக்காக உன்னிடம் ஆயிரம் முறை மன்னிப்புக் கேட்கிறேன். என்னை மன்னித்து விடு. அதுக்காக நீ எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுக்கலாமா, உமா?'' எனும் போதே அவன் குரல் தழுதழுத்தது.

சில வினாடிகளில் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டான்.



## 17

உமா காலையில் கண் விழிக்கும் போது, பொழுது நன்றாக விடிந்து விட்டது.

தலையை வலித்தது. இரவெல்லாம் அவனுடன் சண்டை போட்டது. பிறகு தூங்காமல் இருந்தது. எல்லாம் சேர்த்துத் தலைவலி தாங்க முடியவில்லை.

இரவு பேசியதெல்லாம் நினைவில் வந்தது.

நீங்கள் உண்மையிலே என்னைக் காதலிச்சிருந்தா, மனைவி என்று நினைத்திருந்தா, என்னை அதற்குக் கட்டாயப்படுத்தி குழந்தை வேண்டாம் என்று சொல்லியிருப்பீங்களா?

உமா, பிளீஸ்டா. நான் அதை நினைத்து, வருந்தாத நிமிடம் கிடையாது. நான் உன்னை நினைக்கவில்லை என்று மட்டும் சொல்லாதே. நீ அப்படிச் சொல்வது ரம்பம் கொண்டு என் இதயத்தை அறுப்பது போல் இருக்க



எனக்கா உன் மேல் அன்பு இல்லை. பாசம் இல்லை. இதை நீ உன் அடிமனதில் இருந்துதான் சொல்கிறாயா? சொல்.

என் ஒவ்வொரு அணுவும் உமா... உமா... என்று துடிப்பது கேட்கவில்லை உனக்கு என்று அவளை அப்படியே தூக்கிச் சென்று அவன் படுக்கையில் கொண்டு படுக்க வைத்தான்.

அவள் துள்ளிக் குதித்து எழுந்து நின்றாள்.

ஏன் உமா... என்றான் ஆழ்ந்த குரலில்.

உங்க படுக்கையில் படுக்க எனக்கு என்ன அருகதை இருக்குது. நான்தான் யார்... யார் கூடவோ ஊர் சுத்தினவ ஆயிற்றே.

உமா என்று அவள் வாயைப் பொத்தினான். அவளை அப்படியே சேர்த்து அணைத்துக் கொண்டான். என்ன பேசுறே உமா. இது மாதிரி எல்லாம் உன் வாயில் இருந்து வரலாமா?

என்னை மட்டம் தட்ட நீ கீழே இறங்காதே. அதை மறந்து விடு என்றுதானே கெஞ்சுறேன்.

நான் இரண்டு வருடம் எப்படித் துடித்தேன் என்று உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரிந்திருக்கும். நான் துடிக்க வேண்டும். கதறி அழ வேண்டும் என்றுதானே என்னை விட்டுப் பிரிந்தாய்.

ஏன் உமா, எப்படி நீ இப்படிச் செய்தாய். நீ இது மாதிரி வீட்டை விட்டுப் போவாய் என்று தெரிந்திருந்தால் நான் உன்னை ஆஸ்பத்திரிக்கே கூட்டிக் கொண்டு போயிருக்க மாட்டேன்.

நீ என்னைப் புரிந்து கொள்ளவே இல்லையா, உமா? நான் எதற்கு அப்படிப் பண்ணினேன் என்று. உன்னை

நான் நினைத்த மாதிரி சந்தோசமாக வைத்துக் கொள்ள முடியவில்லை.

நீ சரியாகச் சாப்பிடுவதும் இல்லை. உனக்கு வீட்டில் எதுவும் கிடைப்பது இல்ல என்று எனக்குத் தெரியும்டா. ஆனால் நீ குறை சொல்லவில்லை. நீ எப்படி வளர்ந்தவள். உன்னைக் காதல் என்ற பேரில் கல்யாணம் செய்து கொண்டு, கூட்டி வந்து இந்தப் பாடுபடுத்த வேண்டியிருக்கே என்று நான் எவ்வளவு வருத்தப் பட்டிருக்கேன்.

இந்த நேரத்தில் குழந்தை வேறா? நீ கன்சீவ்வாக இருந்தால் எப்படிக் கவனிக்க வேண்டும்! வீட்டின் சூழ்நிலை இப்படி இருக்கும் போது நான் உன்னைக் கவனிக்க முடியாது.

குழந்தை பிறந்து விட்டால்... கேட்கவே வேண்டாம். உன்னை நன்கு கவனிக்க வேண்டாமா? உன்னால் வேலை செய்ய முடியுமா? கேட்டால் வீட்டில் தேவையில்லாத பிரச்னை வரும். அதனால்தான் மஞ்சுவுக்குச் சீக்கிரம் கல்யாணத்தை முடித்து விடலாம். பிறகு குழந்தையைப் பற்றி சிந்திப்போம் என்று நினைத்தேன்.

உனக்கு மட்டுந்தான் வேதனையா? எனக்கு மட்டும் இருக்காதா? முதல் குழந்தை. நீ கன்சீவ் என்று தெரிந்ததும் என் மனம் எவ்வளவு சந்தோசப் பட்டது! என் குழந்தையை அழிக்க எவ்வளவு யோசித்திருப்பேன். குழந்தையை விட, நீ முக்கியம் என்று நினைத்தேன். உன் சந்தோசம் முக்கியம் என்று நினைத்தேன். அதனால் தான் அப்படி நடந்து கொண்டேன். அன்று ஆபீசிலும் டென்சன், வீட்டிற்கு வந்தால் அங்கும்... என்று இறுக அணைத்தான்.

ஆனால் நீ நான் முக்கியம் என்று நினைக்கவில்லை. என் வேதனை முக்கியம் என்று நினைக்கவில்லை.



...னைச் "சட்"டென உதறிவிட்டு வந்து விட்டாய். ...பத்தில் வார்த்தைகள் வந்து விழுவது சகஜம்தானே. அதை நீ புரிந்து கொள்வாய் என்று நினைத்தேன். பிறகு உன்னைச் சமாதானப் படுத்தலாம் என்று.

இதற்கெல்லாம் காரணம் உங்கள் அம்மாதானே என்றாள். அவன் கண்களை இறுக மூடித் திறந்தான். அவர்களையும் குற்றம் சொல்ல முடியாது, உமா. அவர்கள் என்னை மட்டுமே சார்ந்து வாழ்பவர். எங்கே உன் பின்னாடியே போய்விடுவேன் என்று அவர்களுக்குப் பயம்.

ஒரு பெண் வேறு இருக்கிறாள். இவள் நிலைமை என்னாவது? யார் வந்து பெண் கேட்பார்கள். தான் வயதான காலத்தில் தனி மரம் ஆகி விடுவோமோ என்று பயம் வந்து விட்டது.

நான் அவசரப்பட்டு விட்டேன். என் தங்கைக்குத் திருமணம் முடித்து விட்டு, அவர்களிடம் சொல்லி நாம் திருமணம் செய்திருக்கணும்.

திடீர் என்று மாலையும் கழுத்துமா வந்து நிற்கவும், அவர்கள் பயந்து விட்டார்கள். அந்தக் கோபத்தை என் மீது காட்ட முடியாமல், உன் மீது காட்டினார்கள்.

நான் உன்னையும் குறை சொல்லவில்லை. நீயும் எவ்வளவோ கஷ்டப்பட்டாய். வேலை யெல்லாம் செய்தாய். எனக்காகப் பொறுத்துப் போனாய். எனக்கும் எல்லாம் புரிந்தது. நான் உன்னைத்தான் திட்ட முடியுமே தவிர, அவர்களை நான் திட்ட முடியாது. அதுவும் உன்மேல் தான் பழி வரும். இவ்வளவு நாள் பேசாதவன் இன்று மனைவி வந்ததும், அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டு பேசுகிறான் என்று உன்னைத்தான்

திட்டுவாங்க. அதற்காகவும் நான் பேசாமல் இருந்தேன். அதுக்காக நான் எதுவுமே கேட்கவில்லை என்று நீ நினைக்கக் கூடாது. எதைக் கேட்கணுமோ அதையும் நான் தட்டிக் கேட்டேன்.

நான் எதையும் நம்ப மாட்டேன். என்னை விடுங்க. இனி உங்களோடு வாழ முடியாது என்னால். நீங்கள் கிட்டே வரும் போதே என்னை அடித்து விடுவீங்களோ என்று பயமாக இருக்குது என்று முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். உங்களால்தான் எனக்கு இந்த நிலைமை.

நான் சாப்பாட்டிற்காக, வேலை செய்து சம்பாதிக்கிறேன். உங்களால்தான் என் அம்மா, அப்பாவை விட்டுப் பிரிந்தேன். என் அப்பா என்னை எப்படி வளர்த்தார் தெரியுமா? நான் வீட்டை விட்டு வருகிறேன் என்று சொன்னால் உங்களுக்கெங்கே போயிற்று புத்தி.

வேண்டாம் என்று சொல்வதுதானே என்று அவன் மீது குற்றத்தைச் சுமத்தினாள். என் பணத்தின் மீதும், என் உடம்பின் மீதும்தானே உங்களுக்கு ஆசை என்றாள்.

அவன் அப்படியே திகைத்துப் போய் நின்றான். அவன் கண் கலங்கிய மாதிரி இருந்தது. உள்ளுக்குள்ளேயே நொறுங்கி விட்டான்.

அவன் எவ்வளவு சொல்லியிருப்பான். இப்பொழுது திருமணம் வேண்டாம் என்று. எப்படிப் பிடிவாதம் பிடித்தாள். எனக்கு வேற மாப்பிள்ளை பார்த்தால் நான் செத்து விடுவேன் என்று எப்படி மிரட்டினாள். இப்பொழுது இப்படிப் பேசுறா!

அவன் எதுவும் பேசாமல் அறையை விட்டு வெளியே

இரவு பத்து மணி இருக்கும். அறை வாயிலில் நின்று கொண்டு சாப்பிட வா உமா என்றான், உணர்ச்சியற்ற குரலில்.

உமா திடுக்கிட்டுப் பார்த்தாள். சாப்பிட வா உமா என்றான் மறுபடியும்.

சாப்பாடு எனக்கு வேண்டாம் என்றாள் விட்டேற்றியாக. அவன் முகத்தைப் பார்க்காமல்.

கொஞ்சம் சாப்பிடு, உமா. ரொம்ப களைத்துப் போய் இருக்கே என்றான்.

ரொம்ப அக்கறைதான். எத்தனையோ நாள் நான் சாப்பிடாமலே இருந்தேன். அப்பொழுது எங்கே போயிற்று இந்த அக்கறை.

நான் அக்கறை இல்லாதவன்தான். ஒத்துக் கொள்கிறேன். அதற்காக உன்னிடம் எத்தனை முறை வேண்டுமானாலும் மன்னிப்புக் கேட்கிறேன். இப்ப வந்து சாப்பிட வா உமா என்றான்.

வேண்டாம் என்றாள் ஒற்றைச் சொல்லாக.

அவன் போய்விட்டான். வேலைக்காரியிடம் போய் எனக்குச் சாப்பாடு வேண்டாம் என்றான்.

அவன் சொன்னது, அவள் காதில் கேட்டது.

சிறிது நேரம் சென்று ஒரு டம்ளர் பாலோடு வந்தான். இதையாவது குடி உமா. வேண்டாம் என்று சொல்லாதே பிளீஸ்.

அவள் உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டாள்.

அவன் பாலை அவள் வாயருகே கொண்டு போனான். பேசாமல் இருந்தாள். அவள் தலையை மார்போடு அணைத்துக் கொண்டு, பாலைக் குடிக்க விட்டான்.

அவள் பேசாமல் பாலைக் குடித்தாள். அவள் நெற்றியில் முத்தம் இட்டு அமைதியாய்ப் படுத்துத் தூங்கு என்றான்.

அவன் வெளியே சென்று குட்நைட் உமா என்று திரும்பினான். அவள் அமைதியாகப் படுத்துத் தூங்கு என்றவுடன் அவனுக்கு முகத்தைச் சுழித்து, நாக்கை நீட்டி ஒழுங்கு காட்டினாள்.

திரும்பியவன் அதைப் பார்த்து விட்டான்.

ஒரு கசப்பான புன்னகையுடன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

உமா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.



## 18

ஹாஸ்டெலைக் கொளுத்தி விட்டனர். எல்லோரும் காலி பண்ணிக் கொண்டு சென்று விட்டனர்.

உமா இங்குதான் இருந்தாள். இப்பொழுது என்ன செய்வது, எங்கு போய்த் தங்குவது என்று யோசித்தாள்.

இங்கு இருந்துதான் ஆபீஸ் போய்விட்டு வந்தாள். தீபக், "காரிலேயே வா உமா," என்றான். அவள் தயங்கிப் பின் ஏறினாள். "என்னை பஸ் ஸ்டாப்பிலேயே இறக்கி விடுங்க," என்றாள்.

"ஏன்?" என்றான்.

"எதுக்கு உங்களுக்குக் கெட்ட பெயர். நான் யார் எதுக்கு காரிலே வருகிறாள் என்று தெரிந்தால், நாலு பேர் நாலு விதமாகப் பேசுவாங்க."



"என்ன பேசுவாங்க?"

"நம்ம இரண்டு பேரையும் தப்பாகப் பேசுவாங்க."

அவன் புருவத்தைச் சுழித்தான்.

"எதுக்கு?"

"நீங்க என்னை வைச்சிருக்கீங்க!" என்று.

"அய்யே! என் கை பரபரன்னு இருக்கே. நான் அடிக்கக் கூடாது என்றுதான் நினைக்கிறேன். நீ விடமாட்டாய் போலிருக்கே. இப்படியெல்லாம் யோசிக்க உன் ஒருத்தியால் மட்டுந்தான் முடியும்.

"அவள்கள் என்ன நினைத்தால் நமக்கென்ன."

"இல்லை. ஏற்கெனவே, உங்களைப் பற்றி..." என்று நிறுத்தினாள்.

"என்னைப் பற்றி..." என்று எடுத்துக் கொடுத்தான்.

"நீங்கள் யாரையும் நிமிர்ந்து பார்க்க மாட்டேங்கிறீங்களாம். அவள்கள் எல்லாம், எப்படி எப்படியோ அலங்காரம் பண்ணிக் கொண்டு வர்றாங்களாம். அதெல்லாம் வீண் என்று பேசிக் கொண்டார்கள்.

"சரியான மரக்கட்டை என்று சொன்னார்கள்!" என்று விட்டுச் சிரித்தாள்.

அதற்குள் கார் ஆபீசுக்குள் சென்று நின்று விட்டது. கார் கதவை ஏற்றிவிட்டு, அவளைப் பிடித்து இழுத்து உதட்டைப் பற்களால் கடித்தான் பல் பதிய.

"நானா மரக்கட்டை. இனிமேல் இது மாதிரி பேசினா இல்லை என்று சொல்," என்று கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான்.

உதட்டில் இரத்தம் கசிந்தது. எரிச்சல் இருந்தாலும் மனது குளுகுளு என்று இருந்தது. இருந்தாலும் கோபமாகக் காட்டிக் கொண்டாள்.

திரும்பிப் பார்ப்பதற்குள் அவன் படியேறிச் சென்று விட்டிருந்தான். மெதுவாக இறங்கி உள்ளே போனாள்.

வேலை முடிந்து மாலையில் தீபக் உமாவை வந்து அழைத்தான்.

எல்லோரும் அவளையே பார்த்தனர்.

''எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு வா, உமா. நேரம் ஆகிறது.''

சட்டென எழுந்து அவன் பின்னே நடந்தாள்.

காரில் உடனே ஏறி உட்கார்ந்து, கதவை அறைந்து சாத்தினாள். அதில் அவள் கோபம் தெரிந்தது.

''எதுக்கு உமா இந்தக் கோபம்?'' என்று வீட்டில் காரை நிறுத்தி விட்டுக் கேட்டான்.

''நீங்க உங்க மனசில என்ன நினைச்சிக்கிட்டு இருக்கீங்க?''

''ஏ... உன்னைத்தான்.''

''அதை நான் கேட்கலே.''

'பிறகு வேறென்ன கேக்குறே. தெளிவாச் சொன்னாத் தானே எனக்குப் புரியும்.''

''உங்களுக்கு ஒன்னும் தெரியாது, பாருங்க. சின்னப் பாப்பா. வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாது. அத்தனை பேர் முன்னாடி என்னை எதற்கு அப்படிக் கூப்பிட்டீங்க.''

''எப்படிக் கூப்பிட்டேன். வா உமா, வீட்டுக்குப் போக லாம் என்றுதானே கூப்பிட்டேன். இதில் தப்பு ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உனக்குத் தெரிந் தால் சொல். திருத்திக் கொள்கிறேன்,'' என்று கண்களால் சிரித்தான்.

''அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க? நீங்க இப்படிப் பண்ணிட்டீங்க!'' என்றாள்.

''எப்படி, இது மாதிரியா?'' என்று அவள் உதட்டை வருடினான்.

''விடுங்க என்னை. இப்படியே செய்து என்னை ஏமாற்றி விடப் பாக்கிறீங்க. என்கிட்டே இது மாதிரி வைச்சுக்கா தீங்க.''

''வேறு யாரிடம் வைத்துக் கொள்ளச் சொல்கிறாய்? நீயே சொல்லேன்,'' என்று கன்னத்தோடு கன்னம் வைத்துத் தேய்த்தான்.

''விடுங்க. என்ன இது ஆபீசில் இருந்து வந்து குளிக் காமல் கூட.''

''குளித்து விட்டு வரட்டுமா?'' அவள் காதருகில் முணுமுணுத்தான்.

''வேண்டாம். விடுங்க,'' என்று அறைக்குள் சென்று கதவைச் சாத்தினாள்.

மறுநாள் காலையில், ''நான் வேற ஹாஸ்டெலுக்குப் போறேன்,'' என்றாள்.

''சரி, இரவு மட்டும் இங்கு வந்துவிடு,'' என்றான்.

''எதுக்கு?'' என்றாள் ''வெடுக்''கென.

''அதுக்குத்தான்!'' என்று கண்ணைச் சிமிட்டினான்.

அவளுக்குக் கோபத்தில் உதடு நடுங்கியது. என்ன பேசுவதென்றே புரியவில்லை.

''இங்கே பார்டா. இப்படியே சண்டை போட்டு மூன்று வருடத்தை ஓட்டி விட்டோம். இனிமேல் இது தேவையா?'' என்றான்.

''அடுத்த வாரம் நம்ம வெட்டிங்டே வருது. அதைக் கொண்டாடுவோம். முதல் இரவு அன்று எப்படி எல்லாம் கொண்டாட நினைத்தோமோ அதை விடப் பல மடங்கு கொண்டாடலாம்!'' என்று பல்வரிசை அழகாகத் தெரியப் புன்னகைத்தான்.

இந்தப் புன்னகையில் மயங்கியவள்தானே. தலையைக் குலுக்கிக் கொண்டாள்.

இரவு லேசாக வயிற்றை வலித்தது. சிறிது நேரத்தில் சரியாகி விடும் என்று பேசாமல் படுத்திருந்தாள்.

வலி அதிகமாக இருந்தது. வியர்த்துக் கொட்டியது. இது மாதிரி அடிக்கடி வலித்தது. ஆனால் இன்று வலி அதிக மாக இருந்தது.

வலி தாங்க முடியாமல் கத்தி விட்டாள்.

தீபக் ஓடிவந்தான்.

''என்ன உமா, ஏன் கத்தினே?''

அவளைப் பார்த்தான். தெப்பமாக வியர்வை நனைந் திருந்தது.

''என்ன... என்ன..?'' என்றான்.

''வயித்தை வலிக்குதுங்க!'' என்று சொல்வதற்குள் அழுது விட்டாள்.

''வாடா, ஹாஸ்பிடல் போகலாம்,'' என்று தூக்கிக் கொண்டு காருக்கு வந்தான்.

''என்னால் தாங்க முடியலியே!'' என்று அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

வேகமாகக் காரை ஓட்டினான். ஹாஸ்பிடலில் காரை நிறுத்தி உமாவைக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு போனான்.

டாக்டர் பார்த்துவிட்டு ஸ்கேன் எடுக்கணும் என்றார். ஸ்கேன் எடுத்துப் பார்த்து விட்டு, ''இதுக்கு முன் நீங்க அபார்ஷன் பண்ணி இருக்கீங்களா?'' என்றார்.

''ஆமாம். பண்ணி இருக்கோம்.''

''உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?''

தீபக் ''திக்கென'' அதிர்ந்தான்.

''இன்னும் குழந்தை இல்லை, டாக்டர்.''

''பிறகு ஏன் முதல் குழந்தையை இப்படிப் பண்ணு னீங்க. இப்ப, இது ஒரு ஃபேஷன் ஆயிட்டு வருது. கல் யாணம் ஆன உடனேயே குழந்தை வேண்டாம் என்று. அப்படிப் பட்டவர்கள் அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் படிச்சவங்கதானே. இதெல் லாம் உங்களுக்கே தெரியவில்லை. படிக்காத பாமர மக்கள் எப்படிப் புரிந்து கொள்வார்கள்.''

''உமா நீ கொஞ்சம் வெளியே இரும்மா!'' என்று அனுப்பி வைத்தார். தீபக், ''என்ன டாக்டர், அதனால் எதுவும் பிரச்னையா?'' என்றான்.

''ஆமாம், அபார்ஷன் செய்து சரியான ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ளவில்லை போல் இருக்குது.''

''ஆமாம், டாக்டர். மாத்திரை எல்லாம் எடுத்துக் கொள்ள வில்லை.''

''அதுதான். இப்போ பிரச்னை கர்ப்பப்பை புண்ணாக இருக்குது. இனி ஒரு குழந்தையைத் தாங்குமா என்பது சந்தேகம்.''

''டாக்டர்...'' என்று எழுந்து விட்டான்.

"உட்காருங்க. பதட்டப்படாதீங்க. இப்போ எல்லாம் தீர்க்க முடியாத பிரச்னை என்று இல்லை. முறைப்படி ட்ரீட்மெண்ட் எடுக்கலாம்.

"இனிமேலாவது கவனமாக மாத்திரை மருந்து எடுத்துக் கொள்ளவும். நேரத்திற்கு ஒழுங்காகச் சாப்பிடவும். இப்படியே அலட்சியமாக விட்டால் கர்ப்பப் பையையே எடுக்க வேண்டி வரும்."

"இதுக்கு என்ன பண்ணலாம், டாக்டர்?"

"நல்ல சத்துள்ள சாப்பாடு. காய், கீரை வகைகள் என்று முழு உணவு சாப்பிட வேண்டும். வேலை பார்க்கிறாளா?"

"ஆமாம், டாக்டர். வேலைக்குப் போகும் அவசரத்தில் சரியாகச் சாப்பிடுவதில்லை."

"பயப்பட வேண்டாம். இந்த மாத்திரை மருந்தை வாங்கிக் கொடுங்கள். பிறகு பார்க்கலாம்."

"வருகிறோம், டாக்டர்," என்று விட்டுக் கிளம்பினர்.

அங்கேயே மாத்திரை போட்டு ஊசி போட்டதால், தூக்கம் வந்து விட்டது காரிலேயே.



## 19

வீட்டில் அவளைப் படுக்க வைத்துவிட்டுத் தீபக் தவித்தான். இப்படி ஆகிவிட்டதே. இதனால் உமா உயிருக்கு ஆபத்து என்று நினைக்கும்போதே, 'சுரீர்' என்றது.



உடனே டாக்டருக்குப் போன் பண்ணினான். "டாக்டர், நான் தீபக் பேசுறேன்."

"என்ன தீபக்?"

"இதனால் உமா உயிருக்கு ஆபத்து..." என்று திணறினான். "ஆபத்து... என்றால் எனக்குக் குழந்தையே வேண்டாம் டாக்டர். அதை எடுத்து விடுங்கள். என் உமா மட்டும் எனக்குப் போதும்," என்று கலங்கினான்.

"இவ்வளவு கலங்க அவசியம் இல்லை தீபக். சரிப்படுத்தி விடலாம். இதனால் எந்த ஆபத்தும் இல்லை."

காலையில்தான் கண்விழித்தாள். பக்கத்திலேயே இருந்தான். "எப்படிடா இருக்கு? வலி இருக்கா? என்ன செய்யுது?"

அவள் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"இப்போ நல்லா இருக்குங்க. நீங்க ஆபீஸ் கிளம்பலையா? நானும் வருகிறேன்," என்றாள்.

"நான் ஆபீஸ் போகவில்லை. லீவு போட்டிருக்கேன். உனக்கும் சேர்த்துத்தான்."

"எதுக்கு தேவையில்லாம லீவு போட்டிருக்கீங்க? டாக்டர் உங்களிடம் தனியாக என்ன சொன்னார்?"

"வயிற்றில் புண் இருப்பதால் இந்த வலி. மாத்திரை சாப்பிட்டால் சரியாகிவிடும். நன்றாகச் சாப்பிட வேண்டும். இனி நீ ஆபீஸ் வர வேண்டாம். வீட்டில் இரு. நல்ல ரெஸ்ட் எடு. நேரத்திற்குச் சாப்பிடு."

இரண்டு நாள் சென்று ஆபீஸ் போனான். வரும்போது ராஜினாமா கடிதம் டைப் பண்ணிக்கொண்டு வந்தான்.

"இதில் கையெழுத்துப் போடு உமா," என்றான்.

"என்ன இது? எதுக்குக் கையெழுத்து?" என்று வாங்கிப் பார்த்தாள்.

பார்த்தவள் அதிர்ந்தாள். "ஏங்க, எனக்கு என்ன ரொம்ப முடியலியா? எதுக்கு நான் வீட்டோட இருக்கணும்? அதுவும் ராஜினாமா செய்யிற அளவுக்கு."

"அதெல்லாம் ஒன்னுமில்லை."

"நீங்கள் என்னிடம் எதுவோ மறைக்கிறீங்க. உண்மையைச் சொல்லுங்க."

அவன் அன்று டாக்டர் சொன்னதைச் சொல்லிவிட்டு அவள் மடியில் முகம் புதைத்தான்.

மடியில் ஈரம் தெரிந்தது. எதற்கும் கலங்காதவன், இன்று அழுகிறான். அவன் தலையைக் கோதிவிட்டாள்.

அவள் வயிற்றில் முகத்தை வைத்து அழுத்தினான்.

"என்னால்தானே உமா, உனக்கு இந்த நிலைமை!" என்று குலுங்கினான்.

அவளாலும் ஒன்றும் பேச முடியவில்லை. கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

கண்களைத் துடைத்துக் கொண்டு, அவனை ஆறுதல் படுத்தினாள்.

"நான் மாத்திரை மருந்து ஒழுங்காகச் சாப்பிடுகிறேன்," என்று அவனைத் தேற்றினாள்.

அந்த வருடக் கல்யாண நாளை, ஆபீசில் அனைவருக்கும் சொல்லிக் கொண்டாடினர். அனைவரும் பிரமித்தனர். ரோஸியும், மாதவனும் வந்திருந்தனர். "சொல்லவே இல்லையே!" என்று ரோஸி கேட்டாள்.

விருந்து முடிய இரவு பத்து ஆகியது. எல்லோரும் சென்று விட்டனர்.

அன்றைய அலங்காரத்தில் உமா ஜொலித்தாள். கண்களாலே அவளை விழுங்கினான்.



"உமா, குளித்துவிட்டு இந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு வா," என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

உமா குளித்து அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு சென்றாள்.

தீபக் வந்து அழைத்துச் சென்று அறைக் கதவைத் திறந்தான்.

"வாவ்..." என்றாள் மெதுவாக. அத்தனை அலங்காரமாக இருந்தது.

அவள் முகத்தை நிமிர்த்தி, "எப்படி இருக்குது?" என்றான்.

அவள் முகம் சிவந்தது. அதை அவன் ரசித்துச் சிரித்தான்.

"புடிச்சிருக்கா?" என்றான் மென்மையாக.

ம்... ம் என்று தலையை மட்டும் ஆட்டினாள்.

"என்ன சரவெடி மாதிரி பொரிவே. இப்ப சத்தத்தையே காணோம். இந்த இடத்தில் பேச்சிற்கு என்ன வேலை என்கிறாயாக்கும்."

அவள் கிளுக்கிச் சிரித்தாள். அவள் சிரிப்பதை ஆசையுடன் பார்த்து அள்ளி அணைத்துக் கொண்டான்.

"என்னங்க..." என்றாள் சிணுங்கலாக.

"என்னங்க, சொல்லுங்க. என்ன விசயம் என்றாலும். நீ இப்படி இருந்து கேட்கும் போது நான் மாட்டேன் என்று சொல்ல முடியுமா?"

"அதெல்லாம் ஒன்னும் இல்லை. அத்தை, மஞ்சு, எல்லாம்..." என்று இழுத்தாள்.

ஒரு வருடம் ஆகிவிட்டது. இப்பொழுதுதான் வாய் திறந்து கேட்கிறாள்.

அவன், "மஞ்சுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. இன் சினியர் மாப்பிள்ளை. அம்மாவோடுதான் மஞ்சுவும் மாப்பிள்ளையும் இருக்காங்க."

"நீங்கள் எப்படி வந்தீங்க, இங்கே மாற்றலாகி...?"

"நீ காணவில்லை என்றவுடனேயே, நான் துடித்து விட்டேன். எங்கே என்று தேடுவேன்? நீ எங்கு போவாய், நீ உன் அப்பா வீட்டிற்குப் போய் இருப்பாய் என்று அங்கு போனேன். அங்கு நீ வரவில்லை என்றார்கள்."

"அப்பா வீட்டிற்குப் போனீங்களா? அப்பா எப்படி இருக்கார்? அம்மா நல்லா இருக்காங்களா?" என்றாள் ஆவலாக.

"எல்லோரும் நல்லா இருக்காங்க."

"ஏங்க, நீங்க போனதும் உங்களை அவர்கள்... என்று நிறுத்தினாள்.

"ஒன்றும் சொல்லவில்லை," என்றான்.

ஆனால் அன்று அவர்கள் பேசிய பேச்சு. பெற்ற மகளைக் காணவில்லையென்றால் எப்படித் துடிப்பாங்க. அதை அவன் தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை.

"அப்புறம் உன் ஃபிரண்ட்சிடம் போய்க் கேட்டேன். ஒருவரும் எனக்குத் தெரியாது என்றனர்.

"வெளியூரில் யாராவது உனக்கு ஃபிரண்ட்ஸ் இருக்காங்களா என்று கேட்டேன். நாலைந்து போன் நம்பர் கொடுத்தாங்க. எல்லோருக்கும் பண்ணினேன். ஒருவரும் இல்லை என்று சொல்லி விட்டனர்.

"ஒரு பெண் மட்டும் இந்த நம்பருக்குப் பண்ணிப் பாருங்க என்று சொன்னாள்.

"அதன் பிறகு தான் இங்கு பண்ணினேன். நேரடியாகப் பண்ணினால் உனக்குத் தெரிந்துவிடும் என்று என் ஃபிரண்ட் மாதவனிடம் சொல்லி நம்பரைக் கொடுத்தேன்."

"அவன் போலீஸ் ஆபீசர் என்பதால் உடனே கண்டு பிடித்து, எனக்கு நீ இங்கு ஹாஸ்டெலில் தங்கிருப்பதாகவும், இந்தக் கம்பெனியில் வேலை பார்ப்பதாகவும் சொன்னான்."

"உன்னைப் பார்த்துக் கொள்ளச் சொன்னேன். அப்படித்தான் ரோஸியிடம் பழகினான். உன்னைப் பற்றித் தெரிந்து எனக்குத் தகவல் கொடுத்தான்."

"நானும் மாதம் ஒரு முறை வந்து அவனுடன் தங்கி உனக்குத் தெரியாமல் பார்த்து விட்டுச் செல்வேன்."

"இதற்கிடையில் மஞ்சுவோட கல்யாணத்தை முடித்தேன். நீ வீட்டை விட்டுப் போனதில் இருந்து, நான் அம்மாவிடம் இதுவரை பேசவில்லை.

"அம்மாவும் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார்கள். நான் பேசவில்லை. வேலையை ராஜினாமா செய்தேன். இங்கு மாதவன் மூலம் உன் ஆபீஸுக்கே வேலை வாங்கினேன். அதன் பிறகுதான் தெரியுமே உனக்கு. நடந்ததெல்லாம்.

"நான் வந்தவுடன் நீ ஓடி வருவாய் என்று எதிர்பார்த்தேன். நீ தெரியாத மாதிரி நடந்து கொண்டாய். வந்ததும் பிரச்னை வேண்டாம்.

"உன் மனநிலையும் ரோஸி மூலம் தெரிந்து கொண்டேன். அதனால் கொஞ்சம் ஆறப் போட்டேன்.

"நான் உனக்காகத்தான் என்று நீ புரிந்து கொள்ள வேண்டும்.

"எப்படிடா செல்லாம் என்னை விட்டு இருந்தே. என்னைப் பார்க்காம, பேசாம எப்படி இருந்தே. அவ்வளவு தூரம் உன்னை நோக அடித்து விட்டேன்.

"என்னால் அப்படி இருக்க முடியவில்லை. நீ கிடைக்கவில்லை என்றால் என் முடிவே வேற மாதிரி இருக்கும்," என்றவனை வாயைப் பொத்தினாள்.

அவனை இறுக அணைத்தாள். "என்னை மன்னித்து விடுங்க!" என்றாள், கண்ணில் நீரோடு.

"இனிமேல் இந்தக் கண்ணில் நீர் வரக் கூடாது. எப்பொழுதும் சிரித்த முகமாக இருக்க வேண்டும்.

"நாளைக்கு உன் அப்பா, அம்மா இங்கு வர்றாங்க," என்றான்.

சந்தோசத்தில் திக்குமுக்காடி அவன் கன்னம், கழுத்து, முகம் என்று முத்த மாரி பொழிந்தாள்.

தீபக் ஆனந்தமாகச் சிரித்து அணைத்துக் கொண்டான்.

❋

# உள்ளம் என்ற ஊஞ்சல்

## 1

ராகேஷ் அன்றும் தன்னை மறந்த போதையில் வந்தான்.

அவனைப் பார்த்ததுமே... உடம்பு நடுங்கியது.

காபி எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள்.

அவன் அதற்குள் குளித்துவிட்டு, டிரஸ் மாற்றித் தலை சீவிக் கொண்டிருந்தான்.

அவனுடைய பிளஸ் பாயிண்டே... இந்தச் சுறுசுறுப்புத்தான். அவசரம், ஆத்திரம், கோபம், பொறுமையின்மை அத்தனையும் ஒன்று சேர்ந்த கலவைதான் ராகேஷ்.

அவன் எப்பொழுதுமே நிதானத்தில் இருக்க மாட்டான். எந்த நேரமும் போதைதான். அவனை நினைத்தாலே... நடுங்குவாள் பிரியா.

குனிந்த தலை நிமிராமல், காபியை அவன் முன் வைத்தாள். அவன் அவளை லட்சியம் செய்யவில்லை. தலைசீவி முடிந்ததும், காபியை எடுத்து, அவள் மூஞ்சியில் ஊற்றிவிட்டுப் போனான்.

சூடான காபி பட்டதால் முகம் எரிந்தது. தண்ணீரைத் திறந்துவிட்டுக் கழுவினாள். அந்தத் தண்ணீரோடு, கண்ணீரும் கலந்தது.

வெளியே வந்தாள். அவன் சென்றிருந்தான். அவள் காபி கொட்டிய இடத்தைச் சுத்தம் செய்தாள்.

இரவு பத்து மணிக்கு ராகேஷ் வந்தான்.

''சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா?''

''வேண்டாம்...''

''சாப்பிட்டீங்களா...?''

''இல்லை...''

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. சாப்பிடவில்லை என்கிறான். சாப்பிடுங்க என்றால் வேண்டாம் என்கிறான். ஏன்...?

அவள் பேசாமல் நின்றாள்.

''சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா... என்றுதானே... கேட்டே... அதான் வேண்டாம்,'' என்றேன்.

''சாப்பிடுங்க என்றா... சொன்னே...?''

அவளுக்கு நெஞ்சு தடதடத்தது. பின் மெதுவாக. ''சாப்பிடுங்க,'' என்றாள்.

''வேண்டாம். நான் சாப்பிட்டேன்...''

அவள் பேசாமல் திரும்பிப் போனாள். இப்படித்தான் கேட்டாலும் அடிப்பான், கேட்காவிட்டாலும் அடிப்பான்.

மெதுவாகப் படியிறங்கிக் கீழே வந்தாள். டைனிங் டேபிளில் ஷியாம் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அவன் சாப்பிட்டுப் போன பிறகு போகலாம் என்று நினைத்தாள். அவன் இருக்கும்போது போனால்... அவன் பேச்சிற்கு அளவே இருக்காது.

அவளைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பான். 'என்ன இராத்திரி எல்லாம் ஒரே சத்தமாக இருந்தது. என் தம்பி என்ன பண்ணினான்?' என்று கண்ணடிப்பான்.

இவளுக்கு உயிரே... போய்விடும் போல் இருக்கும். பதில் எதுவும் பேச மாட்டாள். இருந்தாலும் அவன் சீண்டுவான்.

''என்ன கன்னம், உதடு எல்லாம், ஒரே காயமா.. இருக்கு.. ஏன்? பிரியா... நான் மருந்து போட்டு விடட்டுமா...?

''உன் அருமை தெரியாத முட்டாள் அவன்.

''நீ எனக்கு மட்டும் மனைவியாய் வந்திருந்தால் எத்தனை மென்மையாக, உன்னைத் தாங்குவேன் தெரியுமா...? இப்படி உன்னைக் காயப்படுத்தி விட்டானே... இந்த இடத்தில் மட்டுந்தான் காயமா...? இல்லை... வேறு...'' என்று அவளை மேலும் கீழும் அளவெடுப்பான்.

அவள் உடம்பு கூசிப் போகும். எல்லாம் இவனால் தான். எப்ப பார், போதையில் இருக்க வேண்டியது. வீட்டில் என்ன நடக்குது என்றுகூடத் தெரியாமல்.

ராகேஷ் கூடப் பிறந்தவர்கள் மூன்று பேர். பெரியவன் சுந்தர். அதற்கு அடுத்தவன்தான் ஷியாம், மூன்றாவது ராகேஷ்.

ஷியாம் பேசுவதை இவள் யாரிடம் சொல்வாள்? கேட்க வேண்டியவனே இப்படிப் பாடாய்ப் படுத்துகிறான். அப்படி இவள் சொன்னாலும் கேட்கமாட்டான். இவள் சொல்லவும் முடியாது.

இவளிடம் அவன் பேசினால்தானே, இவள் சொல்வதற்கு. கன்னங்களில் கண்ணீர் உருண்டோடியது.

சுந்தர் இவர்களுக்கு ஒரு தகப்பன் மாதிரி. அவன் மனைவி காயத்ரியும், ஒரு தாய் ஸ்தானத்தில்தான் இருந்து மச்சினன்களைப் பார்த்துக் கொண்டாள். சுந்தருக்கு நீண்ட இடைவெளிக்குப் பின், ஷியாம் பிறந்திருப்பான் போல... அவர்களுக்குக் குழந்தை இருந்தால்... ராகேஷ் வயதில் இருக்க வேண்டும்.

அவர்கள் ராகேஷைத்தான் தன் குழந்தையாகக் கருதினர். அத்தனை அன்பு அவனிடம் வைத்திருந்தனர்.

ராகேஷ் குழந்தையாக இருக்கும்போதே... அவன் தாய் இறந்துவிட்டார். காயத்ரி தான், ஒரு தாயாக இருந்து வளர்த்தாள். ஷியாமையும், தங்கள் உயிராக நினைத்தனர்.

அவனைப் பற்றி அவர்களிடமும் சொல்ல முடியாது. சொன்னால் குடும்பத்தில் பிரச்னைதான்.

அவளின் நிலையை எண்ணிக் கண்ணீர் வடித்தாள். கட்டினவன் சரியில்லை என்றால்... இப்படித்தான். அடுத்தவர்கள் கேவலமாகப் பேசுவார்கள்.

தம்பி மனைவி ஒரு தங்கை மாதிரிதானே... அப்படி நினைக்கவில்லையே... ஷியாம். அவனுக்கும் மனைவி இருக்கிறாள்... ராகேஷ் இப்படிப் பேசினால், இவன் பொறுத்துக் கொள்வானா...? இல்லை. அவள் தான் சும்மா விடுவாளா...?

அவன் மனைவி கவிதா... ராகேஷைப் பார்த்தாலே... முகத்தைச் சுழிப்பாள். இவன் எதிரே வந்தாலே, எனக்குப் பயமாக இருக்கு. மனைவிக்கும், எனக்கும் வித்தியாசம் தெரியாமல், என் கையைப் பிடித்து இழுத்தாலும் இழுத்து விடுவான். இப்படிப் பெண்கள் இருக்கும் வீட்டில் குடித்துவிட்டு வந்து கும்மாளம் அடிக்கிறான் என்பாள் இகழ்ச்சியாக.

அத்தனையும் பிரியா கேட்டுக் கொள்வாள். இவன் ஏன்... இப்படி நடந்து கொள்கிறான்? இவன் இப்படி நடந்து கொள்ளத்தானே... இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள். குடிக்க வேண்டியதுதான். அதற்கு ஒரு அளவு வேண்டாமா...?

இருபத்து நாலு மணி நேரமும் போதையில், சிகரெட்... இப்படி இருந்தால்... உடம்பு என்னத்துக்கு ஆகும்.

இதை ஒரு நாள் கவிதா பேசுவதைத் தாங்க முடியாமல், அவனிடம், ''எதுக்கு இப்படிக் குடிக்கிறீங்க, உங்கள் நினைவு இழக்கும் அளவிற்கு. வீட்டிற்கு வந்து, இரவு மட்டும் குடிங்க,'' என்றாள்.

அவ்வளவுதான், பளார்... பளார்... என்று கன்னங்கன்னமாக அறைந்தான். ''நீ என்னடி... எனக்கு அட்வைஸ்

பண்ண உனக்கு எங்கிருந்து இவ்வளவு தைரியம் வந்தது?''

''இனிமேல் ஒரு வார்த்தை பேசுவியா...?'' என்று புரட்டி எடுத்து விட்டான்.

பிரியா அடி தாங்க மாட்டாமல், ''இனி நான் சொல்ல மாட்டேன். என்னை மன்னிச்சுடுங்க!'' என்று நூறு முறை கெஞ்சினாள்.

அப்படியிருந்தும் அவளை அவன் விடவில்லை. இரவு முழுவதும், அவளைப் படுத்தி எடுத்து விட்டான்.

''ஏன் நான் குடித்தால், உனக்குப் பிடிக்காதா? அப்புறம் எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்? நான் அப்படித்தான் குடிப்பேன்!'' என்று மறுபடியும் ஊற்றிக் குடித்தான்.



## 2

சிகரெட்டை அவள் முகத்தில் ஊதினான். அவளுக்கு மூச்சுத் திணறியது. இருமல் வந்து இருமினாள். அதற்கும், அவன் அடித்தான். அவளால் இருமக்கூட முடியவில்லை.

உடம்பு வலி உயிர் போனது. அவளால் எழுந்து நடக்கக் கூட முடியவில்லை.

கன்னம் இரண்டும், கை விரல் பதிந்து வீங்கி இருந்தது. அவன் அயர்ந்து தூங்கிவிட்டான்.

பிரியாவுக்கு இந்த வாடையே பிடிக்காது. இப்பொழுது இருபத்து நாலு மணி நேரமும், இந்த வாடையில்தான் இருந்தாக வேண்டிய கட்டாயச் சூழ்நிலை.

கல்யாணத்தன்று இரவு. இப்போது நினைத்தாலே... நெஞ்சு நடுங்கிற்று. தன்னை இழந்த நிலையில் இருந்தான். அவன் கண்களில் அப்படி ஒரு வெறி. கண் இரத்தச் சிகப்பாக, பார்க்கவே... பயமாக இருந்தது.

பிரியா உள்ளே வந்தவுடனேயே... அவளைப் பிடித்து இழுத்து, ஆடைகளைக் கிழித்து, அவன் வெறி அடங்கும் மட்டும் அவளைப் பிய்த்தெடுத்தான்.

அவள் எத்தனையோ... கெஞ்சினாள். கதறி அழுதாள். ''ஐயோ... வலிக்குதே... என்னை விடுங்களேன்..'' என்று அழுதாள்.

அவன் அவளை அறைந்தான். அவளுக்கு மயக்கம் வந்தது. அப்படியிருந்தும், அவளை அவன் விடவில்லை.

காலைவரை அவளுக்கு மயக்கம் தெளியவில்லை.

காலை பதினொரு மணிக்குத்தான் விழித்தாள். பக்கத்தில் அவன் இல்லை. அவளால் உடம்பை அசைக்கக் கூட முடியவில்லை.

உடம்பு அனலாகக் கொதித்தது அவளுக்கு. அதிர்ச்சி, அடி, அவன் அவளைக் காயப்படுத்திய விதம், எல்லாம் சேர்ந்து அவளுக்கு ஜுரம் அடித்தது.

அவள் இப்படி எதிர்பார்க்கவில்லை. காயத்திரி வந்து பார்த்தாள். அவள் இருந்த கோலத்தை. அவளைப் பார்த்ததும் பிரியா அழுது விட்டாள். ''நான் இங்கிருக்க மாட்டேன். நான் என் வீட்டுக்குப் போய்விடுகிறேன்,'' என்று அழுதாள்.

அவள் உடம்பின் காயங்களைப் பார்த்த காயத்திரி அதிர்ந்தாள். அவள் என்ன செய்ய முடியும்? மெதுவாக

அவளை எழுப்பிச் சூடான தண்ணீரில் குளிக்க வைத்து, சாப்பிடக் கொடுத்து, ஹாஸ்பிடலுக்குக் கூட்டிப் போனாள்.

காயத்திற்கு மருந்து போட்டுக் கொண்டு, மாத்திரை சாப்பிட்டு விட்டுப் படுத்தவள் தூங்கிப் போனாள். இரவு வந்ததே... அவளுக்குத் தெரியாது.

அவனின் தொடுகையில் அவள் விழித்தாள். வலி உயிர் போயிற்று. பயத்தில் அலறினாள். எவ்வளவோ... கெஞ்சியும் அவன் விடவில்லை.

தினமும் இதுவே... தொடர்கதை ஆனது. தினமும் அவள் தன் நினைவை இழந்தாள்.

இரவு என்றாலே... அவள் உடம்பு நடுங்கியது. இதை விட அவனைப் பார்த்தாலே... அவள் கால்கள் இரண் டும் தட... தட...வென நடுங்கிற்று.

அவளின் எதிர்ப்போ... அழுகையோ... கண்ணீரோ... எதுக்கும் அவன் செவி சாய்க்கவில்லை.

அவன் பக்கத்தில் வந்தாலே... அவள் கண்களை இறுக மூடிக் கொண்டு, உதட்டைக் கடித்துக் கொள்வாள்.

ஷியாம் இப்படி என்ன சத்தம் என்று கேட்கிறானே... என்று, இனிச் சத்தம் போடக்கூடாது என்று நினைப் பாள். அவளையும் மீறிச் சத்தம் வந்துவிடும்.

அவள் துடித்தால்தான் அவன் விடுவான்.

ஷியாம் சாப்பிட்டுப் போனதும், பிரியா உள்ளே வந் தாள். சாப்பாட்டு மேசையில் ஒன்றும் இல்லை. பேசா மல் ஒரு டம்ளர் தண்ணீரைக் குடித்துவிட்டு, ஒரு டம்ளர் பாலோடு மேலே போனாள்.



ராகேஷ் பைல் பார்த்துக் கொண்டிருந்தான். இவன் தூங்கவே மாட்டானா? இந்தப் போதையில் எப்படி வேலை பார்க்கிறான். இவன் கார் ஓட்டி வந்தால்... இவளுக்கு அடிவயிறு கலங்கிவிடும்.

அத்தனை வேகமாக ஓட்டுவான். இங்கு காரை நிறுத்துமிடத்தில், இரண்டு தூண்களுக்கு இடையில் வேகமாக 'நச்சென்று' நிறுத்துவான்.

ஒரு தூணில் நாய் கட்டியிருக்கும். அந்த நாய் அவன் காரைப் பார்த்ததும், பம்மிக் குறுகித் தூணோடு ஒட்டிக் கொள்ளும். அது குரைத்தால் ஒரு அதட்டுப் போடு வான். உடனே அது வாய் மூடிக் கொள்ளும்.

காரை இத்தனை வேகமாக ஓட்டினால் எப்படி? ஏதா வது ஆனால்...?

அவன் வரும்வரை, கார் சத்தம் கேட்கும்வரை, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பாள்.

இவளின் தவிப்பு அவனுக்குப் புரியாது. வந்ததுமே... அவளை நோகடிப்பான். இவன் ஏன் வந்தான் என் றிருக்கும். ஒரு பேச்சு, வார்த்தை, சிரிப்பு எதுவும் கிடை யாது.

அவள் பெயர் கூட அவனுக்குத் தெரியுமோ... என் னவோ! இதுவரை அவன் அவளைக் கூப்பிட்டதில்லை.

இவளும் அவனுடன் பேசியதில்லை. இவள் என்ன பேச முடியும்? ஒரு வார்த்தை பேசினால், அதற்கு ஒரு வாரத்திற்குத் தண்டனை கொடுப்பான்.

ஷியாம் தினமும் ஐந்து மணிக்கு வந்து விடுவான். கவிதாவைக் கூட்டிக் கொண்டு, சினிமா, பீச், கடை வீதி என்று... இரவுதான் சாப்பிட்டு விட்டு வருவார்கள்.

பிரியா அதையெல்லாம் அவனிடம் எதிர்பார்க்க வில்லை. அவளை ஒரு மனுஷியாக நடத்தினாலே போதும்.

ராகேஷ் ஒன்பது மணிக்கே... ஆபீஸ் சென்று விடுவான். இரவு வரப் பத்து பதினொன்று ஆகிவிடும். இவன் கிளப்... பார் என்று போய்விட்டு வருவான்.

ஷியாம் ஒரு நாள் பிரியாவிடம், ''அவன் முரட்டுத் தனத்தை எப்படித்தான் பொறுத்துக் கொள்கிறாயோ... அவன் ஒரே நேரத்தில் பத்துப் பேரைச் சமாளிப்பான். நீ பாவம் எம்மாத்திரம்!'' என்பான் நக்கலாக.

பிரியாவிற்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வரும். தன்னால்தானே... தன் கணவனுக்குக் கெட்ட பெயர். தான் கத்தியதால்தான் இவன் இப்படிப் பேசுகிறான். இனிமேல் உயிரே போனாலும் கத்தக் கூடாது என்று நினைத்தாள்.

பிரியா அவன் முகத்தை அருகில் கண் விழித்துப் பார்த்ததில்லை. அவளுக்கும் ஆசை இருந்தது. தன் கணவன் தன்னை வெளியே கூட்டிப் போக வேண்டும். தன்னுடன் பேச வேண்டும். சிரிக்க வேண்டும். இது சராசரி எல்லாப் பெண்களுக்கும் உள்ள ஆசைதானே... பிரியா மட்டும் என்ன விதி விலக்கு.

ஆறு மாதங்களில் ஒரு நாள் கூட, 'சாப்பிட்டியா பிரியா...?' என்று கேட்டதில்லை. அவள் கண் கலங்கியது. நான் என்ன பாவம் செய்தேன். இந்த தண்டனை. ஏன் என்னை இப்படி நடத்துகிறான். ஒரு சிறு அவகாசம் கூடத் தனக்குக் கொடுப்பதில்லையே... பெருமூச்சு ஒன்றை வெளியிட்டாள்.

ஒவ்வொரு நாளும் இன்றாவது ஒரு வார்த்தை பேச மாட்டானா... என ஏங்குவாள்.

காயத்திரிதான், அவளுக்கு ஆதரவாக இருந்தாள். ''கொஞ்சம் பொறுத்துக் கொள் பிரியா, எல்லாம் சரியாகிவிடும்,'' என்பாள்.

ஞாயிறு ஒரு நாள். அன்று அதிசயமாய் வீட்டில் இருந்தான். மதியச் சாப்பாட்டிற்குப் பிரியாணி, கோழி வறுவல் என்று செய்தார்கள். சாப்பாட்டை மேலே எடுத்து வா... என்றான். சாதாரணப் பேச்சுக்கூட அவளை அதிர வைக்கும்.

சாப்பாட்டை எடுத்துக் கொண்டு, மேலே வந்தாள். அதைத் தட்டில் எடுத்து வைத்து அவனிடம் கொடுத்தாள்.



## 3

தட்டை வாங்கிக் கொண்டு, ''நீ சாப்பிடு,'' என்றான். அவள் திகைத்தாள். எத்தனை மாதம் கழித்து, நீ சாப்பிடு என்கிறான். அவள் உதடு நடுங்கியது.

இந்தப் பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்! எத்தனை நாள் இதற்காகக் காத்திருந்தாள். நீ சாப்பிடு என்பதை, அன்பாக, அன்பாகக்கூட வேண்டாம், மெதுவாகச் சொல்லக் கூடாதா...?

அவள் இதயம் அதிர்வது போலவா... சொல்ல வேண்டும்.

அவளை அறியாமல் உடம்பில் நடுக்கம் ஓடியது. எல்லாப் பெண்களும் கணவனிடம் எப்படி இருக்காங்க. எத்தனை சலுகை, அன்பு, எதிர்பார்ப்பு! இன்றுவரை ஒரு பூ கூட வாங்கித் தந்ததில்லை.

''சொல்வது காதில் விழவில்லையா...?'' என்றான் கர்ஜனையாக.

பிரியா நான்வெஜ் சாப்பிட மாட்டாள். இவன் இன்று அதிசயமாய்ச் சாப்பிடு என்கிறான். இப்ப என்ன செய்வது. மாட்டேன் என்றால் என்ன நடக்குமோ... என்ற பயத்தில் ''நா... நான் கீழே சாப்பிட்டுக்கிறேன்,'' என்றாள்.

அவன் கையில் வைத்திருந்த தட்டை அப்படியே அவள் மீது எறிந்தான். தட்டு அவள் தலையில் பட்டுத் தரையில் விழுந்தது. அவள் தலையெல்லாம் சாதம். பயந்து மிரண்டு விழித்தாள்.

ஓங்கி ஒரு அறை விட்டான். 'சாப்பிடு என்றால் சாப்பிட வேண்டியதுதானே... உன் வேலை. எதிர்த்தா பேசறே...' என்று பெல்டால் விளாசு.. விளாசு என்று விளாசி விட்டான்.

அவள் மனதில் எடுத்த முடிவு எல்லாம் காற்றோடு போனது. கத்திக் கதறி விட்டாள். அப்படியிருந்தும் அவன் விடவில்லை.

சாப்பிடு என்று அவளைச் சாப்பிடச் சொன்னான். அவள் இனியும் மறுத்தால்... தன்னைக் கொன்று விடுவான் என்று சாப்பிட்டாள்.

அவளுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. அழுகை வேறு. வேக வேகமாக அள்ளித் திணித்தாள்.



புரை ஏறி இருமல் வந்து. அத்தனையும் வாந்தி எடுத்தாள். இனி என்ன செய்வானோ... என்று நினைத்தாலே... நடுங்கிற்று.

மெதுவாக எழுந்து பாத்ரூமிற்குச் சென்றாள். வாய் கொப்புளித்துவிட்டு வந்து, வாந்தி எடுத்த இடத்தைச் சுத்தம் பண்ணினாள். அவளுக்குக் கண்ணீர் நிற்கவேயில்லை. மயக்கம் வரும் போல் இருந்தது.

ராகேஷ் எழுந்து பக்கத்து அறைக்குச் சென்றான். பிரியா கட்டிலில் ஒரு ஓரமாகப் படுத்துத் தூங்கிப் போனாள்.

உடம்பெல்லாம் இரத்தம் கட்டிப் போயிருந்தது. இரவும் அவள் எழுந்திருக்கவில்லை. இன்று முழுவதுமே.. அவள் சாப்பிடவில்லை.

ராகேஷ் இரவு அவளைப் படுக்கையில் புரட்டிப் போட்டான். அவள் எதுவும் மறுப்புக் காட்டவில்லை. அப்படியே மயக்கத்துக்குப் போனாள்.

அடி வேதனை தாங்க முடியாமல், அன்று இரவு ஜுரம் அடித்தது. வலி தாங்க முடியாமல் விடிய விடிய அனத்தித் தீர்த்தாள்.

ராகேஷ் காலையில் எழுந்து ஆபீஸ் சென்று விட்டான்.

காயத்திரி வந்து அவளை ஹாஸ்பிடலுக்கு கூட்டிப் போனாள். ''அக்கா... நான் ஹாஸ்பிடலிலேயே இரண்டு நாள் இருக்கேன்,'' என்று அழுதாள்.

அவளும் சரி என்று சென்று விட்டாள்.

பாவம் சின்னப் பெண், எப்படித் துடிக்கிறாள். நாம் இப்படித் தப்புப் பண்ணி விட்டோமே... இந்த ராகேசுக்கு

அறிவு என்பதே கிடையாதா... இவன் முரட்டுத் தனத்துக்கு ஒரு அளவே கிடையாதா...? அவனை இப்படியே விடக் கூடாது என்று நினைத்தாள்.

ராகேஷ் எவ்வளவுக்கெவ்வளவு நல்லவனாக இருந்தானோ... இப்போ அப்படியே எதிர் மறையாக மாறி விட்டான்.

அதுவும் ஒரு பெண்ணால்தான். மோனிகா... அவ்வளவு அழகு. அதற்கேற்றாற்போல் ஆணவமும், அகம்பாவமும்,

அவளையே கல்யாணம் பண்ணிக் கொள்வேன், என்று பிடிவாதமாகப் பண்ணிக் கொண்டான். நம் குடும்பத்திற்கு இவள் ஒத்து வர மாட்டாள் என்று எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள்.

ராகேஷ் கேட்கவில்லை. இவளின் அழகு அவனைக் கட்டிப் போட்டது. அவள் அந்த அழகை, ராகேசுக்கு மட்டும் கொடுக்கவில்லை.

அவனின் வயசு அப்படி. அந்த வயதில்தான் எத்தனை திறமை, அறிவு, தன்னம்பிக்கை! அத்தனையும் பொடிப் பொடியாக்கினாள் மோனிகா.

இரவு படி அதிர இறங்கி வந்தான் ராகேஷ். காயத்திரியிடம் வந்து, ''மீ... எங்கே அவள்?'' என்றான்.

அவளை மம்மீ... என்றுதான் அழைப்பான். அதைச் சுருக்கி மீ... என்பான்.

''எவள்? இந்த வீட்டு வேலைக்காரியா...?'' என்றாள் கோபமாக.

''என் செல்ல மீ...க்கு என் மேல் என்ன கோபம்?'' என்றான், கட்டிக் கொண்டு.



''விடுடா... தடிப்பயலே... அவளை எதுக்குடா... அடித்தே... அவள் அழுவதை என்னால்... பார்க்க முடியவில்லை.'' காயத்திரி கண்களிலும் கண்ணீர்.

''இதுக்குத்தான்... நான் கல்யாணமே... வேண்டாம் என்றேன்.''

''அதுக்காக அவளை இப்படிச் சித்திரவதை செய்யணுமா...?''

''இதையெல்லாம் அவள் உங்களிடம் சொன்னாளா...?''

''அவள் சொல்லாட்டி தெரியாது பாரு...''

''இப்ப எங்கே... மீ?''

''அவள் ஹாஸ்பிடலில் இருக்கா. நான் இரவு போக வேண்டும், துணைக்கு டாக்டர் இருக்கச் சொல்லி விட்டார்.

''எதுக்குடா கண்ணா அவளை இப்படி அடிச்சிருக்கே... பாவம், சின்னப் பெண் இல்லையா...?''

''நான் அன்று பிரியாணி சாப்பிடச் சொன்னேன். கேட்கவில்லை. அதனால்தான்.''

''அவதான் நான்வெஜ் சாப்பிட மாட்டாளே... பிறகு எப்படிச் சாப்பிடுவாள்...?''

''எனக்கு எப்படித் தெரியும்? அவள் சொல்ல வேண்டியதுதானே...?''

ராகேஷ் போய்விட்டான். காயத்திரி ஹாஸ்பிடல் சென்றதும், ராகேஷ் காரை எடுத்துக் கொண்டு சென்று விட்டான்.

பிரியா வர நான்கு நாள் ஆனது. ஒரு நாள் கூட ராகேஷ் போய்ப் பார்க்கவில்லை.

பிரியாவுக்கு மனம் பாரமாக இருந்தது. போய் அப்பா, சித்தி, தம்பி, தங்கையைப் பார்த்து வரலாமா... என்று நினைத்தாள்.

இவனிடம் கேட்டால் என்ன சொல்வானோ... வேண்டாம் என்று மட்டுமா... சொல்லுவான். அதோடு கூட என்ன கிடைக்குமோ... என்று பயந்து, காயத்திரியிடம் கேட்டாள்.

அவள், "ராகேஷிடம் கேட்டுப் போய் விட்டு வா..." என்றாள். வேற வினையே வேண்டாம் என்று நினைத்து வாயை மூடிக் கொண்டாள்.

அங்கு போனாலும் சீராட்ட யார் இருக்கா... பெத்த அம்மாவா இருக்கா... அம்மா... ஏம்மா... என்னை விட்டுப் போனே... எனக்கு உடம்பெல்லாம் வலிக்குதும்மா... என்று அழுதாள்.

ஹாஸ்பிடலில் இருந்து வந்து குளித்துவிட்டு, ஒரு சுடியைப் போட்டுக் கொண்டு தலையைச் சீவிப் பளிச் சென்று இருந்தாள்.

அறைக்குள் இருந்தவன், ஒரு வார்த்தை கேட்க வில்லை, இப்ப எப்படி இருக்கு என்று.

ஒரு நாள் முடியவில்லை என்று குளிக்காமல் படுத் திருந்தாள். வந்தவன், அவளைப் பிடித்து இழுத்துப் போய், பாத்ரூமில் தண்ணீரைத் திறந்து விட்டு, நிறுத்தி னான்.

அவள் குளிருதுங்க, என்னை விடுங்க என்று எவ் வளவோ... கெஞ்சியும் விடவில்லை. ஜுரம் அடித் துக்கு. அதுவும் பச்சைத் தண்ணீரில் நின்றதும் சேர்ந்து குளிர் தூக்கி... தூக்கிப் போட்டது.



# 4

ஈர உடையுடன் அப்படியே படுத்திருந்தாள்.

ராகேஷ் காயத்திரியைக் கூப்பிட்டான். அவள் வந்து பார்த்துவிட்டு, "ஏன்டா... இப்படி?" என்று திட்டினாள்.

"இவள் காலையில் இருந்து குளிக்காமல், படுத்திருந் தாள், குளிக்காமல் என் அறையில் உனக்கு வேலை யில்லை என்று, பாத்ரூமில் நிறுத்தித் தண்ணீரைத் திறந்து விட்டேன்."

கம்பளியைச் சுற்றி, தைலம் தேய்த்தாலும், குளிர் நிற்கவில்லை. பாத்ரூமில் நிற்கும்போது, குளிர் தாங்க முடியாமல், "என்னங்க..." என்று அவனைக் கட்டிப் பிடித்தாள்.

அவன் அவளைப் பிடித்துத் தள்ளினான்.

குளிர் நிற்கவில்லை என்றதும், ஹாஸ்பிடலுக்குக் கூட்டிச் சென்றனர். அதனால் பயந்து கொண்டு, இப் பொழுது குளித்து விட்டாள்.

இரவில் நரக வேதனை மறுபடியும் ஆரம்பமாயிற்று.

"நீ என்னைப் பணத்துக்காகத்தானே... கல்யாணம் பண்ணிக் கொண்டாய்...!"

அவளுக்கு இதற்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. சொல்லாமல் இருந்தாலும் அடிப்பான். அதனால், "இல்லை," என்றாள்.

"பிறகு எதற்கு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்...? என்னைத் திருத்தவா...? இல்லை, சேவை செய்யவா...?"

அவள் திரு... திருவென விழித்தாள்.

"பணம் இல்லாவிட்டால்... நீ என்னை விட்டுப் போய் இருப்பாய்தானே...?"

அவள் உள் மனது அலறியது. "இல்லை, போக மாட்டேன். உங்களை விட்டு. நான் உங்களைக் கல்யாணம் செய்யும்போது, நீங்கள் பணக்காரர் என்று எனக்குத் தெரியாது.

ஏன்...? எனக்குக் கல்யாணம் என்றே தெரியாது. என் அப்பாவும், சித்தியும் என்னை விற்று விட்டார்கள்!" அவள் கண் கலங்கிக் கண்ணீர் வழிந்தது.

அவன் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. அவளுக்கு அந்த வயசும் இல்லை.

"பணத்துக்காகத்தானே... என் கூட இருக்கே...? இல்லையென்றால்... நீ யாரோடு வேணும்னாலும் ஓடிப் போயிருப்பே... இல்லே...?"

அவளுக்குத் 'திக்'கென்றது. போதையில இவன் என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுகிறான். என்ன செய்வது? இன்று என்ன நடக்குமோ... தெரியவில்லை.

"ஏ...ங்...க இப்ப...டி எல்லாம் பேசுறீங்க. நான் அந்த மாதிரி நினைத்தது கூட இல்லை."

"வேறு என்ன மாதிரி நினைத்தாய்? உனக்கு பாய் பிரண்டு இருக்காங்களா...?" என்றான்.

"எனக்கு அது மாதிரி எல்லாம் இல்லை," என்றாள்.

"பொய் சொல்றே... இவ்வளவு அழகா... இருக்கே... உனக்கு பாய் பிரெண்ட் இல்லை என்கிறே..." என்றான்.

அவள் உண்மையைத்தான் சொல்கிறாள். அவன் நம்பாமல் இப்படிப் பேசுகிறான். அவள் என்ன செய்வாள்.

அவளுக்குக் கை, காலெல்லாம் உதறல் எடுத்தது.

"வா..." என்று அதட்டினான்.

அப்...பா... என்ன முரட்டுத்தனம். அவளுக்கு மூச்சுத் திணறியது. அவள் உடம்பு நடுங்குவதைப் பார்த்து இன்னும் ஆவேசமானான்.

மெதுவாக அணைக்கக் கூடாதா... அவன் அயர்ந்து தூங்கி விட்டான்.

பிரியா எழுந்து சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள். எப்படிக் கேள்வி கேட்கிறான். எனக்குப் பதில் சொல்லக் கூடத் தெரியலியே... எதற்காக இவ்வளவு பெரிய பணக்காரங்க, என்னை வந்து கல்யாணம் பண்ணிக் கொள்ளணும்.

இது மாதிரி அடித்தால்... கேட்பதற்கு ஆள் இல்லை என்றுதானே... பேசாமல் வீட்டில் இருப்பாள், எனக்குக் கேட்க யார் இருக்கா... எத்தனை சுயநலம்! இதே... இவர்கள் வீட்டுப் பெண்ணாய் இருந்தால்... இப்படிப் பண்ணுவார்களா?

தாய் வீட்டிலும் என்னால்... இருக்க முடியவில்லை. கணவன் வீட்டிலும் என்னால் இருக்க முடியவில்லை. நான் என்ன செய்வேன்? எங்கு போவேன்?

இப்படி அடிக்கிறாங்களே... எப்படி நினைவில்லாமல் போகும்? ஆபீசில் வேலை பார்க்கிறான். மற்றவர்களிடம்,

நன்றாகப் பேசிச் சிரிக்கிறான். என்னிடம் மட்டுந்தான் இப்படி நடந்து கொள்கிறான்.

என்னைக் கதற... கதற... அடித்தால்... தான் நிம்மதியாகத் தூங்குகிறான். எத்தனை கெஞ்சுவேன்... வேண்டாங்க என்று. விடுவானா... ஒரு முறை இருமுறை... போதும் என்று எப்படிக் கெஞ்சியிருக்கேன். மறுபடியும்... மறுபடியும்... எப்படி என்னைத் சித்திரவதை செய்வான். இது கூடவா... தெரியாது. இவள் ஏழைதானே... வலிக்காது என்று நினைத்திருப்பானோ...

ஏன்... தான் நான் பிறந்தேனோ... சித்தியிடம் இருக்கும்போதும் அன்பை அனுபவிக்கவில்லை. தன் பிள்ளைக்கு இட்லி கொடுத்துவிட்டு, இவளுக்குப் பழையது போடுவாள். அதையும் முகம் சுழிக்காமல் சாப்பிடுவாள். எதற்கும் ஆசைப்பட மாட்டாள்.

ஆசைப்பட்டால்... தானே குறை சொல்லத் தோன்றும். தம்பியையும், தங்கையையும் பாசமாகப் பார்த்துக் கொள்வாள். சிறு வயதிலேயே... வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்வாள். ஆனால் வயதுக்கு மீறிய வளர்ச்சி. அவள் அம்மா மாதிரி அழகு. நிறம் பார்ப்பவரைச் சுண்டி இழுக்கும் வசீகரம்.

தலைக்குத் தேய்க்க எண்ணெய் இருக்காது. ஆனால் முடி இடுப்புக்குக் கீழ்த் தொங்கும்.

அப்பா... அவரிடம் பேசவே முடியாது. சித்தி பேச விடமாட்டாள். அவரும் பேச மாட்டார். பிரியாவிற்கு ஏக்கமாக இருக்கும். எல்லோரும் அப்பாவுடன் எப்படி இருக்காங்க. நான் மட்டும் பேசக்கூட முடிவதில்லை.

அப்பாவின் முகத்தை நிமிர்ந்து... நிமிர்ந்து பார்ப்பாள். அவர் திரும்பவே மாட்டார். பலகாரங்கள் வாங்கி வந்து



அந்தப் பிள்ளைகளுக்கும், சித்திக்கும், ஊட்டி விடுவார். இவளைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்.

சாப்பிடுவதைக் கொடுக்க வேண்டாம். ஒரு பார்வை, சின்னச் சிரிப்பு என்று கூடவா... இருக்கக் கூடாது.

வீட்டு வேலை செய்யவில்லை என்றால்... அடிதான், அப்பாவிடமும் சொல்லி அடிக்கச் சொல்லுவாள்.

உனக்கு உன் அம்மா மாதிரியே... கெட்ட புத்தி. அதான் இவ்வளவு சீக்கிரத்திலேயே... போய்விட்டாள் என்று அவளைப் பேசுவார். அவளுக்கு மனது கஷ்டமாக இருக்கும். தன்னால் அம்மாவுக்கும் திட்டு என்று அவர்கள் சொல்லும்படி வைத்துக் கொள்ள மாட்டாள்.

உனக்குக் கல்யாணம் என்றார்கள். நான் படிக்கணும்பா... என்றாள் ஏக்கமாக...''

அவள் சித்தி, ''என்னடி படிப்பு வேண்டிக் கிடக்கு உனக்கு. பேசாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டு போ... இல்லையென்றால் வீட்டை விட்டுப் போ...'' என்று பட்டினி போட்டாள்.

பசி... வீட்டை விட்டுப் போ... என்றால், எங்கு போவது? கல்யாணம் என்றாலே... பயமாக இருந்தது.

ப்ளஸ் டூ... படிக்கும் இவளுக்கு, வறுமைதான் தெரியுமே... தவிர, கல்யாணக் கனவுகள் இவளுக்குத் தெரியாது.

ஸ்கூல் விட்டதும், வீட்டுக்குச் சீக்கிரம் போகணும். லேட்டாகப் போனால்... சித்தி எங்கே ஊர் சுற்றி விட்டு வர்றே... என்று அடிப்பாள்.

அதனால் பெல் அடித்ததுமே... வீட்டை நோக்கி நடந்து விடுவாள். மழை பெய்தாலுமே... நனைந்து கொண்டு சென்று விடுவாள்.

அவளுக்கு பிரண்ட்ஸ் என்று யாருமே... கிடையாது. இவள் ஏழ்மையைப் பார்த்து யாருமே... பழக மாட்டார்கள். மதியச் சாப்பாடு என்றுமே கிடையாது.



## 5

இவர்களுக்கு என்னைப் பற்றி எப்படித் தெரியும்? எதனால் இவனுக்குக் கட்டி வைத்தார்கள்? இவன் இவ்வளவு தப்பு செய்கிறானே... ஒரு பெண்ணைக் கட்டி வைக்கலாமா... என்று கூடவா தெரியாது?

இப்படி ஏன்... குடிக்கிறாய் என்று ஒருவரும் கேட்பதில்லை. இவன் அண்ணன் ஷியாமோட தொந்தரவு அதிகம் ஆகிக் கொண்டே போகிறது.

இவனிடம் சொல்ல முடியுமா...?

இவன் ஏற்கெனவே... உனக்கு பாய் பிரண்ட் இருக்கா... என்று கேட்கிறான்.

அது மாதிரி இவனிடம் கேட்க முடியுமா... உனக்கு கேர்ள் பிரண்டு இருக்கா என்று? இவர்கள் அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரி பெண் எடுத்தால்... இப்படி எல்லாம் பிரச்னை வரும் என்றுதான், என் ஏழ்மையைப் பயன்படுத்தி, இப்படிப் பண்ணியிருக்காங்க.

இவளுக்காக யாரும் கேட்க மாட்டாங்க என்று... இன்று வரை என் அப்பா கூட வந்து பார்க்கலே... ஏன்... இப்படிக் கூட பாசம் இல்லாமல் போகுமா...? ஏன்... என்னை அடிக்க மாட்டான்?



மறுநாள் காலையில் கவிதா வீட்டில் இருந்து பொங்கல் சீர் கொண்டு வந்திருந்தார்கள். ''கல்யாணம் ஆகி இத்தனை வருடமாகியும், எனக்குப் பொங்கல் சீர் தருவாங்க!'' என்றாள்.

அவர்கள் எதார்த்தமாய், ''உனக்கு இது தலைப் பொங்கல் தானே... உன் வீட்டில் இருந்து வந்து விட்டார்களா...?'' என்றனர்.

பிரியா... இல்லை என்று சொல்வதற்குள், கவிதா... ''இவர்கள் வீட்டில் இருந்தா... சீர்... இவ வந்து இத்தனை மாதங்களில், சும்மா... கூட வந்து பார்க்கலே... இவ ஒரு அனாதைம்மா... இவளுக்குன்னு யாருமே... இல்லை.

''இன்றுவரை பிறந்த வீட்டுக்குக் கூடப் போகவில்லை என்றால்... பாருங்களேன்.''

பிரியாவுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது. கவிதா நாக்கில் இத்தனை விஷம் இருக்கும் என்று அவள் நினைக்கவில்லை. இவள் சொல்வதை யாரும் மறுத்துப் பேசவில்லை.

ராகேஷும் அங்கு இருந்தான்.

பிரியா... மாடிக்குச் சென்று விட்டாள். அவளுக்கு அழுகை ஆத்திரம் எல்லாம் வந்தது. எப்படிச் சொல்லுகிறாள், அனாதை என்று. ஒரு வார்த்தை கேட்கிறானா... எதற்கு இப்படிச் சொல்றீங்க என்று.

ராகேஷ் இரவு வந்தான். ''அவர்கள் உண்மையைத் தானே... சொன்னார்கள். இதில் உனக்கு என்ன கோபம்? அவங்களை மதிக்காமல், நீ வந்துவிட்டே... இதற்குத் தான் பெரிய இடத்தில் பெண் எடுத்து இருக்க வேண்டும். என் தகுதிக்கு நீ... ஏற்றவளா...?''

காலையில் அவர்கள் பேசியது. இப்பொழுது வந்து இவன் பேசியது எல்லாம் அவளுக்குத் தாங்க முடியாத ஆத்திரத்தைத் தந்தது.

அவளை ஒரு வார்த்தை கேட்கலை. கேட்கவில்லை என்றால்... கூடப் பரவாயில்லை. இப்ப வந்து என்னைத் தானே... பேசுகிறான் என்று மனம் குமுறியது.

அந்த ஆத்திரத்தில், ''தெரியுதில்லே. அப்புறம் எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டீங்க... என்கூட எதுக்கு அப்...ப...படி இருக்கீங்க. பணக்காரி என்றால் இத்தனை மாதம் உங்க கூட இருப்பாளா...? நான் என்பதால்தான் உங்களுடன் இருக்கிறேன்!'' என்றாள்.

''என்னடி சொன்னே...'' என்று அவள் கழுத்தைப் பிடித்து நெருக்கினான். அவளுக்கு மூச்சுத் திணறியது. அவள் விடுங்க எனக் கைகளால் கெஞ்சினாள், கையெடுத்துக் கும்பிட்டாள்.

மூச்சுக்குத் தவியாய்த் தவித்தாள். கண்கள் மேலே செருகின... பின் மெல்ல விட்டான்.

''ஒரு தீபாவளி பொங்கலுக்கு ஒரு துணி எடுத்துத்தர, உன் வீட்டில் துப்பில்லை. உனக்கு எதுக்குடி இந்த வாய்... என் அண்ணி அப்படி என்ன சொல்லி விட்டாங்க... என்று இப்படிப் பேசுறே.

''உன்னை இப்படி அடிக்கிறேனே... உன் வீட்டில் இருந்து, யாராவது வந்து பார்த்தாங்களா... இல்லை. நீதான் என் வீட்டுக்குப் போய்ட்டு வர்றேன் என்று சொன்னியா...?''

அவள் எதைச் சொல்லி அழுவாள்? இவனிடம் கேட்கப் பயந்ததையா... ஆசையை அடக்கிக் கொண்டதையா... அவன் அண்ணியிடம் கேட்டதையா... எதைச் சொல்லுவாள்?

அவன் பேசிக் கொண்டே... பெல்ட்டை எடுத்தான்.

பிரியா... அடிக்கப் போகிறான், என்று தெரிந்து, வேகமாகக் கதவைத் திறக்கப் போனாள். அதைப் பார்த்த அவன், அவளைப் பிடித்து, அவன் குடித்துவிட்டு வைத்திருந்த கண்ணாடி தம்ளரை எடுத்து உடைத்து, அவள் கால் பாதத்தில் கீறினான்.

இரத்தம் கொட்டியது. வலிக்குதுங்க என்று அழுதாள். நிற்க முடியாமல், அவனையே... இறுகக் கட்டிக்கொண்டு, அவன் மார்பிலேயே... மயங்கிச் சரிந்தாள்.

''மம்மீ...'' என்று கத்தினான். காயத்திரி ஓடி வந்தாள். கீழே இருந்த இரத்தத்தையும், பிரியா... மயங்கிக் கிடந்தையும், பார்த்து அலறி விட்டாள்.

''அடப்பாவி, என்னடா... பண்ணினே...? கொன்னே போட்டுட்டியா...?''

பிரியாவைச் சுந்தர் காரில் ஏற்றிக் கொண்டு, ஹாஸ்பிடலுக்குச் சென்றான், கழுத்தும் நெரித்திருந்தது. டாக்டர் பார்த்துவிட்டுத் திட்டினார். ''உங்களுக்கு இதே வேலையா போச்சு. இந்தப் பெண்ணைக் கொன்னாலும் கொன்னுடுவீங்க போல இருக்கே... நானே போலீசுக்குச் சொல்றேன்,'' என்றார்.

''சாரி, டாக்டர். இனி இது மாதிரி நடக்காது. இந்த ஒரு தடவை மட்டும் மன்னித்து விடுங்க டாக்டர்!'' என்று கெஞ்சினான்.

ராகேஷ் போதையில் படுத்துத் தூங்கி விட்டான்.

காலையில் விழித்துப் பார்த்தான். தரையெல்லாம் இரத்தம். இரவு நடந்தது நினைவு வந்தது. அதை மறக்க மறுபடியும் போதையில் மூழ்கினான்.

பிரியா... இரண்டு காலிலும் கட்டுப் போட்டிருந்தது. அவள் டாக்டரிடம், ''டாக்டர்! என்னை விஷ ஊசி போட்டுக் கொன்று விடுங்க. என்னால்... இனித் தாங்க முடியாது,'' என்று அழுதாள்.

சுந்தர் தலையைப் பிடித்துக் கொண்டு, உட்கார்ந்திருந்தான்.

ராகேஷ் இப்படிப் பண்ணுவான் என்று நினைக்கவில்லை. இவன் திருந்தவே... மாட்டானா... ஒரு அறியாப் பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்தது இப்படி ஆகிவிட்டதே.

இப்படியே விட்டால் கெட்ட சகவாசத்தால் இவன் போகாத இடமெல்லாம் போக ஆரம்பிப்பான்.

அவனைக் கண்டிக்கும் வயதில்லை. ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்தால்... திருந்துவான் என்று நினைத்தான். அவன் போட்ட கணக்கு தப்பாகி விட்டது.

அவளை நினைத்து இவளைப் பழிவாங்குகிறான். எதுவும் தெரியாத அந்தப் பெண், இப்படி வதை படுகிறாள்.

இல்லாத ஏழை வீட்டுப் பெண்ணாக இருந்தால்... எந்த ஒரு பிரச்னையும் பண்ண மாட்டாள் என்று நினைத்து இப்படிப் பண்ணினான். இப்போ... இப்படி ஆகிவிட்டது.

ஒரு வாரம் ஹாஸ்பிடலில் இருந்தாள். கால் புண் ஆறினதும், வீட்டுக்கு வந்தாள்.

ராகேஷ் இவளுடன் பேசவில்லை. வேறு எந்த பிரச்னையும் இல்லை.

பிரியாவுக்குத்தான் கஷ்டமாக இருந்தது. சண்டை போட வேண்டிக் கூட பேசுவான். இப்போ... அதுவும் இல்லை.

பிரியா... அவன் முகத்தையே பார்த்தாள். எப்படி அன்று பேசினான். அப்பாவாவது வந்து ஒரு தடவை பார்த்திருக்கலாம். அவன் சொன்னதில்தான் என்ன தப்பு?



## 6

மறுநாள் திடீரெனச் சீக்கிரம் வீட்டுக்கு வந்து, ''வெளியில் ஒரு பார்ட்டி இருக்குது. அதுக்குப் போகணும். நீயும் வா...'' என்றான்.

பிரியாவும், வெளியில் போகிறோம். இன்றாவது பேசினானே... என்று சந்தோசப்பட்டுக் கொண்டு கிளம்பினாள்.

நல்ல லைட் ரோசில் மெரூன் பார்டர் போட்ட சேலை. சின்னச் சின்னச் சரிகை இடையே இழையோடியது.

அங்கங்கே... கற்களிலும், ஜமிக்கியிலும், சின்னச் சின்ன ஜோடிப் புறா... பெரிய ரோஜா மீது அமர்ந்திருப்பது போல் இருந்தது.

தளரப் பின்னிய சடை முழங்காலை முத்தமிட்டது. தலை நிறைய மல்லி. முதன் முதலில் நாம் அவன் கூட

வெளியே போகப் போகிறோம். நல்லா டிரஸ் பண்ணிக் கொள்ள வேண்டும். அப்பத்தான், அவனுக்கு மேட்சாக இருக்கும்.

அவனுக்கு என்ன டிரஸ் போட்டாலும், கம்பீரமாக இருக்கும். நாம் கிராமத்துப் பெண் மாதிரி டிரஸ் பண்ணினால்... இனி வெளியே கூட்டிப் போக மாட்டான்.

நமக்கு எதுவும் தெரியாது என்றுதான் வெளியே கூட்டிப் போக மாட்டேங்கிறானோ...?

இனி அவன் நினைப்பை மாற்ற வேண்டும். நாம் அவனுக்காகத்தான் இருக்கிறோம் என்று உணர்த்த வேண்டும்.

கண்களில் கனவுகளோடும், மனதில் கற்பனைச் சிறகுகளை விரித்தவாறும், சந்தோசமாகக் கிளம்பினாள்.

ராகேஷ் வேகமாக உள்ளே வந்தான். அவளைப் பார்க்காமலேயே... ''சீக்கிரம் வா...'' என்று இரண்டிரண்டு படிகளாகத் தாவி இறங்கினான்.

பிரியாவிற்கு எவ்வளவோ... மனதில் ஆசை இருந்தாலும் அவன் கூடப் போவதில் ஒரு நடுக்கம் இருந்தது.

இருந்தாலும் மனதில் ஒரு நம்பிக்கை. வெளியே கூட்டிப் போய், அநாகரிகமாக நடந்து கொள்ள மாட்டான்.

இவ்வளவு அழகா... அலங்காரம் பண்ணியிருக்கேனே... ஒரு பார்வை... பாராட்டக்கூட வேண்டாம். ம்... என்று பெரு மூச்சு விட்டாள்.

அவள் கீழே வருமுன் ஹாரனைப் பலமுறை அழுத்தி விட்டான்.

வேகமாக ஓடினாள் - நெஞ்சு படபடக்க, அதற்குள் அவளுக்கு வியர்த்து விட்டது. இப்படியே... எத்தனை ஆண்டு வாழப் போகிறாளோ...

கதவைத் திறந்து, உட்கார்ந்து மூடுமுன், காரைச் சர்ரென வேகமாக எடுத்துவிட்டான். தடுமாறி முன்னால் விழுந்தாள்.

இவன் கூட ஏன்... கிளம்பினோம் என்று இருந்தது. வர முடியாது என்று சொல்லி உதைகூட வாங்கி இருக்கலாமா...? உதைக்குப் பயந்து கொண்டும், இவனுடன் வெளியே போக வேண்டும் என்றும் ஆசைப்பட்டது தப்போ...?

அன்று கவிதா... கூட, ''ராகேஷ் உன்னை வெளியே கூட கூட்டிப் போவதில்லையே... அவனுக்கு எங்கே நேரம்? வெளியே... சுற்றுவதற்குப் பல பேர்... படுக்கைக்குப் பல பேர்... என்று ரகவாரியாக வைத்திருக்கானே... உன்னை எங்கே கூட்டிப் போகப் போகிறான்?'' என்று கேவலமாகப் பேசினாள்.

அவளுக்குக் காட்டவே... இப்படித் தைரியமாகக் கிளம்பினாள். என்ன தைரியம்! அவன் சொன்னால்... எதுவா... இருந்தாலும் கேட்டாகணும். அவளுக்குனு என்ன விருப்பு, வெறுப்பு இருக்கு.

சொன்னதைக் கேட்க வேண்டியவதானே... எப்படி மற்றப் பெண்கள் எல்லாம், கணவன்களைக் கைக்குள் போட்டுக் கொள்கிறார்கள். சொன்னதை கேட்பதும், மனைவிக்காகவே... வாழ்வதும், மனைவியின் ஆசைகளைப் புரிந்துகொண்டு, வேலைக்குப் போகும் மனைவியாக இருந்தாலும், அவர்களுடன் வேலையைப் பங்கிட்டுக் கொள்வதும், வெளியே போவதும், சனி, ஞாயிறு, விடுமுறையை என்ஜாய் பண்ணுவதும், எப்படி எல்லாம் இருக்காங்க!

இவன் அப்படி இருக்க வேண்டாம். சாதாரணமா... மிக... மிக... சாதாரணமா... ஒரு வார்த்தை, பேச்சு, அது கூட இல்லையே... சாதாரணக் கூலி வேலை பார்ப்பவர்கள் கூட, இரவு வீட்டுக்கு வந்ததும், மனைவி, குழந்தை என்று சந்தோசமாகத்தானே... இருக்காங்க.

எனக்கு மட்டும் ஏன்...?

பதட்டமாக இருந்தது அவளுக்கு. கார் ஒரு பெரிய ஹோட்டல் அருகில் நின்றது.

இறங்கி ராகேஷ் வேகமாக உள்ளே... போய்விட்டான். பிரியா இறங்கி, அவன் கூடச் செல்லுமுன் மறைந்தான். அவளுக்குப் பயத்தில் நாக்கு உலர்ந்தது.

பின் மெதுவாக அவன் சென்ற திசையை அனுமானித்து ஒரு கதவைத் திறந்து உள்ளே சென்றாள்.

ஒரே இருட்டாக இருந்தது. நின்று நிதானித்துச் சுற்றிலும் கண்களைச் சுழல விட்டாள்.

ராகேஷ் கையில் டம்ளரோடு, பெண்களின் நடுவே... ஆடிக் கொண்டிருந்தான்.

பிரியாவுக்கு மூச்சு வந்தது. பின் அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

போகும்போது தன்னை மறந்து விடுவானோ... என்று, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

நிறைய ஆண்கள், நிறையப் பெண்கள். அவர்களும் தண்ணி அடித்துவிட்டு, எல்லா ஆண்களோடும் ஆடினர்.

ஒருவன் வந்து அவள் பக்கத்தில் அமர்ந்தான். அவள் பயந்து மிரள விழித்தாள்.



"எக்ஸ்கியூஸ் மீ மேடம். ட்ரிங்க்ஸ் சாப்பிடுறீங்களா...?"

அவள் திடுக்கிட்டு, "வே... வேண்டாம்..." என்றாள், திக்கித் திணறி.

அவன் அவளை யோசனையோடு பார்த்தான். "மேடம், என் பெயர் சஞ்சய்!" என்றான்.

அவளுக்கு என்ன பேசுவதென்றே... தெரியவில்லை.. "ம்..." என்று மட்டும் தலையை ஆட்டினாள்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. ராகேஷ் முழுப் போதையில் ஆழ்ந்தான். பல பெண்களைக் கட்டி அணைத்த நிலையில். பிரியாவிற்கு இது புது அனுபவமாக இருந்தது.

அவன் மற்றப் பெண்களிடம் இது மாதிரி இருப்பான் என்று நினைத்துக் கூடப் பார்க்கலே...

ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு ஒரு அறைக்குச் சென்று கதவைச் சாத்தினான்.

பிரியாவிற்கு உடம்பே... ஆடியது. என்னைக் கூட்டி வந்து இப்படி விட்டுவிட்டு அவளுடன் இப்படி... இது மாதிரிதான்... தினமும் இருந்து விட்டு, என்னுடனும்... அவளுக்கு இதயத்தைப் பிடுங்கி, எண்ணெய்க் கொப்பரையில் போட்டது போல் இருந்தது.

பிறகு ராகேஷ் வரவேயில்லை. எப்படி வீட்டுக்குப் போவது, இவளுக்கு வழியும் தெரியாது. அவன் எங்கு போனான்? ஒரு மணி ஆனது.

எல்லோரும் போதையில் தள்ளாடினர். இவள் எழுந்து நின்றாள், கிட்டத்தட்ட எல்லோரும் போயிருந்தனர். ஒரு சிலரைத் தவிர.

இவளுடன் சற்று முன் பேசிய சஞ்சய் நின்றிருந்தான். இவளின் பார்வை அவன் மீது நின்றது. இவனிடம் கேட்கலாமா... வீட்டில் கொண்டு விடுமாறு.

சஞ்சய் அவள் பக்கத்தில் வந்தான். அவள் தயங்கினாள். அவனிடம் பேச... அவனே முன் வந்து, ''என்ன மேடம்?'' என்றான்.

''நான் வீ... வீட்...க்குப் போகணும்,'' என்றாள். குரல் நடுங்க.

''நீங்க யார் கூட வந்தீங்க...?''

தலை குனிந்தாள். ''என் ஹஸ்பெண்டோட...''



# 7

''இப்ப அவர் எங்கே...?''

''இங்...கு தான் இருந்தார். இப்ப... கா...ணவில்லை''

''சரி, வாங்க,'' என்றான்.

பிரியாவின் கண் கலங்கி விட்டது. விட்டால்.. எங்கே.. அழுது விடுவாளோ... என்று வாயைப் பொத்திக் கொண்டாள்.

பாவி இப்படிப் பண்ணி விட்டானே... நான் இவன் கூட வர்றேன் என்றா... சொன்னேன். இப்படி கூட்டி வந்து தெரியாத இடத்தில் விட்டு விட்டுப் போய் விட்டானே...

''என்னங்க சிஸ்டர், என் மேல் பயமா...'' என்றான் சஞ்சய்.

''இல்லை,'' என்று தலையாட்டினாள்.

வீட்டின் முன் இறக்கி விட்டான்.

''ரொம்ப நன்றி. அண்ணா... இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்.''

''பரவாயில்லைம்மா... நான் வருகிறேன். இல்லை, உள்ளே வந்து விட்டுவிட்டுப் போகவா...?''

அவள் பதட்டமாக, ''வேண்டாம், நான் போய்க்கிறேன். நீங்க போங்க,'' என்றாள்.

பிரியா உள்ளே போய், அறைக் கதவைத் திறந்தாள். அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

அவள் ஒரு தலையணையை எடுத்துக் கீழே போட்டுப் படுத்தாள். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. விடிய விடிய அழுதாள்.

எவ்வளவு சந்தோசமா கிளம்பிப் போனோம். ஒரு நிமிடம் நான் சந்தோசப் படக் கூடாது. அதற்கு ஒரு வாரத்திற்கு நான் அனுபவிக்கணும்.

அவனின் நடை, கம்பீரம், அவன் போடும் டிரஸ், அவனுக்கு அத்தனை பொருத்தமாக இருக்கும். அவன் கூடச் சென்றது. அவளுக்கு அத்தனை கர்வமாக இருந்தது. அதை அடுத்த நிமிடமே அழித்து விட்டான்.

காலையில் எழுந்து, ''எப்படி இங்கு வந்தே...?'' என்றான்.

அவளுக்கு ஆத்திரமாக வந்தது. பதில் பேசாமல் இருந்தாள்.

அவளைப் பிடித்து இழுத்து, சிகரெட் புகையை அவன் வாயில் இருந்து, அவள் வாய்க்குள் ஊதி விட்டான்.

அவளுக்கு நெஞ்சு எல்லாம் எரிந்தது. இருமல் வந்து, அந்த வாடை தாங்காமல், வாந்தி எடுத்தாள்.

''என்னடி... நான் கேட்ட கேள்விக்கு இன்னும் பதில் வரலே...'' என்று சிகரெட் நுனியை அவள் முதுகில் வைத்து அழுத்தினான்.

அவள் துடித்து விட்டாள். கண்ணில் நீரோடு இரவு வந்ததைச் சொன்னாள்.

''அவன் யாருடி...?''

''எ... எ...னக்...குத் தெரியாது...''

''தெரியாமல் எப்படிக் கூட்டி வருவான்...?''

''உண்மையிலேயே... எனக்கு யார்னு தெரியாது. உங்களைக் காணலை என்றதும், நான் பயத்தில் அழுது விட்டேன். அவர்தான் என்ன என்று கேட்டு இங்கு கூட்டி வந்து விட்டுப் போனார்,'' என்றாள்.

''இந்தக் காலத்தில் எவன்டி சும்மா... உதவி செய்வான். எதற்கும் ஒரு விலை இருக்குடி... நீ என்ன கொடுத்தே...? உன்னையா...?'' கேள்வி சாட்டையாய்ச் சுழன்றது.

பிரியா அதிர்ந்தாள். இவன் என்ன சொல்கிறான்? அவன் செய்த உதவிக்கு இப்படி ஒரு அவப் பெயரா?

அவள் சடையைப் பிடித்து இழுத்து, ''சொல்லுடி... என்ன கொடுத்தே...'' அவ தலையில் இருந்த பூ எல்லாம் கீழே உதிர்ந்தது.

அவன் பார்த்து ரசிக்கட்டும் என்று அலங்காரம் பண்ணினாளே... இப்போ... அவனே அவளை அலங்கோலப் படுத்தினான். ஒவ்வொரு அடியும், இடியாய் இறங்கியது.

அவளுக்குப் பொறுமை பறந்தது. ''ஏன்...? நீங்க என்னைக் கூட்டி வந்து இருக்க வேண்டியதுதானே... விட்டுவிட்டு வந்ததுனாலேதானே... நான் அவனுடன் வந்தேன்.''

''நான் விட்டு விட்டு வந்தா... எவன் கூடயாவது வருவே... அப்படித்தானே... அப்ப நான் உன் கூடப் படுக்க வில்லை என்றால்... நீ அடுத்தவங்கூடப் படுப்பே... இல்லே...'' அவனின் வார்த்தை திராவகமாய் வீசியது.

அவள் பதில் சொல்லத் தெரியாமல், அழுதாள். இப்படி எல்லாம் அவள் நினைத்துப் பார்க்கவில்லை. இவன் விட்டு விட்டு வந்ததால்தானே அவன் கூட வந்தாள். ஒரு மிகச் சாதாரண உதவி. இதுக்குப் போய் இப்படி எல்லாம் பேசுகிறானே...

அவள் ரசித்து அழகாகக் கட்டிய சேலையைக் கிழித்து எறிந்தான். அவளையும் அது போலவே...

''உனக்கு என்ன தைரியம் இருந்தா... எதிர்த்துப் பேசுவே... நான் விட்டு விட்டு வந்தா... வரத் தெரிய வில்லை என்றால்...

''எங்காவது போய்ச் சாக வேண்டியதுதானே... அதுவும் வந்தது தெரியாமல், கீழே படுத்துருக்கே... என்னை அவமானப் படுத்தவா...

''உன்னை விட்டு விடுவேன் என்றா நினைக்கிறே...''

அவள் எவ்வளவோ... கெஞ்சினாள். ''எனக்கு அவ னைத் தெரியாதுங்க... என்னை விடுங்...க. இனிமேல் அது மாதிரி வர மாட்டேன்,'' என்று அழுதாள்.

அவள் அழுதழுது ஓய்ந்து போனாள். இவன் மட்டும் ... கண் முன்னாடியே... பல பெண்களுடன்,

ஆடவில்லையா...? அந்தப் பெண்ணை கூட்டிக் கொண்டு அறைக்குள் போனானே... நான் இதைப் பற்றி இவனிடம் கேட்க முடியுமா...?

இவன் அவள்களுடன் இருந்து விட்டு, என்னை வந்து அடிக்கிறான். அப்படியே மயங்கிப் போனாள்.

ராகேஷ் ஆபீஸ் போய்விட்டான்.

பிரியா எழுந்திருக்கவே... இல்லை, இரவு பதினொரு மணிக்குத்தான் வந்தான்.

பிரியா அப்படியே... கிடந்தாள். அவன் வந்து ஒரு நிமிடம் அவளையே... பார்த்துக் கொண்டிருந்தான். பின் போய்விட்டான்.

குளித்துவிட்டு வந்து மறுபடியும் குடித்தான். அவன் கண்கள் சிவந்து கோவைப் பழமாயின. ஒரு சி.டி.யை எடுத்துப் போட்டான். அதில் மோனிஷா, சிரித்தபடி அவனைக் கட்டிக் கொண்டாள். அவனுக்குக் கோபம் தலைக்கேறியது. டி.வி.யை அணைத்தான்.

''நீ இதுக்காகத்தானேடி... நீ போனே...'' என்று படுக்கையில் படுத்தான்.

பிரியா மூச்சுத் திணறவும், விழித்துப் பார்த்தாள். அவன் பக்கத்தில். இன்னும் இவன் போகவில்லையா...? அவளுக்கு ஒரு நாள் முழுவதும், மயக்கத்தில் இருந்தது கூட நினைவில்லை. பசி உயிர் போயிற்று. அசையக்கூட முடியவில்லை.

வலிக்குது என்று சொல்ல முடியுமா...? பேசாமல் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டாள். கடித்த இடத்தில் இரத்தம் கசிந்தது.



அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. அதை உணர்ந்த அவன், மேலும் மிருகமானான்.

அவள் உடம்பு நடுங்கியது. அவளால் அந்த நடுக்கத்தை நிறுத்த முடியவில்லை. அவனையே... இறுகக் கட்டிக் கொண்டாள்.

அதை அறிந்த அவன், அவளைப் பிடித்து ஒரே தள்ளாகத் தள்ளினான். அவள் கட்டிலில் இருந்து, கீழே விழுந்தாள்.

அவளுக்கு அழக்கூடச் சக்தி இல்லை. என்றைக்குமே... அவளாக அவனை நாடக்கூடாது. அதை ஒரு துளி உணர்ந்தாலும், அவளை அவமானப் படுத்தி விடுவான்.

இதுவரை அவள், அவனுக்கு ஒரு முத்தம் கூடக் குடுத்ததில்லை. அவன் அனுமதிக்க மாட்டான். அதற்கு அவளுக்கு அவகாசமும் இருக்காது. அவள் எதையும் வெளிப்படுத்த முடியாது.

அவனுக்கு என்ன தேவையோ... அதை அனுபவித்து விட்டுக் கசக்கித் தூர எறிந்து விடுவான்.



## 8

அவளைப் பற்றி அவன் சிந்திக்கவே இல்லை. ஒரு நாள் இரவு அவன் வீட்டுக்கு வரவேயில்லை. அவள் பயந்து போனாள்.

சுந்தர் அறையைத் தட்டினாள். அவன் வந்து. ''என்னம்மா...? இந்த நேரத்தில்...?''

"அவர் இன்னும் வீட்டுக்கு வரலே அண்ணா..." என்று அழுதாள்.

"சரி. நீ பயப்படாதே... பாக்டரியில் வேலை இருக்கு. அங்கு போயிருப்பான்."

"எதுக்கும் போன் பண்ணிக் கேளுங்க, அண்ணா..."

சுந்தர் போன் போட்டான். கிடைக்கவேயில்லை.

அவனாகவே, "அவன் பிசியாக இருப்பதால் வேலை நேரத்தில் தொந்தரவு கொடுத்தால் பிடிக்காது. நீ போய்ப் படு," என்றான்.

சுந்தருக்குத் தெரியும். அவன் எங்கு போயிருப்பான் என்று. மூன்று நாளாக அவன் வரவில்லை. கல்யாணம் ஆகி இத்தனை மாதங்களில் அவன் வீட்டுக்கு வராமல் இருந்ததில்லை.

பிரியா ரொம்ப பயந்தாள். காரை வேகமாக ஓட்டுவானே... எதுவும் ஆகி இருக்குமா...? கடவுளே... அவனைக் காப்பாற்று.

மறுநாள் காலையில் ஷியாம், பிரியாவிடம், "என்ன நேற்று இரவு அவன் வரவில்லை என்று அழுது கொண்டிருந்தாய். ஒரு இரவு கூட, அவனை விட்டு உன்னால் இருக்க முடியவில்லையா...?

"அவன் உன்னை இப்படிப் படுத்தியும், இந்த மாதிரி விட்டு விட்டு இருக்க மாட்டேங்கிறியே... என்னை மாதிரி, மனைவியைப் படுக்கையில் பூ மாதிரி கையாண்டால் நீ எப்படி இருப்பே... அப்பக்கூட கவிதா... துடித்துப் போவா... காலையில் எழுந்திருக்கவே முடியவில்லை என்று. நீ எப்படித்தான் தாங்குகிறாயோ... இரவெல்லாம் கத்துகிறாய். விடிந்தால் டக் டக் கென, மாடிப் படியில் இறங்கி வருகிறாய், பாவம் நீ... எப்படித்தான் உன்னால் முடிகிறதோ..." என்று அனுதாபப் படுவது போல், கிண்டல் அடித்தான்.

கண்களை இறுக மூடிக் கொண்டு, உதட்டைக் கடித்து, ஆத்திரத்தை அடக்கினாள்.

"நீ வர்றீயா... நான் உன்னைப் பூ மாதிரி வைத்துக் கொள்கிறேன்," என்றான்.

அவளுக்கு உடம்பே பற்றி எரிந்தது. "முதலில் உன் பொண்டாட்டியை என் புருசனிடம் அனுப்பு. பிறகு நீ சொல்வதைப் பற்றி யோசிக்கிறேன்," என்றாள் ஆத்திரமாக.

அவன், "என்னடி சொன்னே... உனக்கு அவ்வளவு திமிரா... உன்னை என்ன செய்கிறேன் பார்..." என்று வெடித்தான்.

"இப்படி பொம்பளைப் பொறுக்கியா அலையும் போதே... உனக்கு இவ்வளவு ஆணவம் இருக்கே... இன்னும் உன்னை நல்ல முறையில் வைத்திருந்தா.. நீ எப்படி இருப்பே...

"அவரைச் சொல்ல உனக்கு என்ன யோக்கியதை இருக்கு. நீ என்ன ரொம்ப ஒழுங்கோ... அப்படி இருப்பவன்தான், இப்ப வந்து என்னிடம் இப்படி பேசுறியா...? நீயும் ஒரு பொறுக்கிதானே...?"

அவன் அவளை அடிக்கக் கை ஓங்கினான். அதற்குள் அவள் சென்று விட்டாள்.

ஷியாம் பற்களை நற... நற... வெனக் கடித்தான்.

"மூன்று நாட்களாக அவன் எங்கே... போயிருக்கான் என்று உனக்குத் தெரியுமா? பொறுக்கத்தான்.

அவனுக்கு இதே... வேலைதான். அது தெரியுமா... உனக்கு...?''

''எனக்கு எல்லாம் தெரியும். அதைப் பற்றி நீங்க கவலைப்பட வேண்டாம். உங்க வேலையை மட்டும் பாருங்க.''

மூன்று நாட்களாகப் பிரியா தூங்கவில்லை. எங்கு போனான்? சுந்தரிடம் சொன்னாலும், எதுவும் கண்டு கொள்ளவில்லை. எந்த ஊருக்குப் போயிருக்கான் என்றும் தெரியவில்லை. அவன் சொன்னது போல்... ''அதுக்காகத்தான்'' போயிருப்பானா...? இவனுக்கு என்ன குறை. இப்படிப் பண்ணுகிறான். இருந்தாலும் மனம் துடித்தது. ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா...? ஒரு போனாவது பண்ணக்கூடாதா..? என்று கண்ணீர் வடித்தாள்.

மூன்று நாள் சென்று வந்தான். வந்தவனிடம், ''என்னங்க, எங்கே... போயிருந்தீங்க. ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போயிருக்கக் கூடாதா...? நான் பயந்து விட்டேன்...'' என்றாள்.

ஒரு அறை விட்டான். ''நீ யாருடி, கேள்வி கேட்க...?'' அவளுக்குக் கோபம் வந்தது. மூன்று நாட்களாகத் துடித்த துடிப்பு நினைப்பு வந்தது. அதை நினைத்து, ''நா...ன் உங்க பொண்டாட்டி. அதான் கேட்கிறேன்.''

''யாருடி... சொன்னது, நீ என் பொண்டாட்டி என்று. உன்னை நான் ஒரு நாளும் என் பொண்டாட்டி என்று நினைத்ததில்லை.

''எனக்குப் பொண்டாட்டியா... வர உனக்கு என்ன தகுதி இருக்கு...?

''எனக்கு மனைவினா... அவ ஒருத்தி மட்டுந்தான். என் மனதில் அவளுக்கு மட்டுந்தான் இடம். அந்த இடத்தில் நீ... நினைக்கவே... எனக்குக் கேவலமா இருக்குது!'' என்று சிரித்தான்.

அவளுக்கு நிற்க முடியவில்லை. பயத்தில் உதடு நடுங்கியது. ''இப்ப மூன்று நாட்களாக நான் போய்ட்டு வந்தேனே... அவள்களுக்கும், உனக்கும் எந்த ஒரு வித்தியாசமும் இல்லை.''

அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. ''எப்பப் பார், அழுதுகொண்டு. இந்த மூன்று நாட்களாக நான் எப்படி சந்தோசமாக இருந்தேன் தெரியுமா... ஒவ்வொருத்தியும். என்ன அழகு, என்னை எப்படி சந்தோசப் படுத்தினாளுங்க தெரியுமா...? உன்னை மாதிரியா... கத்தி ஊரையே.. கூட்டிக்கிட்டு...

''என் கண் முன்னாடி நிக்காதே...'' என்று அவளைப் பிடித்துத் தள்ளினான்.

அவள் சுவரில் மோதிக் கீழே விழுந்தாள். நெற்றியில் காயம் பட்டு, இரத்தம் வழிந்தது.

''அவள்களை எல்லாம் இப்படி அடிப்பீங்களா...?'' என்றாள்.

''எதுக்குடி அடிக்கணும். நான் என்ன நினைக்கிறேனோ... அப்படி நடப்பாளுங்க...

''உனக்கு ரொம்ப தைரியம் வந்துடுச்சு... அதான் நீ பேச ஆரம்பிச்சட்டே...''

''ஏங்க... நீங்க மூன்று நாளா... வரலைன்னு, நான் எப்படித் துடிச்சுப் போனேன். நான் சாதாரணமாகத்தானே கேட்டேன்... எதுக்கு இப்படி அடிக்கிறீங்க...?''

அவள் வாயில் ஒன்று போட்டான். உதட்டில் பல் குத்தி இரத்தம் கொட... கொட..வெனக் கொட்டியது.

அவளுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. அவள் இந்த மூன்று நாட்களாகத் தவித்த தவிப்புக்கு, எந்தப் பலனும் இல்லை. இவனுக்காக எத்தனை தவிப்பு, எங்கே... போனானோ... எதுவும் ஆகிவிட்டதா... என்று எப்படித் துடித்தேன். அத்தனை தவிப்பையும், ஒரே... நொடியில் அடக்கி விட்டானே... இவன் ஏன் வந்தான் என்று இருந்தது.

அவள் கீழே... போகவே இல்லை. எப்படிப் போவாள்... உதடு, கன்னம் எல்லாம் வீங்கி இருந்தன.

ராகேஷ் சாப்பிட்டு விட்டு வந்தான். இவளைக் கண்டுக்கவே யில்லை.

படுக்கும்போது... ''வா... என்று உன்னை அழைக்கணுமா...'' என்று உறுமினான்.

அவளுக்கு உடம்பு வலியை விட, மன வலிதான் அதிகம் இருந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவள்களை இப்படி எல்லாம் பண்ணியிருப்பானா..? நான் அவன் மனைவி இல்லை என்கிறானே... அப்புறம் ஏன்...? அதான் சொல்கிறானே... அவள்களும், நீயும் ஒன்று என்று... அவள் உடம்பு குலுங்கியது. எப்படி எல்லாம் பேசுகிறான்.

இவன் யாரைச் சொல்கிறான். அவதான் என் மனைவி என்று. யார் அவள்... அப்புறம் ஏன்... என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்?



# 9

ராகேஷின் பிறந்த நாள் அன்று. இது பிரியாவிற்குத் தெரியாது.

காலையில் சீக்கிரம் குளித்துவிட்டுத் தலையைக் காய வைத்துக்கொண்டு பால்கனியில் இருந்த ரோஜா செடியில் ஒரு பூவைக் கிள்ளி, காதோரம் செருகிக் கொண்டு, தோட்டத்தைப் பார்த்தாள்.

ராகேஷ் இரவு எத்தனை மணிக்குத் தூங்கினாலும், காலை ஐந்து மணிக்கு எழுந்து விடுவான். பிரியாதான், எப்போ... விழிப்பு வருதோ... அப்போதான் எழுந்திருப்பா... அவளை எழுப்ப மட்டும் மாட்டான்.

ராகேஷ் ஜாகிங் போய்விட்டு, குளிக்க அறைக்கு வந்தான். இந்த விடிகாலையில் குளித்து விட்டு, ஒரு ஓவியம் போல் பிரியா நிற்பதைப் பார்த்தான்.

ஓசைப் படாமல் பின்னால் வந்து, அவளை அணைத்தான். அவள் கூந்தலில் முகம் புதைத்துப் பின் அவளைத் திருப்பி, அவள் பவள வாயில் முத்தம் இட்டான்.

அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. இந்த ஒரு வருடத்தில் அவன் இந்த மாதிரி அணைத்ததில்லை.

அவன் கை வளைவில் அவளை வைத்துக் கொண்டு, 'இன்று எனக்குப் பிறந்த நாள்!' என்றான்.

அவள் திகைத்து விழித்தாள். இவன் நேற்று வரை ...டம் இப்படிப் பேசியதில்லை.

மெல்ல அவனிடம், "மெனி.. மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆப் த டே..." என்றாள்.

"அவ்வளவுதானா...?" அவன் முகத்தில் புன்னகை, அவள் இதுவரை பார்த்தறியாதது.

அவள் தன்னிடம் என்ன இருக்கு இவனுக்குத் குடுக்க என்று நினைத்தாள். பின் முகம் மலர, ஆசையாக அவன் கன்னத்தில் தன் பவள இதழை மென்மையாகப் பற்றி எடுத்தாள்.

ஒரு முறுவலோடு அவளிடம், "உனக்கு எப்ப பிறந்த நாள்?" என்றான்.

அவள் தயக்கத்தோடு... "எனக்கும் இன்றுதான்!" என்றாள்.

அவன் சிரித்தான். "பரவாயில்லையே... இரண்டு பேருக்கும் ஒரே நாளில்..." என்று சொல்லி விட்டுப் போனான்.

காலை டிபன் அமர்க்களப்பட்டது.

ராகேஷ் எல்லோருக்கும் டிரஸ் வாங்கியிருந்தான். பிரியாவைத் தவிர. அவள் முன்னாடியே அத்தனை பேருக்கும் கொடுத்தான். வேலைக்காரர்கள் உள்பட. பிரியா எதுவும் பேசவில்லை. இன்றுவரை அவன் அவளுக்கு ஒரு முழப் பூ கூட வாங்கிக் கொடுத்த தில்லை.

அன்று மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்தான். மதியமும் பெரிய விருந்து. காயத்ரி சாப்பாட்டைப் பிரியாவைப் போடச் சொன்னாள்.

அவள் இன்றுவரை அவனுக்குப் பரிமாறியதில்லை.



எல்லோரும் மதியம் வீட்டுக்கு வந்திருந்தனர். பிரியா விற்குக் கை காலெல்லாம் நடுங்கியது.

ராகேஷிற்கு ரசம் போடும்போது, கை நடுக்கத்தில் ஒரு டம்ளர் தண்ணீரைக் கொட்டி விட்டாள். அது சாப் பாட்டில் கூட படவில்லை. ஓரமாகத்தான் கொட்டியது.

ராகேஷுக்குக் கோபம் வந்துவிட்டது. காயத்திரி சமா தானப்படுத்தி ஊட்டி விட்டாள்.

பிரியா நடுங்கினாள். என்ன செய்யப் போறானோ தெரியவில்லை என்று. இவள் அறைக்குள் வந்ததுமே... அவளைக் கூப்பிட்டு, இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டான்.

பார்ப்பவர்களுக்கு அது சாதாரணமாக இருக்கும். ஆனால் அவன் பிடி இறுகி, கை அவள் மணிக்கட்டைத் திருகியது. வலி உயிர் போயிற்று.

"நீ வேண்டும் என்றுதானே... தண்ணீரைக் கொட்டி விட்டாய்."

"இல்லங்க. நான் தெரியாமே... கை நடுங்கியதில் தள்ளி விட்டு விட்டேன்!" என்றாள்.

"பொய்!" என்றான் அழுத்தமாக...

"இல்லீங்க... இனி நான் அது மாதிரி நடந்து கொள்ள மாட்டேன். விடுங்க. வலிக்குது!" என்று கெஞ்சினாள்.

அவன் விடவில்லை. அவளுக்குத் தெரியும், இந்தத் தண்டனை எதற்கு என்று. தண்ணீர் கொட்டியதற்கு அல்ல. அவளின் சிறு புன்னகை, சந்தோசம், அதை அவன் உடனே... அழிக்க வேண்டும். இதைக் காலையி லேயே எதிர்பார்த்தாள்.

அவளுக்குக் கைவலி தாங்க முடியவில்லை. இரண்டு கைகளிலும் மணிக்கட்டில் நல்லா வீங்கி விட்டது. அசைக்கக்கூட முடியவில்லை.

ராகேஷ் போய்விட்டான். பிரியாவிற்கு அழுகையை நிறுத்த முடியவில்லை. எல்லோருக்கும் டிரஸ் கொடுத்தானே... எனக்கு ஒரு சேலை எடுத்து வந்து கொடுத்தால் என்ன, என் பிறந்த நாள் என்று தெரிந்தும் கூட... நான் என்ன அவனுக்குக் கொடுத்தேன், அவன் எனக்குக் கொடுக்க... என்று அழுதாள்.

மாலைதான் வந்தான். வந்தவன் டிரஸ் பண்ணிக் கொண்டு, கிளம்பிப் போய்விட்டான்.

ஆறு மணிக்கு எல்லோரும் கிளம்பினர். ப்ரியாவைக் காணவில்லை என்றவுடன், காயத்திரி மேலே வந்தாள். பிரியா கிளம்பாமல் இருந்ததைப் பார்த்து, ''நீ இன்னும் கிளம்பவில்லையா...?'' என்றாள்.

''எங்கே... அக்கா...?''

''ராகேஷுக்கு இன்று பிறந்த நாள் அல்லவா? அதான் இன்று ஹோட்டலில் பார்ட்டி. ஏன்...? உன்னிடம் அவன் சொல்லவில்லையா?''

''இல்லை அக்கா... எனக்குத் தெரியாது. அவர் என்னிடம் எதைத்தான் சொல்லுகிறார். நீங்கள் போய்ட்டு வாங்க, நான் வரவில்லை.''

''பரவாயில்லை. வா... பிரியா... உன் கணவன் தானே... அவன் குணம் அப்படி. நீயும் பிடிவாதம் பிடிக்கலாமா...? நீதான் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போகணும்.''

''அக்கா, அவர் சொல்லவில்லை என்று எனக்குக் கோபமில்லை. இங்கே பாருங்க. என் கையை... எப்படி வீங்கி இருக்குது. நான் எப்படி வர முடியும். என்னால் சேலை கூட கட்ட முடியாது,'' என்றாள்.

கையைப் பார்த்த காயத்திரி, அதிர்ந்தாள். ''ஏன்... இப்படி வீங்கியிருக்குது? அவன்தான் இப்படிப் பண்ணினானா?'' என்றாள்.

''..........''

காயத்திரி அவள் தலையைக் கோதிவிட்டாள். பின், ''பத்திரமா இரு. நான் போய்ட்டு வர்றேன்,'' என்று விட்டுப் போய்விட்டாள்.

இரவு ரொம்ப நேரம் கழித்துத்தான் வந்தான் ராகேஷ். வந்தவன் பிரியாவை எழுப்பினான்.

''ஏன்டீ... நீ வரவில்லை? என்னை அவமானப் படுத்தத்தானே...'' என்று ஓங்கி அறை விட்டான்.

என்கிட்டே... சொன்னீங்களா... என்று கேட்க நா... துடித்தது. கேட்டால் வேற வினையே வேண்டாம். இன்னும் என்ன செய்வானோ... என்று பயந்து கொண்டு பேசாமல் இருந்தாள்.



## 10

''என்னடி நான் கேட்கிறது உன் காதில் விழவில்லையா...?'' என்று காதோடு அறைந்தான்.

தோடு உடைந்து கீழே உருண்டோடியது.

அவள் கை இரண்டையும் அவன் முன் காண்பித்தாள். ''கை வீங்கி இருக்கு. நான் எப்படி வர முடியும். சேலை விலகினாக்கூட... என்னால் இழுத்துவிடக் கூட முடியாது,'' என்றாள். சின்னக் குரலில். அழுகை தொண்டையை அடைத்தது.

வீங்கிய கையைப் பிடித்தான் இறுக்கமாக. ''ப்ளீஸ்... விடுங்க. வலிக்குது. நான் வேண்டும் என்று வராமல் இருக்கவில்லை. உங்க பிறந்த நாள் அதுவுமா... நான் வராமல் இருப்பேனா... என்னை நம்புங்க...'' என்று அவன் காலில் விழுந்தாள்.

''அவள் என் பிறந்த நாளைக்கு, எத்தனை கிப்ட் கொடுத்தாள் தெரியுமா...? அவ பார்ட்டியின்போது எத்தனை அலங்காரமாய் என் கூட நின்றாள் தெரியுமா...?

''நீ என்னை மதிக்கவேயில்லை. அப்படித்தானே...?''

''இல்லைங்க... அப்படி எல்லாம் இல்லை. எனக்கு உங்களை விட்டா... வேற யார் இருக்கா... உங்களைப் போய் மதிக்காமல் இருப்பேனா...?

''கையை விடுங்க. வலிக்குது!'' என்றாள்.

''சீ... நல்ல நாளும் அதுவுமா... எப்பப் பார், அழுது கொண்டே...'' என்று அவளைப் பிடித்துத் தள்ளினான்.

மறுநாள் காயத்திரி பிரியாவை ஹாஸ்பிடலுக்குக் கூட்டிப் போனாள்.

ஒரு வாரமாக ரொம்ப சிரமப்பட்டாள் பிரியா. ராகேஷ் ஏன் என்று கேட்கவில்லை.

ஞாயிறு மதியம். ராகேஷ், காயத்திரி மடியில் தலை வைத்துப் படுத்திருந்தான்.



பிரியாவிற்கு ஏக்கமாக இருந்தது. அவள் தாயன்பு, தந்தையன்பு, எதையும் அனுபவித்ததில்லை. கணவனிடமும் அந்த அன்பை எதிர்பார்க்க முடியவில்லை.

ஒரு நாளாவது, தன் மடியில், இல்லை... தன்னை அவன் மடியில் படுக்க வைத்திருப்பானா?

பிரியா வந்ததைப் பார்த்து, காயத்திரி எழுந்தாள். ''ராகேஷ், எழுந்திரி,'' என்றாள்.

''ஏ... மீ...'' என்றான்.

''பிரியா வந்திருக்கா.. அவளுக்குச் சாப்பாடு ஊட்ட வேண்டும்.''

''ஏன்...? அவளுக்குச் சாப்பிடத் தெரியாதா?''

''சாப்பிடத் தெரியும். நீதான் கையை ஒடித்து விட்டாயே...''

பிரியா பயந்து கொண்டு, ''வேண்டாம் அக்கா... நான் இரவு சப்பிட்டுக்கிறேன்,'' என்றாள்.

''பிரியா... யா... இங்கே வா.. காலையிலும் சாப்பிடவில்லை. இப்பவும் வேண்டாம் என்றால் என்ன அர்த்தம். வா... நான் பிசைந்து ஊட்டி விடுகிறேன்,'' என்றாள்.

பிரியா தயங்கினாள். ராகேஷ் தலையை எடுத்துக் கொண்டான்.

காயத்திரி வந்து சாதத்தை ஊட்டி விட்டாள். பிரியாவிற்குக் கண் கலங்கியது.

சாயந்திரம் காபியோடு மாடிக்கு வந்தான்.

ராகேஷ் காபியைக் குடித்து பிரியாவைப் பிடித்து அவள் வாய்க்குள் தன் வாயில் இருந்த காபியைக் குடிக்க விட்டான்.

பிரியாவும் சூடு தாங்காமல் டபக்.. டபக் கென்று விழுங்கினாள்.

சூடு தாங்காமல், அவள் உதடு சிவந்து விட்டது. அதைப் பார்த்த அவன், அந்த உதட்டை அப்படியே கவ்வினான். அவனிடம் மென்மை என்பதே... கிடையாது. அத்தனை முரட்டுத்தனம்.

அவன் குளித்துவிட்டு வந்தான், அவள் திருதிருவென விழித்துக் கொண்டிருந்தாள்.

''என்னங்க...'' என்றாள் மென் குரலில்.

''என்ன?'' என்பது போல் பார்த்தான்,

''என...க்..கு இந்த நைட்டியைப் போட்டு விடுங்க.'' அவன் ஒரு கணம், அப்படியே நின்றான். பின் நைட்டியை எடுத்துப் போட்டு விட்டு, ஜிப்பை இழுத்து விட்டான்.

அவன் அவளை யோசனையோடு பார்த்தான். அவள் தலை குனிந்தாள்.

ஒரு நாள் அதிகாலையில் மோனிஷா ராகேஷ் வீட்டுக்கு வந்தாள். நேராக ராகேஷின் படுக்கை அறைக்குச் சென்றாள்.

பிரியா படுத்திருந்தாள். ராகேஷ் கண்ணாடி முன் நின்றிருந்தான். வந்தவள் ராகேஷைக் கட்டித் தழுவினாள்.

''டார்லிங்... என்ன இப்படி இளைத்து விட்டீங்க...'' என்று கொஞ்சினாள்.

ராகேஷ் அவளைப் பிடித்துத் தள்ளி நிறுத்தினான். அதற்குள் பிரியா விழித்து விட்டாள். அவசரமாக எழுந்தாள்.

அவனைப் பார்த்த மோனிஷா... ''நீ யார்டி, என் டார்லிங் கூட. வெளியே போடீ...'' என்றாள்.

மோனிஷாவே டம்ளரில் ஊற்றிக் குடிக்கக் கொடுத்தாள். அதை அவன் வாங்கிக் கொண்டான்.

இதைப் பார்த்த பிரியா பயந்து போய் எழுந்து நின்றாள். அவளால் நிற்க முடியவில்லை. அவள் இப்போது மூன்று மாதம். இது ராகேஷுக்கு கூடத் தெரியாது.

பிரியாவைப் பார்த்தவள் வேகமாக அவள் பக்கம் சென்றாள். ''போடீ... வெளியே.. கொஞ்சங்கூட மேனர்ஸ் இல்லை.''

அவள் மேலே இருந்த பெட்ஷீட்டைப் பிடித்து இழுத்தாள். பிரியா இறுகப் பிடித்துக் கொண்டு பயத்தில் அலறினாள்.

அவளை அறையப் போனாள். வேகமாக ராகேஷ் போய் மோனிஷா கையைப் பிடித்தான்.

மோனிஷாவை ஓங்கி ஒரு அறை விட்டான். ''போடீ வெளியே!'' என்று கத்தினான்.

மோனிஷா ஆடிப் போய்விட்டாள். தன் அழகாலும், சாதுரியப் பேச்சாலும், அவனை மறுபடியும் மடக்கி விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டாள். அவள் போட்ட திட்டம், இப்போது ஆட்டம் கண்டது. பிரியாவை வாய்க்கு வந்தபடி திட்டினாள்.

''போறீயா... இப்ப இல்லையா...'' என்று அடிக்கப் போனான்.

மோனிஷா வேகமாக வெளியே போய் விட, பிரியா நடுங்கிக் கொண்டு நின்றதைப் பார்த்தான். அவள் மேல்

கோபம் திரும்பியது. அவளுக்கு இரண்டு அறை கொடுத்துக் கீழே தள்ளினான். அவன் தள்ளிய வேகத்தில் தடுமாறிக் கீழே குப்புற விழுந்தாள்.

விழுந்த வேகத்தில், வயிற்றில் அடிபட்டது. வலியில் துடித்தாள். ராகேஷ் திரும்பிப் பார்க்காமல் வெளியே போய் விட்டான்.

காயத்திரி வந்து ஹாஸ்பிடலுக்குக் கூட்டிப் போனாள். பிரியாவிற்கு அபார்ஷன் ஆகிவிட்டது. வயிற்று வலி தாங்க முடியவில்லை.

க்ளீன் பண்ணி மாத்திரை கொடுத்து வீட்டுக்கு அனுப்பினர். பிரட், பால் மட்டும் கொடுங்க இன்று என்றனர்.

பிரியா சோர்ந்து போய் விட்டாள். வந்து படுத்தவள் தான், நன்றாகத் தூங்கினாள். காயத்திரி வந்து பார்த்தாள். பிரியா எழுந்திருக்கவில்லை.

பிளாஸ்கில் பாலை ஊற்றி வைத்து விட்டுச் சென்றாள். காயத்திரி பிரியாவை நினைத்துக் கவலைப்பட்டாள்.



## 11

இரவு இரண்டு மணி இருக்கும். அப்பத்தான் பிரியாவுக்கு முழிப்பு வந்தது. பசி, தண்ணித் தாகம் வேற நாக்கைப் பிடித்து இழுத்தது. நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. வியர்த்துக் கொட்டியது.

எழுந்து பார்த்தாள். எழுந்திருக்க முடியவில்லை. பக்கத்தில் இருந்த ராகேஷை எழுப்பினாள். அவன் அசையவில்லை.

வேகமாகத் தட்டி எழுப்பினாள், அவன் அசைந்தான். அவள் தட்டி எழுப்புவதைப் பார்த்து என்ன என்றான்.

அவளுக்குச் சொல்லவே... பயமாக இருந்தது. இந்த நேரத்தில் அடித்தால்... செத்தே விடுவேன்.

மறுபடியும், ''என்ன?'' என்றான்.

''எனக்குத் தாகமா இருக்கு. பசி வேற. கொஞ்சம் த...ண்...ணி வேண்டும்,'' என்றாள் தயக்கமாக.

அவளை விசித்திரமாகப் பார்த்தான். எழுந்து தண்ணீரை ஃப்ரிஜ்ஜில் இருந்து எடுத்தான்.

''ஐஸ் வாட்டர் வேண்டாம்... சூடா... இரு...ந்..தா...''

டேபிளில் இருந்த பிளாஸ்க்கைப் பார்த்தான். அதை எடுத்துத் திறந்து பார்த்தான். அதில் பால் இருந்தது.

''பால் குடிக்கிறியா...'' என்றான்.

''ம்...'' என்று தலையை ஆட்டினாள்.

டம்ளரில் ஊற்றிக் கொடுத்தான். அவள் படுத்தே இருந்தாள்.

''என்னைக் கொஞ்சம் தூக்கி உட்கார வைங்க,'' என்றாள். வலி வேறு. ஜுரம் வேறு அடித்தது. ஜுரத்திற்கு மாத்திரை இருந்தது.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளைத் தூக்கி உட்கார வைத்தான். ஜுரம் அனலாகக் கொதித்தது.

''அந்த மாத்திரையையும் கொடுங்க,'' என்றாள்.

மாத்திரையை எடுத்துக் கொடுத்தான்.

பால் டம்ளரை வாங்கினாள். கை நடுங்கியது.

வாய்க்குக் கொண்டு போக முடியவில்லை.

அவனே... வாங்கி மாத்திரையைப் போட்டுப் பால் கொடுத்தான். அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. இன்னொரு டம்ளர் பாலை ஊற்றிக் கொடுத்தான். அதை யும் குடித்தாள்.

''சாப்பிடவில்லையா...?'' என்றான்.

அவள் பேசாமல் தலை குனிந்தாள்.

காலையில் காயத்திரி வந்தாள். பிரியா அவளிடம், ''நான் பாத்ரும் போகணும்,'' என்றாள்.

''சரி, வா...'' கையைப் பிடித்துக் கூட்டிப் போனாள்.

இரண்டு எட்டு எடுத்து வைத்தவள் அப்படியே மயங்கிக் கால் மடக்கிக் கீழே சரிந்தாள்.

காயத்ரியால் தாங்கிப் பிடிக்க முடியவில்லை. 'ராகேஷ்' என்று கத்தினாள்.

வெளியே இருந்து ராகேஷ் வேகமாக உள்ளே வந் தான். பிரியா இருந்த நிலையையும், காயத்திரி பதறி யதையும் பார்த்து வேகமாக வந்து பிரியாவை அப்படியே தூக்கிப் படுக்கையில் படுக்க வைத்தான்.

முகத்தில் தண்ணீர் தெளித்தான். சிறிது நேரத்தில் கண் விழித்தாள். ''என்ன செய்யுது பிரியா...'' என்றாள் காயத்திரி.

''பசிக்குதுக்கா... எனக்கு இட்லி தர்றீங்களா...?'' என்றாள் கெஞ்சுவது போல்.

''இதோ எடுத்துட்டு வர்றேன். நீ பல் விலக்கு,'' என் றாள். மூன்று நாட்களாகப் பேசாமல் இருந்தான் ராகேஷ்.



பிரியாவிற்கு ஒரே யோசனையாக இருந்தது. அன்று வந்தவள் யார், என் கண் முன்னாடியே, இப்படி கட்டிப் பிடிக்கிறா... 'ராக...'' என்று செல்லமாகக் கூப்பிடுகிறாள்.

பேசாமல் இருந்தவன், தன்னை அடிக்க வரவும் எப்படி கோபப்பட்டான். அவளையும் எப்படி அடித்தான். தன் மீது அவனுக்கு அன்பு இருக்கா...? எப்படி இருக்கும், அன்பு இருந்தால்... அன்று என்ன செய்யுது என்று ஒரு வார்த்தை கேட்டிருக்க மாட்டானா...? இன்றுவரை எதுவும் கேட்கவில்லை.

டாக்டர் ஒரு மாதத்திற்கு நல்லா ரெஸ்ட் எடுக்கணும், என்று சொன்னார். முடியுமா... இவனிடம், சொன்னால்... அவ்வளவுதான். கூடக் கொஞ்சம் பாய்வான்.

அவனிடம் எதுவும் மறுப்புச் சொல்லவில்லை. நடக்கிறது நடக்கட்டும் என்று.

அவள் கண்களில் நீர் தழும்பிற்று. பிறந்ததில் இருந்து அவள் அன்பை அனுபவித்ததில்லை. இவன் இப்படி நடந்து கொண்டாலும், அன்பா பேசக் கூடாதா...?

தனக்கு இந்த ஜென்மத்தில் கிடைக்கப் போவதில்லை. எப்படி நடந்து கொள்கிறான், தன் மனைவி முன்னாடி ஒரு பெண், கட்டி அணைக்கிறாளே... அவள் என்ன நினைப்பாள். அவள் மனசு என்ன பாடு படும். வாய் திறந்து தன்னை எதுவும் கேட்க மாட்டாள் என்கிற தைரியம். அப்படியே கேட்டால், இரண்டு அடி கொடுத் தால் வாயை மூடப் போறாள் என்ற நினைப்பு.

ஷியாம் சொல்வது போல்... இவன் தப்பானவன்தான் போல். இல்லையென்றால் வீடு தேடி வருவாளா... ஒருத்தி. வீட்டில் உள்ளவர்களும் எதுவும் கேட்கமாட் டேங்கிறாங்க.

பெரிய இடத்தில் எல்லாம் இப்படித்தானோ... எதுவும் கண்டுக்க மாட்டாங்களோ... நம் வீட்டில் இது மாதிரி என்றால்... கிருஷ்ணாயிலை ஊற்றிக் கொளுத்தி விடுவார்கள்.

நாம் என்ன பண்ண முடியும். இவனைக் கண்டிக்க முடியுமா...? கேட்கக் கூட முடியாது. பிரியா எப்பவும் ஒழுக்கத்தைப் பெரிதாகப் போற்றுபவள். ஒழுக்கம் தவறுவது அவளுக்குப் பிடிக்காது. குடிப்பது, சிகரெட்... எதுவும் பிடிக்காது.

அவள் வெளியில் போகும்போது, சிகரெட் புகை வந்தால் மூச்சை இழுக்காமல், தள்ளிப்போய் விடுவாள். அப்படித்தான் இன்று சிகரெட் புகை, மது வாடை என்று காலத்தை ஓட்டுகிறாள்.

படித்தவன், பிசினஸ் பண்ணுகிறான். இது தப்பு என்று தெரியாதா?

அவளுக்கு மூச்சை அடைப்பது போல் இருந்தது. மெதுவாக எழுந்து, பால்கனிக்கு வந்தாள். அங்கு இருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து, மெதுவாக ஆடினாள்.

தோட்டத்தில் இருந்து வந்த காற்றும், மலர்களின் கலவை நறுமணமும், அவள் மனதிற்கு இதமாக இருந்தது.

இந்த ஊஞ்சலில் உட்கார்ந்து, அவன் மடியில் தலை வைத்துப் படுக்கணும் என்று அவளுக்கு ஆசை...

அது நிறைவேறுமா...?

எப்படி இவனை நம் மனம் நாடுது. இவ்வளவு தப்பு பண்ணுகிறான். இவனிடம் மனம் விழுந்து விட்டதே...



இதுதான் தாலியின் மகிமை என்பதா... இல்லை, எனக்கு இப்படித்தான் கணவன் இருக்கணும் என்று எனக்கு எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாததால்... கிடைத்ததை மனம் ஏற்றுக் கொண்டு விட்டதா...?

அவனை நினைத்துப் பார்த்தாள்; என்ன ஒரு கம்பீரம்! அவன் படிகளில் இறங்கும் விதமே... அழகாக இருக்கும். காரில் உட்கார்ந்து, அவன் கார் ஓட்டும் லாகவமே... தனி அழகாக இருக்கும்.

அவனுக்கு என்ன குறை? காயத்திரியிடம், எத்தனை அன்பாக இருக்கான், செல்லம் கொஞ்சிக் கொண்டு, கழுத்தை கட்டிக் கொண்டு, மடியில் படுத்துக் கொண்டு எப்படி சிரிக்க... சிரிக்கப் பேசுகிறான். தன்னிடம் மட்டுந் தான் இந்தப் பாரா முகம்.

அதுபோல் எல்லாவற்றிலும் இருக்க வேண்டியது தானே... இவனுக்கு 'அதுக்கு' மட்டும் நான் வேண்டும், மற்றதுக்கெல்லாம் அவர்கள்.



## 12

ஷியாம் பிரியாவைச் சீண்டிக் கொண்டிருந்தான். அவளின் மேல் அடங்காத கோபமாக இருந்தான். இவளை எப்படியாவது, அசிங்கப்படுத்தணும் என்று நினைத்துக் காத்திருந்தான்.

அன்று இரவு மணி ஒன்று இருக்கும். கதவு தட்டும் ஒலி கேட்டு... பிரியா... விழித்தாள்.

ராகேஷ் விழிக்கவில்லை. அவன் போதையில் இருப்ப தால் விழிப்பு லேசில் வராது.

பிரியா யார் இந்த நேரத்தில் என்று யோசனையோடு கதவைத் திறந்தாள்.

ஷியாம் படக்கென அவள் கையைப் பிடித்து வெளியே இழுத்தான். பிரியா... பயத்தில் அலறினாள். அவள் வெளியே வராமல் கதவைப் பிடித்துக் கொண்டு, ''என் னங்க... என்னங்க...'' என்று கத்தினாள்.

அவன் அவள் வாயில் அடித்தான். ''கத்தாதே...'' என்று. ''நீ கத்தினாலும் அவன் எழுந்திருக்கப் போவ தில்லை. குடிகாரப் பயல். அதனால்தான் வந்தேன்,'' என்றான்.

எவ்வளவு நேரம் அவனுடன் போராட முடியும்? அவன் அவளை வெளியே இழுத்தான். கையை வேகமாக உருவிக் கொண்டு கட்டிலுக்கு ஓடினாள். அவன் காலைப் பிடித்து, ''என்னங்க...'' என்று கத்தினாள்.

அவன் அசையவே... இல்லை, ஷியாம் சிரித்தான். பிரியா... ''சுந்தர் அண்ணா... காயத்திரி அக்கா...'' என்று கத்தினாள்.

ஷியாம், ''அவர்கள் வீட்டில் இல்லை. அதனால் நீ என்ன கத்தினாலும், யாரும் வர மாட்டார்கள்.''

பிரியாவிற்கு உடம்பெல்லாம் துடித்தது. நான் என்ன செய்யப்போகிறேன். கட்டியவன் கல்லாட்டம் இப்படித் தூங்குகிறானே... இவனை நம்பி நாம் என்ன செய்ய முடியும்.

கடைசியில் ஷியாமிடமே... கெஞ்சினாள்.

''ஷியாம், என்னை விட்டு விடுங்க. நான் உங்க தம்பி மனைவி, உங்க தங்கை மாதிரி... நான் அன்று பேசியது தப்புத்தான். அதற்கு நான் மன்னிப்புக் கேட்கிறேன். தயவு செய்து மன்னிதது என்னை விட்டு விடுங்கள்,'' என்றாள்.

அவன் ஆணவமாகப் பேசினான். ''இது ராகேஷிற்குத் தெரிந்தால்... என்ன ஆகும் தெரியுமா... உன்னை அடுத்த நிமிடமே... கொன்று விடுவான். இல்லையென் றால் வீட்டை விட்டுத் துரத்தி விடுவான்.''

மறுபடியும் இழுத்தான். பிரியா கத்தினாள். சுந்தர் வேகமாக வந்தான். வந்தவன், ஷியாமைப் பார்த்து அதிர்ந்தான். ''என்னடா... நீ இங்கே...'' என்றான் கோப மாக...

ஷியாம் திகைத்தான். அண்ணா வெளியே போயிருந் தார். நான் காலையில்தான் வருவேன் என்று சொன் னாரே... இப்போ எப்படி...?

ஒரு நிமிடத்தில் தன்னை மாற்றிக் கொண்டான். ''அண்ணா... இவதான் என்னை வந்து கூப்பிட்டா... ராகேஷுக்கு முடியவில்லை என்று. இங்கு வந்து பார்த் தால்... இவ என் கையைப் பிடித்து இழுக்குறா...'' என் றான் கொஞ்சங்கூட யோசிக்காமல்.

சுந்தர் பிரியா பக்கம் திரும்பினான். அவள் பயத்தில், ''இல்லை அண்ணா... இவன்தான்...'' என்று உண் மையைச் சொல்ல முடியாமல் திணறினாள்.

திரும்பினால் கதவருகில் ராகேஷ் நின்றிருந்தான். பிரியாவிற்குப் பயத்தில் உயிரே போய் விட்டது. அவனைப் பார்த்து மிரள விழித்தாள்.

சுந்தருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஷியாம் பொய் சொல்கிறான் என்று. "ஷ்யாம்" என்று அதட்டினான்.

ராகேஷ் அவர்களைப் போகச் சொன்னான். சுந்தர், "அவ மேல் தப்பிருக்காது ராகேஷ். ஷியாம்தான் பொய் சொல்கிறான். அவளை அடிக்காதே..." என்றான்.

ராகேஷ் பதில் எதுவும் சொல்லவில்லை. அவர்கள் போய் விட்டார்கள்.

ராகேஷ் பிரியாவை, "உள்ளே வா..." என்றான். பிரியா எழுந்து உள்ளே போனாள். அவள் முடியைப் பிடித்து ஆட்டி, "உண்மையைச் சொல்," என்றான்.

அவன் கதவு தட்டியது. தான் திறந்தது. அவன் கை பிடித்து இழுத்தது. நான் உங்களை வந்து எழுப்பியது வரை அத்தனையும் சொன்னாள்.

ஆனால்... அவன் நம்பவில்லை. "முதலிலேயே... அவன் உன்னிடம் பேசினான் என்றால்... ஏன்... என்னிடம் நீ சொல்லவில்லை?"

"இப்ப சொல்வதையே... நம்ப மாட்டீங்கிறீங்க. நான் அன்று சொல்லியிருந்தால்... நம்புவீங்களா? இல்லை, உங்களிடம் சொல்லத்தான் முடியுமா...?"

"என்னடி கதை பேசுற..." அறைந்தான்.

"ஏங்க, நீங்க படுத்துற பாட்டையே... என்னால தாங்க முடியலே... நீங்களே இப்படிப் பேசலாமா...?"

"நீ இந்த வீட்டில் இருக்கக் கூடாது. வீட்டை விட்டு வெளியே போ...." என்றான் தீர்மானமாக.

"நா... நா... ன்... எங்கே... போவேன்...?"

"எங்கேயோ... போ... என் முகத்தில முழிக்காதே..."

"........."

காலையில் அவன் அண்ணன் அண்ணியிடம் முடிவாகச் சொல்லி விட்டான். "இவ இனி இந்த வீட்டில் இருக்கக் கூடாது." என்று விட்டுப் போய் விட்டான்.

இவ இருந்தால் நான் இருக்க மாட்டேன்.

பிரியா... அழுதாள்.

சுந்தரும் காயத்திரியும், இனி இவனை இப்படியே விடக்கூடாது, ஹாஸ்பிடலில் காண்பித்துக் குணமாக்க வேண்டும். இவனால் இந்தப் பெண்ணின் வாழ்வும் கெட்டு விடும்.

பிரியாவை அவள் அப்பா வீட்டில் கொண்டு விடுவோம். ராகேஷை ஹாஸ்பிடலில் சேர்ப்போம் என்று பிரியாவை அவள் அப்பா வீட்டில், கிராமத்தில் கொண்டு விட்டனர்.

பிரியாவை அவள் சித்தி, இங்கு இருக்கக் கூடாது என்றாள். சுந்தர், "மாதா... மாதம் பணம் தந்து விடுகிறேன். கொஞ்ச நாள் இங்கு இருக்கட்டும்," என்றான்.

அவள் சித்தி "சரி" என்றாள் அரை மனதாக. சுந்தர் வந்து ராகேஷிடம் கத்தினான். "நீ உன் இஷ்டத்துக்கு நடக்கிறே... அவளை வீட்டை விட்டுப் போ... என்று சொல்லி விட்டாய்... இப்போ நிம்மதிதானே..

"நீ வா... ஹாஸ்பிடலுக்கு.." என்றான்.

"எதுக்கு?"

"எதுக்குனு உனக்குத் தெரியாதா...?"

"நான் வர முடியாது..."

காயத்திரி அழுதாள்... "..... அம்மாவா... இருந்தா... நீ இப்படிப் பேசுவியா. என்ன இருந்தாலும் நான் உன் அன்பான அண்ணி. நான் உன்னை வளர்த்து. நீ இப்படி ஆ.................. தாய் இருந்து வளர்க்காத பிள்ளை தறிகெட்டுப் போகும் என்பது சரியாத்தான் இருக்கு.

"நான் என்றைக்குமே... எனக்குப் பிள்ளை இல்லை என்று நினைத்ததில்லை. உன்னை என் பிள்ளையாகத் தான் நினைக்கிறேன். நீ என்னைத் தாயா... நினைக்கவில்லை.

"நீ அப்படி நினைத்தால்... இந்த மாதிரி பண்ண மாட்டாய், அவ எப்படிக் கெஞ்சினா... அவ தப்பு பண்ணுவாளா... நீ ஒழுங்கா... இருந்தா... உன் பெண்டாட்டியை அவன் கையைப் பிடித்து இழுப்பானா... அவள் சொல்வதை நம்பாமல் அவன் சொல்வதை நம்பு. அவளை வீட்டை விட்டு அனுப்பி விட்டாய்.

"அவள் சித்தியும் வேண்டாம் என்று சொன்னாளாம், நான் மாதா.. மாதம் பணம் தந்து விடுகிறேன். கொஞ்ச நாள் இங்கு இருக்கட்டும் என்று கெஞ்சி விட்டுட்டு வந்திருக்கார்.

"கட்டின புருஷன் நீ கல்லு மாதிரி இருக்கே... இங்கு என்னத்துக்குக் குறைச்சல்.. ஆனா... அவளுக்குச் சாப்பிட இடம் இல்லை. இது உனக்கே வெட்கமாயில்லை.

"நீ படுத்தி வச்ச பாட்டில், வேறொருத்தியா இருந்தா... உன் கூட இருந்திருப்பாளா... இருபத்து நாலு மணி நேரமும் போதை..."



# 13

"தப்பு பண்ணினவன், உன் அண்ணன். அன்றே என்னிடம் சொன்னாள்... நான்தான் அவனிடம் சொல்லி விடாதே... குடும்பத்தில் பிரச்னை வந்து விடும் என்றேன்.

"அவன் அவளிடம், உன்னை அடையாமல் விட மாட்டேன் என்று சொல்லியிருக்கான்... அதற்கு அவள் உன் மனைவியை என் புருசனிடம் முதலில் அனுப்பு என்றாளாம். அதற்கு அவன் உன்னைப் பழி வாங்கி இந்த வீட்டை விட்டுத் துரத்தலே... பார்... என்றானாம்.

"முதலில் நீயா... உன் வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்தே... நாங்கள் எவ்வளவோ... எடுத்துச் சொன்னோம். நீ கேட்கலை. அது சரியா... அமையலே... நாங்கள் அமைச்சுக் கொடுத்த வாழ்க்கையையாவது ஒழுங்கா வாழறியா... அதுவும் இல்லை.

"நமக்குத் தூரத்துச் சொந்தம், கிராமத்தில் இந்தப் பெண் சித்தியிடம் கொடுமைப்பட்டாள். ஏழையாக இருந்தாலும் நாம் சொல்வதைக் கேட்டு, வீட்டுப் பேச்சு வெளியில் வராமல் காப்பாற்றுவாள் என்று உனக்குப் பண்ணி வைத்தோம்...

"கல்யாணம் என்றே அவளுக்குத் தெரியாது. + 2 கூட முடிக்கவில்லை அவள் அத்தனை சின்னப் பெண். நீ என்ன மாதிரி நடந்து கொண்டாய். தினம்... தினம்... மயக்கம் போடும் அளவிற்கு...."

''அதைப் பற்றி யெல்லாம் நாங்கள் கேட்டோமோ...

''கணவன், மனைவி இருவருக்கும் ஆயிரம் இருக்கும். நாம் அதில் தலையிடக் கூடாது என்று பேசாமல் இருந்தேன்.

'அவளை ஹாஸ்பிடலுக்குக் கூட நானாகக் கூட்டிப் போவேன். எப்படி அடித்தாய்... எத்தனை அபார்சன், இத்தனையும் தாங்கக் கூடிய வயதா... அவளுக்கு. இதெல்லாம் யாருக்காகப் பொறுத்தாள், உனக்காகத் தானே... நீ அவளை ஒரு மனுஷியாகக் கூட மதிப்பதில்லை.

''வெளியில் கூட்டிப் போனால் அங்கேயே... விட்டு விட்டு வந்து விடுவது. இது ஒரு மனிதன் செய்யும் வேலையா...? இவ்வளவு செய்கிறாயே.. அதுக்கு உனக்குத் தகுதி இருக்கா... என்று யோசித்துப் பார்.

''நீ கெட்டுப் போகக் கூடாது என்றுதான் நாங்கள் உனக்குக் கல்யாணம் பண்ணி வைத்தோம். ஆனால்... நீ கல்யாணம் பண்ணியும், நீ எந்தத் தப்பு பண்ண வில்லை, அவள் ஒரு வார்த்தை கேட்டாள்... இல்லை. அவளுக்குத்தான் தெரியாதா...

''நீ ஒழுங்கா... ட்ரீட்மெண்ட் எடுத்து அவளைக் கூட்டி வந்து குடும்பம் நடத்துவது என்றால்... நடத்து. இல்லை என்றால் விடு... எங்களுக்கு எந்த சொத்தும் வேண்டாம். எங்களுக்கென்ன... பிள்ளையா குட்டியா... நாங்கள் வீட்டை விட்டுப் போகிறோம். எத்தனையோ அனாதை ஆசிரமம் இருக்கு. எங்களுக்கு அதில் இடமில்லாமலா போகும்?'' என்றாள்.

''மீ...'' என்று அவள் மடியில் முகம் புதைத்தான்.



''இதெல்லாம் சும்மாடா... எனக்குத் தெரியும் ராகேஷ்... வெளியில் என்ன பேசிக்கிறாங்க தெரியுமா... பிரியா வீட்டை விட்டுப் போனதற்கு நாங்கள்தான் காரணமாம். நீ இப்படி குடிக்கவும், நாங்கள்தான் காரணமாம். இதுவே இவள் பிள்ளையாய் இருந்திருந்தால்... இப்படி கண்டிக்காமல் குடிக்க விடுவாளா... குடித்து இவன் உயிரை விட்டா... சொத்து முழுவதும் எங்களுக்காம். எங்களுக்கு எதுக்கு ராகேஷ் சொத்து...

''என்னங்க, அந்தப் பத்திரத்தை எடுத்து வந்து, இவர்களிடம் குடுத்து விடுங்க. நாம் இங்கிருந்து போய் விடலாம்,'' என்றாள்.

சுந்தர் போய்ப் பத்திரத்தை எடுத்து வந்து, ஷியாமிடமும், ராகேஷிடமும் கொடுத்தான்.

சொத்தைச் சரி பாதியாக இருவர் பெயருக்கும் எழுதியிருந்தான். அவர்களுக்கு எதுவுமே... இல்லை.

ராகேஷ் காயத்திரியைக் கட்டிக் கொண்டு அழுதான். ''மீ... என்னை மன்னித்து விடுங்கள். எனக்கு இந்தத் தண்டனையைக் கொடுக்காதீங்க!'' என்றான்.

''உனக்குத் தண்டனை தர நான் யாரு, நீங்கள் எங்களைக் காப்பாற்றுவீங்க... என்ற நினைப்பில், நீங்கள் இருவரும் சின்னப் பிள்ளைகளாகப் படித்துக் கொண்டிருக்கும்போதே... எழுதியது. நீ காப்பாற்ற மாட்டாய் என்று தெரிந்து விட்டது. உன்னைக் காப்பாற்றவே... இனி உன்னால் முடியாது. அந்த அளவிற்கு... நீ பெரியவனாகி விட்டாய்... உன்னிடம் இனி எனக்கு என்ன பேச்சு... எல்லாம் முடிந்து விட்டது.

''நான் தாய் தந்தை இல்லாமல், இந்த வீட்டிற்கு ...க்கேன். உன் அண்ணன் எனக்குத் தந்தையா... ஒரு

சகோதரனா... நல்ல ....... உங்களுக்கு ஒரு தகப்பனா.. இருந்தாரு.

''நீ இப்போ... பிரியாவை ஒரு சீரும் கொண்டு வர வில்லை என்று பேசுறே... இது அவளுக்கு மட்டும் இல்லே.... எனக்கும்தான். ஏன்னா... நானும் எந்தச் சீரும் கொண்டு வரலே...

''உங்கண்ணன், பெண் பார்க்க வந்த அன்று, என் னிடம் எனக்கு மனைவியா... இருப்பதைவிட... என் தம்பிகளுக்கு நீ தாயா... இருக்கணும் என்றார்.

''நானும் சரி என்றேன். நான் வீட்டை விட்டு எப்போ... வந்தேனோ... இன்று வரை, நான் எங்கள் வீட்டிற்குப் போகவில்லை. எனக்குப் பிறந்த நாள் கூடத் தெரியாது. உன் அண்ணன்தான் கொண்டாடுவார். உன்னை மாதிரி ஒரு புடவை... பூ கூட வாங்கிக் கொடுக்காமல் இருந் திருந்தால்... என் நிலைமை என்னாகும்.

''பிரியாவிற்காவது நாங்கள் செய்தோம்.. எனக்கு.. யார் செய்வா... இதை இனி உன்னிடம் எதிர்பார்க்க முடியுமா...?

''உன் பெண்டாட்டிக்கே சோறு போடாதவன். எங் களுக்கு எப்படிப் போடுவாய். உன்னை நம்பி இந்த வீட் டில் இருக்கலாமா... எதுவும் நாங்கள் எடுத்துப் போகலே... கட்டின துணியோட போகிறோம்.

''பிரியா.. போட்டுக்க டிரஸ் கூட இல்லாமல் ஒரு பழைய கிழிந்த நைட்டியைப் போட்டிருந்தாளாம். அந்தக் கிழிசலை மறைக்க மேலே... ஒரு டீ சர்ட்டைப் போட்டு இருந்தாளாம். நீ ஒரு நாளைக்குக் குடிக்க எவ்வளவு செலவு செய்கிறாய்.

''இதைக் கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தாயா... அவள் என்ன செய்வாள் என்று.

''எப்படி உனக்கு மனம் வருது. உன்னையே சுற்றி வருவாளே... அந்த அறைக்குள் போனால்... உனக்கு அவளைப் பற்றி நினைப்பு வராதா...? ஒரு நாளாவது அவளைப் போய்ப் பார்க்கணும் என்று நினைத்தாயா... தப்பே... பண்ணாதவளுக்கு இப்படி ஒரு தண்டனை கொடுத்தாயே... தப்ப பண்ணும் உனக்கு என்ன தண் டனை கொடுப்பது.

''ஷியாம் வந்து மன்னிப்புக் கேட்டான். பிரியா மேல் எந்தத் தப்பும் இல்லை. என் மேல்தான். என்ன மன்னித்து விடுங்க என்று.

''நீ பெரியவன்தானே... இப்படிப் பண்ணலாமா.... ஒரு சின்னப் பெண்ணிடம், அவளின் வாழ்வு என்னா வது, இவனைப் பற்றி நீ தெரிந்திருந்தும், உன் மனைவி யிடம் இது மாதிரி நடந்தால்... நீ சும்மா விடுவாயா...? ஈசியா... மன்னிப்பு கேட்கிற... உன்னால்தான்... அவ ளுக்கு இந்த நிலைமை.

''நீ நான் வளர்த்த பிள்ளையா... இப்படி நடந்துக் குறே... என் மீதும், உன் அண்ணன் மீதும், மரியாதை வைத்திருந்தால்... இப்படிப் பண்ணுவாயா... அவள் நம் வீட்டுப் பெண்ணில்லையா...? இதே... உன் தங்கையா... இருந்தா... இப்படி நடந்தா... நீங்கள் பேசாமல் இருப்பீங் களா? இந்த வீட்டில் என்ன நிலையில் இருந்தது என்று உனக்குத் தெரியும்.

''உன் தம்பி மனைவி, உன் தங்கையல்லவா? இதே... பெரிய இடத்துப் பெண் என்றால்... இப்படி நடப்பியா...

பிரியா மேல் இருவரும் என்ன மரியாதை வைத்திருக்கீங்களோ... அது மாதிரிதான் என் மேலும் வைத்திருப்பீங்க என்று தெரிந்து கொண்டேன்.''



## 14

''மீ... அப்படிச் சொல்லாதீங்க. நீங்கள்தான் எனக்குத் தெய்வம்.''

''சும்மா... நடிக்காதேடா...

''அவளுக்காவது போய் இருக்க ஒரு இடம் இருக்கு. எனக்கு அதுகூட இல்லை'' என்று அழுதாள்.

ஷியாமும், ராகேஷும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டனர். ஷியாம்... ''அம்மா, எங்களை மன்னித்து விடுங்கள். இனி நீங்கள் சொல்வது போல் நடந்து கொள்கிறோம். தம்பியும் ஹாஸ்பிடல் போய் ட்ரீட்மென்ட் எடுத்துக் கொள்வான்,'' என்றான்.

''ஆமா... மீ, நான் அப்படியே நடந்து கொள்கிறேன்.''

இருவரையும் தன் வயிற்றோடு அணைத்துக் கொண்டாள்.

வீசும் தென்றலாய் நாட்கள் நகர்ந்தன. ராகேஷ் புது மனிதனாக மாறினான். ஒரு நாள் காயத்திரிக்கு உடம்புக்கு முடியாமல் போய்விட்டது.

ஷியாமின் மனைவி கவிதா... பிரசவத்திற்கு அவள் அம்மா வீடு சென்றிருந்தாள்.

சுந்தரிடம் காயத்திரி போய், ''பிரியாவைக் கூட்டி வாங்க,'' என்றாள்.

''அவன் இன்னும் ஒன்னும் சொல்லலையே... காயத்திரி.''

''அவனுக்காக இல்லை, எனக்காக. நான் ஹாஸ்பிடலில் இருக்கும்போது, என் கூட அவள் இருக்கணும்.

''அவன் என்ன சொல்ல முடியும். நாமும் இப்படியே ஒரு வருடத்தை ஓட்டி விட்டோம். இப்படியே விட்டால், இருவரும் இப்படியே தான் இருப்பார்கள். இதைச் சாக்காக வைத்துக் கூட்டி வருவோம். அவன் ஒன்றும் சொல்ல மாட்டான்.''

சுந்தர் போய் பிரியாவைக் கூட்டி வந்தான். அவள் வர மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாள்.

''சந்தேகப்படும் கணவன், தன்னை அவமானப்படுத்தும் மச்சினன், அந்த வீட்டில் எனக்குப் பாதுகாப்பு இல்லை. அதனால் வர மாட்டேன்,'' என்றாள்.

''உன் அக்காவை ஹாஸ்பிடலில் சேர்த்திருந்தேன்... பார்க்க ஆள் இல்லை, அதனால் நீ வாம்மா...'' என்றான்.

தன் மேல் பாசமாய் இருந்த ஒரு ஜீவனும் இன்று ஹாஸ்பிடலில். ''அக்கா... இல்லாமே... நான்... எப்படி வீட்டில்...''

''நீ நினைப்பதில் தப்பில்லை, ஷியாமும் ராகேஷும், மாறிவிட்டாங்க. ராகேஷ் இப்போது குடிப்பதில்லை. அதனால் நீ பயப்படாமே... வரலாம்,'' என்றான்.

நீ என் மனைவி யில்லை என்றவனுடன் இனி போகலாமா...?

"நா...ன் அக்காவுக்குச் சரியானதும் இங்கு வந்துவிடுவேன். அங்க இருக்க மாட்டேன்," என்றாள்.

சரி என்று கூட்டி வந்தான்.

இரண்டு நாள் ஹாஸ்பிடலில் இருந்தாள். ராகேஷ் அவளிடம் எதுவும் பேசவில்லை.

காயத்திரி, "நீ வீட்டுக்குப் போ. வீடு எப்படி இருக்கோ... எத்தனை வேலைக்காரங்க இருந்தாலும், நாம் இருப்பது போல் இருக்காது," என்றாள்.

காயத்திரி வீட்டுக்குப் போ... என்றதும் பிரியா பயந்து விட்டாள். ராகேஷும் அங்கிருந்தான். இதுவரை ஒரு வார்த்தை பேசவில்லை. நல்லாயிருக்கியா... என்று ஒரு வார்த்தை இல்லை. இப்ப நான் அவன் இருக்கும் இடத்தில். மறுபடியும் தன்னை என்ன பண்ணுவானோ என்று பயந்தாள்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "அக்கா... நான் வீட்டுக்குப் போகலை. நா... நா...ன் ஊருக்குப் போகிறேன்," என்றாள்.

"ஏன்...?" என்றாள் காயத்திரி. ராகேஷும் பார்வையை உயர்த்தி அவளைப் பார்த்தான்.

"நான் எந்த உரிமையில் அங்கே வருவது? நீ என் மனைவி இல்லை. உன்னை விரும்பவில்லை. அவ ஒருத்திதான் என் மனைவி. நீ இல்லை என்பவரிடம், என்னைச் சந்தேகப்பட்டுத் தானே... வீட்டை விட்டு அனுப்பினீங்க... இப்ப நான் எப்படி அந்த வீட்டுக்கு வர முடியும்."

இப்போது ராகேஷ் வாய் திறந்தான். "நீ சொல்வது சரிதான். நான் உன்னை விரும்பிக் கல்யாணம் பண்ணிக்கலை... ஆனால்.. நீ விரும்பித்தானே... என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாய்! கணவனாக ஏற்றுக் கொண்டாய், அதனால் நீ தாராளமாக அந்த வீட்டுக்கு வரலாம்," என்றான்.

அவனைக் கேட்க எத்தனையோ... கேள்விகள் இருந்தன, மனதில். ஆனால் கேட்க முடியவில்லை. தொண்டை அடைத்தது. கண் கலங்கி, இதோ.... வருகிறேன் என்று இரண்டு முத்துக்கள் எதிர்பார்த்தன. பிரியா... சன்னல் புறம் திரும்பி வெளியே பார்ப்பது போல் நின்று கொண்டாள்.

அவள்தான் என் மனைவி என்றானே... யார்... அவள்..? இந்தக் கேள்வியை இவள் யாரிடம் கேட்பாள்.

திடும்மென, "போகலாமா...?" என்றான்.

திடுக்கிட்டுத் திரும்பினாள். அவன் இவ்வளவு அருகில் நிற்பான் என்று நினைக்கவில்லை.

கலங்கிய கண்களை அவன் பார்த்தான். "உன் விருப்பத்திற்கு மாறா... அங்கு எதுவும் நடக்காது. நீ பயப்படாமே வரலாம்."

அவன் முன்னே... சென்றான். பிரியா காயத்திரியைப் பார்த்தாள். அவள் போ... என்று தலையசைத்தாள். பிரியா மெதுவாக அவன் பின்னால் போனாள்.

வீட்டிற்குள் நுழைந்ததுமே.. ஷியாம் எதிர்ப்பட்டான்.

அவனைப் பார்த்ததுமே... உடம்பில் சிறு நடுக்கம் ஓடியது. அதை ராகேஷ் கவனித்தான்.

ஷியாமிற்கும் தர்ம சங்கடமாக இருந்தது. பின், "வா பிரியா..." என்றான்.

அவள் தலையசைத்தாள்.

அவளுக்கு எங்கே போவது என்று தடுமாற்றமாக இருந்தது. மேலே தங்கள் அறைக்குள் போகலாமா...? எப்படிப் போவது? நாம் கீழேயே தங்கிக் கொள்ளலாம். அப்படித் தங்கினால் மற்றவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமே...

அவள் தயங்கி நிற்பதைப் பார்த்துவிட்டு, ''வா... மேலே...'' என்றான்.

அவள் போய்க் குளித்துவிட்டுப் பீரோவைத் திறந்தாள். புதிதாக நிறையப் புடவை, சுடிதார்கள் இருந்தன.

ஒரு வாரத்தில் காயத்திரி வீட்டுக்கு வந்து விட்டாள்.

பிரியா அடுப்படியில் காபி போட்டுக் கொண்டிருந்தாள். ராகேஷ் மெதுவாக அவளை நெருங்கி நின்று, அவள் கன்னத்தில், அவன் உதடு படும்படி, ''எனக்கு ஒரு காபி கிடைக்குமா...?'' என்றான்.

அவள் துள்ளி விழாத குறைதான். படக்கெனப் பின்னால் திரும்பினாள். அப்படியே... அவன் மார்பில் சாய்ந்தாள்.

அவளை அப்படியே... அணைத்துக் கொண்டான். அவள் உடம்பு நடுங்கிற்று.

''உன்னை என்ன ஒரு காபிதானே... கேட்டேன். ஏதோ... கேட்கக் கூடாததைக் கேட்டு விட்ட மாதிரி, இப்படி நடுங்கிற...''

அவளுக்குப் பயத்தில் முகம் வெளிறியது. பின்புறமாக ஒரு தட்டு தட்டி விட்டுச் சென்றான். சிரித்தவாறே...

சுந்தர் வெளியூர் போயிருந்தான். இரண்டு நாட்களாகப் பிரியா... காயத்திரி அறையிலேயே... படுத்துக் கொண்டாள். அன்று சுந்தர் வந்து விட்டான்.

எல்லோரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். நேரம் ஆகவும், ''நீங்கள் போய்ப் படுங்கள். நேரம் ஆகி விட்டது,'' என்றான்.

ராகேஷ்சும், ஷியாமும் எழவும், ''நீயும் போம்மா...'' என்றான் சுந்தர்.

பிரியா.. தடுமாறி... ''நா.. நா..ன் இங்கேயே.. படுத்துக் கொள்கிறேன்,'' என்றாள்.

ராகேஷ் அதற்கு, ''என்கிட்ட இருந்து தப்பிக்க, அவர்களை ஏன் பிரிக்கிறே... என் சுண்டு விரல் நகம் கூட, உன்மேல் படாது. நீ பயப்படாமே.. வா...'' என்றான் சிரித்துக் கொண்டே.



## 15

அவள் பதில் பேசாமல் நின்றாள். ராகேஷ், ''நீ வரவில்லை என்றால்.. என் நடவடிக்கை வேறுவிதமாக இருக்கும். சரிதானா...?'' என்றான்.

அவள் குனிந்த தலையுடன், அவன் பின்னால் சென்றாள். அவன் படுத்ததும், அவளும் படுத்தாள். அவளுக்குப் பழைய நினைவுகள் வந்து தொண்டையை அடைத்தன.

ராகேஷ் காலைத் தூக்கி அவள் மேல் போட்டான். அவள் பயந்து அலறி எழுந்தாள்.

''உனக்கு இந்த அறைக்கு வந்தாலே... இப்படி கத்தினாத்தான் தூக்கம் வரும் போல் இருக்கு. இப்ப நான்

என்ன பண்ணினேன். என் காலைத் தூக்கித்தானே போட்டேன். என்னமோ... ஒரு மலையைப் பெயர்த்து உன் மேல் போட்டது போல கத்துறே...

''என்ன முறைக்குறே... என் சுண்டு விரல்தான் உன் மேல் படாது என்றேன். மற்...ற...ப் ப...டி... எ...ல்..லா..ம் உன் மேல் படலாம். சுண்டு விரல் பட்டால் மட்டுந்தான் நீ கேட்கணும்,'' என்றான். அவன் முகத்தில் முறுவல் அரும்பிற்று.

பேசாமல் பக்கத்து அறைக்கு எழுந்து சென்றான்.

அவள் பெருமூச்சொன்றை விட்டாள். இன்றுவரை, இந்தப் படுக்கையில் தனியாகப் படுத்ததில்லை.

பழைய நினைவுகள் அவளை அலைமோதின. என்ன இப்படி மாறிவிட்டான். புலி பதுங்குவது எதுக்கு. எப்போ பாயப் போகுதோ... இவன் எப்படி மாறுவான்? அவர்கள் முன் நடிப்பான்.

அன்று முக்கியமான ஒரு கல்யாணம். அதற்குச் சுந்தரால் போக முடியவில்லை. ராகேஷைக் கூப்பிட்டு, ''நீயும் பிரியாவும், கல்யாணத்திற்குப் போயிட்டு வாங்க,'' என்றான்.

ராகேஷ், ''சரிங்கண்ணா...'' என்றான்.

பிரியா பயத்தில் நான் வரவில்லை என்று கத்திவிட்டாள். அன்று பார்ட்டிக்குப் போனது நினைவு வந்ததும், உதடு நடுங்கப் பற்களால் அதை அழுத்தி நிறுத்தினாள். கல்யாணத்தில் கொண்டு விட்டு விட்டு வந்தால்... தான் எப்படி வருவது. யாராவது கொண்டு வந்துவிட்டால், அவ்வளவு தான். உனக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு என்பான்.

காயத்திரி, ''பயப்படாதே பிரியா.. ராகேஷ் உன்னை விட்டுட்டு வந்துருவான்னுதானே நீ பயப்படுறே.. அது மாதிரி நடக்காது. நீ போய் வா...'' என்றாள்.

இருந்தும் பிரியா ''முடியாது'' என்று சொல்லி விட்டாள். ராகேஷுக்கு ஆத்திரம் தாள முடியவில்லை.

''மீ... நான் ஒழுங்கா இருக்கிறவனை இவ மாத்திடுவா போலிருக்குது. இதை விட வேற யாரும் என்னை, இப்படி அவமானப்படுத்த முடியுமா..?

''உன்கிட்டே வாயிலேயே பேசக்கூடாது. நேரடியா... ஆக்ஸன்தான். அப்பத்தான் நீ சரிப்படுவே...''

''நீ அந்த மாதிரி நடந்துக்கிட்டா.. யார்தான் உன் கூட வருவா... அவளைச் சந்தேகம் வேற படுறே...''

ராகேஷ் பிரியாவிடம் எதுவும் பேசுவதில்லை. பிரியாவிற்கு ஊருக்குப் போய் விடலாம் என்று இருந்தது. வீட்டை விட்டுப் போ.. என்றவனுடன் எப்படி இருக்க முடியும். நீ என் மனைவி இல்லை. அவ மட்டுந்தான் என் மனதில். உனக்கு என்ன தகுதி இருக்கு என்றவனிடம் இனி இருக்கலாமா...?

காயத்திரிக்கு இப்போது குணமாகி விட்டது. பிரியா அவளிடம், ''நான் ஊருக்குப் போகிறேன்,'' என்றாள்.

''பிரியா, அவசரப்படாதே.. நீ ஊருக்குப் போய் அங்கேயே இருந்திட முடியுமா..? யோசித்துப் பார். அவன் திருந்திவிட்டான். இப்போ குடிப்பதில்லை,'' என்றாள்.

''நான் நம்பவில்லை,'' என்றாள்.

''நம்பிக்கைதான் வாழ்க்கையே பிரியா.. அதுவும் தாம்பத்தியத்துக்கு நம்பிக்கைதான் அ;ஸ்திவாரமே...''

"அது உங்க பிள்ளையிடம் இருக்கா..?"

அப்போது ராகேஷ் காரை விட்டிறங்கி நாலே எட்டில் மடமடவென உளளே வந்தான்.

"ராகேஷ், காபி குடித்து விட்டுப் போ..." என்றாள் காயத்திரி. "மீ எனக்கு வேலை இருக்கு," என்று கையில் வைத்திருந்த பைலைக் காட்டினான்.

இரவும் அவன் சாப்பிடக் கீழே வரவேயில்லை. காயத்திரி போன் பண்ணி, "சாப்பிட வா.." என்றாள்.

"மீ.. நான் பாதியில் வர முடியாது. அவளை வந்து ஊட்டி விடச் சொல்லுங்கள்," என்றான்.

காயத்திரி கின்னத்தில் சாதம் பிசைந்து, ஸ்பூன் போட்டு பிரியாவிடம் கொடுத்தாள். "இதை ராகேஷிடம் கொடு," என்று. பிரியா தயங்கினாள். "வேலை பார்த்தால், அவன் சாப்பிட மாட்டான். நாம்தான் கவனிக்கணும். அவன் சாப்பிடாமல் இருக்கட்டுமா...?" என்றாள்.

பிரியா வாங்கிக் கொண்டு மேலே போனாள். ஆபீஸ் அறையில் இருந்தான்.

பிரியா, "சாப்பிடுங்கள்," என்றாள், பட்டுக் குரலில்.

"நீ ஊட்டி விட்டால்தான் சாப்பிடுவேன். இல்லையென்றால் எனக்கு வேண்டாம். காலையில் இருந்து நான் சாப்பிடவில்லை என்று உனக்குத் தெரியும்."

இவனோட இது ஒரு தொல்லையாய்ப் போச்சு. சின்னப் பிள்ளையாட்டம் அடம் பண்ணுவது. பேசாமல் வைத்து விட்டுப் போகவும் மனம் இல்லை. ஊட்டி விடவும் முடியவில்லை. இவன் ஏன் என்னை இப்படி அலைக்கழிக்கிறான்?

அவனைப் பார்த்தாலோ.. நினைத்தாலோ... இதயம் அதிர்ந்தது. அவன் அணைப்புக்காக உடம்பு ஏங்கியது. பிரியா நடுங்கினாள். சே... இது என்ன நினைப்பு இந்த நேரத்தில்.

"உனக்கு இஷ்டம் இல்லையென்றால், நீ சாப்பாட்டை எடுத்துக் கொண்டு போகலாம்," என்றான் கறாராக.

அவன் சாப்பிடாமல் எடுத்துப் போகவும் மனமில்லை. காயத்திரி கேட்டால், என்ன சொல்வது, ஊட்டி விடச் சொன்னார். நான் முடியாது என்று கொண்டு வந்து விட்டேன் என்றா?

மெதுவாக அவனருகில் போய், சாதத்தை எடுத்து, அவனுக்கு ஊட்டினாள். அவள் கை நடுங்கியது. அவன் சாப்பிட்டுக் கொண்டே... பைலைப் பார்த்தான்.

அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள் பிரியா.

"ஏன்...? நல்லாவே என்னை நேராவே பார்க்கலாமே..." என்றான்.

திடுக்கிட்டுப் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

"ஊருக்குப் போகணும் என்று சொன்னாயாமே..."

"ஆம்," என்றாள்.

"ஏன்...?"

"நான் எதுக்காக இங்கே இருக்கணும்...?"

"எனக்காக..."

அவள் திகைப்பின் உச்சிக்கே போனாள்.

"நீங்கதான் என்னை விரும்பலயே... நான் உங்கள் மனைவி இல்லை என்று சொன்னீங்களே...?"

''அது அப்போ..'' கண்ணடித்தான்.

''வாயில சொல்றதெல்லாம் உண்மையாயிடுமா..? நீ என்ன நினைக்கிறே... என் மனைவி என்றுதானே..?''

''நீங்க சொன்னீங்க. அ.. அ..வ..ள்... தா..ன் என் மனைவி என்று.''

ராகேஷ் பைலை மூடி வைத்து விட்டு, ஊஞ்சலில் வந்தமர்ந்தான். பிரியாவைக் கூப்பிட்டுப் பக்கத்தில் உட்காரச் சொன்னான்.

அவள் தயங்கியபடி உட்கார்ந்தாள்.

சிறிது மௌனத்திற்குப் பிறகு, ராகேஷ், ''பிரியா, நான் சொல்வதைக் கவனமாகக் கேள்,'' என்றான்.

பிரியா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

## 16

''அன்று வந்தாளே மோனிஷா.. அவளைத்தான் நான் முதலில் கல்யாணம் பண்ணிக் கொண்டேன்.''

பிரியா அதிர்ச்சியுற்று ஊஞ்சலில் இருந்து குதித்தாள். ராகேஷ் திகைத்தான். ''என்ன பிரியா.. இவ்வளவு அதிர்ச்சி அடையறே...''

பிரியாவிற்குக் கண் கலங்கி நீர் வடிந்தது. இவனுக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகிவிட்டதா...? பிறகு நாம் ஏன்..? என்னை எதற்காகக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்.

அவளுக்கு அதிர்ச்சியில் வார்த்தை வரவில்லை.

''உ..உ...ங்..க...ளு..க்..கு ஏ..ற்கெனவே கல்யாணம் ஆகிவிட்டதா..?''

''ஆமாம். ஏன்..? உனக்குத் தெரியாதா...?''

''தெரியாது'' என்று தலையசைத்தாள். கண்களில் நீர் வழிந்தது.

ராகேஷுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன சொல்வது என்று. அவனே நினைக்கவில்லை. இவளுக்குத் தெரியாது என்று.

''பிரியா..'' என்று கையைப் பிடித்தான்.

அவள் 'வெடுக்'கெனக் கையை உருவிக் கொண்டாள்.

அவளுக்கு நெஞ்சமெல்லாம் கொதித்தது. ஏற்கெனவே கல்யாணம் ஆனவன். மீண்டும் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு... எவ்வளவு திமிர் இருக்கணும். ஏழை என்றால் அவ்வளவு இளக்காரமா..?

''அவளையும் கல்யாணம் பண்ணிக் கொண்டு ஏன்.. என்னையும் பண்ணிக் கொண்டீங்க? அதோடு விட்டீங்களா.. ஊரில் எத்தனை பெண்கள். இப்படி ஒழுக்கம் கெட்டு அலைபவருக்கு... எதுக்கு மனைவி, பணம் கொடுக்காமல் படுக்கைக்கு வரவா...?''

அவளை அடிக்கக் கை ஓங்கினான். அவள் சீறினாள். ''இனிமேல் உங்கள் கை என் மேல் படக்கூடாது. நீங்கள் ஆண் பிள்ளைதானே...?''

''என்னடி ரொம்ப பேசுறே.. அண்ணா... மம்மீ...'' என்று கீழே குரல் கொடுத்தான்.

அவர்கள் வேகமாக மேலே வந்தனர்.

ராகேஷ் அவர்களிடம், ''இவளிடம், எனக்கு ஏற்கனவே கல்யாணம் ஆனதைப் பற்றிச் சொல்லவில்லையா...?'' வார்த்தை அனலாக வெளிவந்தது.

சுந்தர் திகைத்தான். இது என்ன புதுக்கதை.

''இவள் அப்பா... சித்திக்கு தெரியும். அவர்களிடம் சொல்லித்தான் பெண் கேட்டேன். நான் பிரியாவிடம் சொல்லவில்லை. அவர்கள் சொல்லியிருப்பார்கள் என்று நினைத்தேன்.''

''ஏன்டீ... உன் அப்பா, சித்தி சொல்லாததற்கு, நாங்கள் என்ன பண்ண முடியும். நீ அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி. நீ என்னைக் கேட்கிறே...''

பிரியா விழித்தாள். கோபத்தில் உதடு துடித்தது. கன்னம் சிவந்து, மூக்கு விடைத்தது.

சுந்தர் அவளிடம், ''பிரியா, ஏம்மா... உன்னிடம் சொல்லவில்லையா...?'' என்றான்.

''என்னிடம் அவர்கள் எதுவும்.. ஏன்...? உனக்குக் கல்யாணம் என்று கூட சொல்லவில்லை. கல்யாணத்திற்கு முதல் நாள் உனக்குக் கல்யாணம் என்றார்கள். எனக்குத் திகைப்பை விட, பயமாக இருந்தது. சித்தி என்ன சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

''நான் என்ன சித்தி சொல்றீங்க. இ..ப்..ப.. எனக்குக் கல்யாணம் வேண்டாம். படிக்கணும் என்றேன். அதற்கு உன் இஷ்டத்திற்கு எல்லாம் ஆட முடியாது. கல்யாணம் செய்வதென்றால் இங்கு இரு. இல்லாவிட்டால், வீட்டை விட்டுப் போ... நாளை மாப்பிள்ளை வீட்டில் இருந்து வந்தால், அவள் யார் கூடவோ.. ஓடிப் போய் விட்டாள் என்று சொல்லி விடுகிறோம்,'' என்றாள்.

''அன்று முழுவதும் எனக்குத் தண்ணீர் கூட தரவில்லை. வீட்டை விட்டுப் போ.. என்றால் எங்கு போவேன். எனக்கு ஃபிரன்ட்ஸ்கள் கூட கிடையாது. அப்படியே போனாலும் எத்தனை நாள் தங்க முடியும். எனக்குப் படிப்பும் இல்லை. என்ன வேலை பார்க்க முடியும். ஒரு நாள் பசியையே என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இதுக்கெல்லாம் பயந்துதான் நான் பேசாமல் இருந்து விட்டேன்.

''கல்யாணம் முடியும்வரை, யார் மாப்பிள்ளை, எந்த ஊர், என்ன செய்கிறார் என்று எனக்கு எதுவும் தெரியாது. எல்லாரும் சேர்ந்து என்னை ஏமாற்றி இருக்கீங்க.

''எனக்கு அம்மா இல்லை. நான் இதுவரை யாரிடமும் அன்பை அனுபவித்ததேயில்லை. எனக்குக் கேட்க யாரும் இல்லை என்ற நினைப்பில்தானே... நீங்க இப்படி பண்ணுனீங்க. அடித்தாலும் கேட்க யாருமில்லாத அனாதை. நாம் என்ன தப்பு பண்ணினாலும், இவளுக்குக் கேட்க யார் இருக்கா.. இவளும் கேட்க முடியாது. கேள்வி கேட்பதற்குக் கூட வசதி வேண்டுமே...

''இதே வசதியுள்ள வீட்டுப் பெண் படித்தவள் என்று வந்திருந்தால்... இப்படி நடப்பீங்களா.. அவர்கள்தான் உங்களைச் சும்மா விடுவாங்களா...?

''நான் ஏழைதான். யாருமில்லாத அனாதைதான். ஆனால்..? எனக்கும் தன்மானம் இருக்கு. சுயகவுரவம் இருக்கு. அதில் ஆசை, பாசம், எதிர்பார்ப்பு, கோபம் அத்தனையும் இருக்கு ஏன்.. என்றால்.. நானும் ஒரு மனிதப் பிறவிதானே...?

"எதை வேண்டுமானாலும் ஒரு பெண் பொறுத்துக் கொள்வாள். கட்டிய கணவன் கண் முன்னாடியே ஒழுக்கம் தவறுவதை யாரும் பொறுத்துக் கொள்ள மாட்டாள். அது என்னாலும் முடியாது."

"உங்களுக்குக் கல்யாணம் ஆகி அவளுடன் குடும்பம் நடத்தி, பிறகு என்.. கூட.. அய்யோ..." என்று முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

"கட்டிய கணவனிடம், ஒரு பெண் காசு, பணத்தை எதிர்பார்க்க மாட்டாள். உண்மையான அன்பையும், பாசத்தையும்தான் எதிர்பார்ப்பா... ஒரு நாளாவது, என்னை ஒரு மனுசியா நடத்தினீங்களா..? எப்படி முடியும்.

"ஒருத்தி இருந்தால், அப்படி இருக்க முடியும். பல பேர்...

"பிரியா..யா..." என்று கத்தினான்.

ராகேஷ் ஆடிவிட்டான். அவளின் குமுறலையும் கதறலையும் கேட்டு. அதற்கு மேல் கோபம் வந்தது, அவள் பேசியதைக் கேட்டு.

"இப்போ வாயை மூடப் போறியா இல்லையா?" என்றான். சுந்தர் பிரியாவிடம், "பிரியா, நடந்தது என்ன என்று தெரியாமல் நீ பேசுறேம்மா..." என்று சொல்ல ஆரம்பித்தார்.

அதற்குள், "அண்ணா... நீங்கள் இதற்கு விளக்கம் சொல்ல வேண்டாம். இது எங்க இரண்டு பேர் பிரச்சனை. அதற்கு நான்தான் பதில் சொல்லியாகணும். நான் சொல்லிக் கொள்கிறேன். அதைக் கேட்டு நம்புவதும், நம்பாததும் அவள் இஷ்டம். என்னைப் பிடிக்கவில்லை என்றால், டைவர்ஸ் வாங்கிக் கொண்டு போய், சந்தோசமாக வாழட்டும்!" என்றான்.



# 17

டைவர்ஸ் என்றதும் விதிர்த்து நிமிர்ந்தாள் பிரியா. அவள் மனம் திகைப்புற்றது. இவனை விட்டுப் பிரிய முடியுமா..? பிரிந்து எங்கே போவது? என்ன செய்வது? மனம் அவனை இழக்க விரும்பவில்லை.

இத்தனை மாதங்களில் அவன் இல்லாமல் அவள் தவித்த தவிப்பு, அவளுக்கல்லவா தெரியும். முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலும் அவளுக்கு அவன் அணைப்பு தேவைப்பட்டது.

தூக்கத்தில் கூட அவளை விட மாட்டான். தன் கை வளைவில் அணைத்துக் கொண்டுதான் தூங்குவான்.

அவளுக்கும் இது பழகிவிட்டது. அவள் அப்பா வீட்டில் எத்தனையோ.. தூங்காத இரவுகள். அவள் உடல் வலித்தது. அவன் அணைப்புக்காக உடம்பு ஏங்கியது. அவன் அறைக்குள் வந்தாலே... அவளுக்கு இதயம் அதிரும். வேகமாகத் துடிக்கும். மூச்சை இழுத்துப் பெரிது... பெரிதாக விடுவாள். உடம்பில் சிறு நடுக்கம் ஓடும்.

அவன் ஏற்கெனவே கல்யாணம் ஆனவன் என்று தெரிந்தும். அவள் மனம் அவனை விரும்பியது. இந்த உடம்புக்கும், மனதுக்கும் வெட்கம் என்பதே கிடையாது.

இத்தனை மாதங்களில் இவளை இவன் நினைத்துப் பார்த்திருப்பானா..? ம்.. எங்கே.. தினம் ஒருத்தியோடு.. வாழ்க்கையைச் சந்தோசமாக அனுபவித்திருப்பான்.

''இத்தனை மாதங்களில் ஒரு நாளாவது வந்து பாத்தீங்களா..? என் மேல் சந்தேகப்பட்டுப் போ... என்று விரட்டி விட்டீங்க.''

''உன் மேல் சந்தேகப்பட்டு நான் போகச் சொல்ல வில்லை. என் கோபம் எல்லை மீறியது. எங்கே நீ இங்கேயே இருந்தால், உன்னை அடித்துக் கொன்றாலும், கொன்று விடுவேன் என்றுதான் போகச் சொன்னேன்.''

''கொன்று போடும் அளவிற்கு அப்படி என்ன கோபம்?''

உன் மீது வந்த கோபம் அல்ல, அது. அது... ஏதோ நினைப்பு, அதான்.''

ராகேஷ் இவ்வளவு பொறுமையாக இருப்பது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கும், அவளை விட்டுப் பிரிந்தது எவ்வளவு வேதனையாக இருந்தது. அவன் தவித்த தவிப்பு அவனுக்குத்தான் தெரியும்.

அவளை இனி அடிக்கக் கூடாது. அன்பை அவள் மேல் கொட்ட வேண்டும். அவன் அப்படி அடித்தும். அவன் அணைத்தால் அப்படியே... அவனுள் புதைந்து விடு வாள்.

பிரியா, ''நான் இனி இங்கு இருக்க மாட்டேன். என் வீட்டுக்குப் போறேன்,'' என்றாள்.

''உன் வீடு எது?'' என்றான்.

''உன் வீட்டில் உன் சித்தி உனக்குச் சும்மாவா சாப் பாடு போட்டாங்க. மாதா மாதம் பணம் வாங்கிக் கொண்டு தான். இனி நீ போனால், நாங்கள் பணம் தர மாட்டோம். பிறகு எப்படி உன்னை வீட்டில் சேர்ப்பாங்க. எங்களிடம் பணம் வாங்கிக் கொண்டுதான் உன்னைக் கல்யாணமே செய்து கொடுத்துருக்காங்க. அதனால் நான் சொல் வதைத்தான் நீ கேட்கணும்,'' என்றான்.

அவன் வார்த்தைகள் சுரீர் என்று குத்தியதால் நிமிர்ந் தாள்.

''அப்படிப் போவதென்றால், பணத்தைக் கொடுத்து விட்டுப் போ,'' என்றான்.

அவள் உடல் குலுங்கியது.

தன்னால் பணம் கொடுக்க முடியாது என்றுதானே... இப்படி பிளாக் மெயில் பண்ணுகிறான்.

''நீ ரோசக்காரி என்று எனக்குத் தெரியும். அதனால் பணத்தைக் கொடுக்காமல் நீ போக மாட்டாய் என்று நினைக்கிறேன்.''

அவளைச் சீண்டி விட்டான்.

அவளுக்குக் கோபத்தில் உதடு துடித்தது. பதில் பேச முடியவில்லை. ''சரி. நான் போகவில்லை,'' என்றாள்.

இது அவளுக்கே அதிர்ச்சியாக இருந்தது. தன் வாய் தான் அப்படிச் சொன்னதே தவிர, மனம் அதை ஏற்க வில்லை. அவன் அப்படிச் சொன்னதும், சரி, நான் போக வில்லை, என்று சொல்லிவிட்டேனே... மனம் நிம்மதி அடைந்தது. நாம் போக வேண்டியது இல்லை. இவனை இனி பிரிய வேண்டாம். ஆனால்... மனம் உறுத்தியது. எதனால் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டான்?

இரவு சாப்பிடாமல் படுத்துக் கொண்டாள். ராகேஷ் சாப்பாட்டை எடுத்துக் கொண்டு மேலே வந்தான்.

''பிரியா.. எழுந்திரு. சாப்பிட வா...'' என்றான்.

''எனக்கு வேண்டாம் பசியில்லை.''

"எனக்குப் பசிக்கிறதே..."

"பசிச்சா நீங்க சாப்பிடுங்க..."

"நீ சாப்பிடாமே... நான் சாப்பிட மாட்டேன்."

"ரொம்ப அக்கறைதான். எத்தனை நாள் சாப்பிடாமே இருந்தேன். அப்போ கூட என்னை எப்படி அடிச்சீங்க. இப்ப என்ன, ரொம்ப பாசம் வழியுது."

"முடிந்து போனதைப் பற்றி இப்போ என்ன."

"எனக்கு இன்னும் முடியலே..."

"என்ன முடியலே... முதலில் எழுந்து சாப்பிட வா," என்று அவளைத் தூக்கினான். அவள் திமிறிக்கொண்டு, "விடுங்க, நீங்க என்னைத் தொடாதீங்க!" என்றாள்.

அவள் திமிறியதில், அவன் தடுமாறி, விழுவது போல் அவள் மீதே விழுந்தான். விழுந்தவன் அவளை அப்படியே கட்டியணைத்து அவள் முகமெங்கும் முத்தமிட்டான்.

அந்த மென்மையான முத்தத்திலும், அணைப்பிலும், மெய்ம் மறந்து அவனிடம், தன்னை இழக்கத் தொடங்கினாள். அவனிடம் எந்த எதிர்ப்பும் காட்டாமல், அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம், வளைந்து கொடுத்தாள்.

அவளும் தன் கைகளை மாலையாக்கி அவன் கழுத்தில் போட்டு, அவனை அருகில் இழுத்து அவன் கன்னத்தில் தன் உதடுகளைப் பதித்தாள்.

மெல்ல... மெல்லத் தங்களை மறந்தனர். இத்தனை மாதப் பிரிவு அவர்களைத் தவிக்க வைத்தது. அவஸ்தையைத் தந்தது. அவள் அத்தனையும் மறந்தாள். அவன் கைகளில் மாலையாகத் தவழ்ந்தாள்.

ராகேஷும் அவள் தழுவலில் மயங்கினான். தங்களை மறந்து இருவரும் சொர்க்கத்துக்கே சென்றனர்.

சொர்க்கம்... சொர்க்கம் என்கிறார்களே... அங்கு இது போல இருக்குமா... பிரியாவின் உடம்பு பரவசத்தால் கிளுகிளுத்தது. அவள் இத்தனை நாள் அனுபவித்தது, பயத்திலும், வெறுப்பிலும், ஆன உறவு. ஆனால் இன்று தன்னை மறந்து, முழுவதும் அவனிடம் ஒப்படைத்தாள். அவன் அவளைச் சொர்க்கத்துக்கே அழைத்துச் சென்றான்.

அவனும் இந்த மாதிரி சுய நினைவுடன் இதுவரை பிரியாவைத் தொட்டதில்லை. எப்போதும் ஒரு மயக்கம். ஒரு வெறி. இன்று தான் தன்னை உணர்ந்தான்.

களைத்து அயர்ந்து படுத்திருந்த மனைவியின் உதட்டில் தன் உதட்டைப் பதித்தான். அவன் உதடு சூடாக இருந்தது. அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

அவளுக்கு வெட்கத்தில் முகம் செக்கச் சிவந்தது. அவள் கன்னத்தை, உதட்டை வருடினான். அது அவளுக்கு அவஸ்தையைத் தர, வேகமாக அவனைக் கட்டியணைத்தாள்.

அவன் வேகத்துக்கு அவளும் ஈடு கொடுத்தாள். இருவருக்கும் எழுந்திருக்கவே மனம் இல்லை. இருவருக்கும் நல்ல பசி. "பிரியா... சாப்பிடலாமா..." என்றான் ராகேஷ்.

## 18

பிரியா எழுந்து சாப்பாட்டை எடுத்து வைத்தாள். "முதலில் ஒரு பிளேட்தான் எடுத்து வந்திருந்தான்.

நீங்கள் சாப்பிடுங்கள். பிறகு நான் சாப்பிடுகிறேன்,'' என்றாள்.

''இல்லை. இருவரும் சாப்பிடலாம், வா...'' என்றான்.

இருவரும் ஒரே பிளேட்டில் ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொண்டும், மற்றொரு கை சேட்டை பண்ணிக் கொண்டும் சாப்பிட்டு முடித்தனர்.

அவள் நினைத்ததென்ன, இப்போ நடந்ததென்ன... அவனை இனித் தொடக் கூடாது என்று நினைத்தாள். இதுவரை அவன் சரியான விளக்கம் தரவில்லை என்று எண்ணினாள்.

அவளின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன், ''என்ன, பிரியா.. என்ன கேட்கணும்? என் முதல் கல்யாணத்தைப் பற்றித்தானே.. நானே சொல்கிறேன்,'' என்றான்.

வா என்று பால்கனியில் இருக்கும் ஊஞ்சலில் அமர்ந்து அவளையும், தன் பக்கத்தில் உட்கார வைத்து, அவள் கையை எடுத்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தான்.

பிரியா பேசாமல் அமர்ந்திருந்தாள். அவனே தொடங்கட்டும் என்று.

''பிரியா, முதலில் நீ என்னை நம்ப வேண்டும். அப்பத்தான் நான் சொல்வதை உன்னால் ஏற்றுக் கொள்ள முடியும்.

''நானும் மோனிஷாவும் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டோம். ட்ரெயினில் சந்தித்துக் கொண்டோம். ட்ரெயின் மூவ் ஆனதும், ஓடி வந்து ஏறினாள். கால் வழுக்கிக் கீழே விழப் போனாள்.

''நான் படியில் நின்றேன். அப்போது அவள் கைப் பிடித்துத் தூக்கி விட்டேன். என் மீது பூமாலை போல் நிலை தடுமாறி மேலே விழுந்தாள். திடீர் என்று என் மீது விழுந்ததால் நானும் தடுமாறி விட்டேன்.''

''பிடித்துக் கொள்ள எதுவும் இல்லாததால், இருவரும், ஒருவரை ஒருவர் பிடித்துக் கொண்டோம்.''

''அதற்கு முன் எந்தப் பெண்ணையும், இவ்வளவு அருகில் கட்டி அணைத்த நிலையில் இருந்ததில்லை. எனக்கும் முதல் அணைப்பு என்பதால் கிறங்கிவிட்டேன். அவளின் உடம்பு வாசம், என் உணர்வுகளை விழிப்படையச் செய்தது.

''அவளுக்கும் அதே நிலைதான் என்று, அப்போ நான் நினைத்தேன். பிறகு அது இல்லை என்று ஆன போது...''

அவன் உடல் இறுகுவதை உணர்ந்தாள்.

''இரண்டு நாள் பயணத்தில் அவள் சிரிக்க... சிரிக்கப் பேசினாள். நானும் என்னை மறந்து ரசித்தேன். என் வாழ்க்கையே சிரிக்கப் போகப் போகுது என்று தெரியாமல்.''

கண்களை இறுக மூடித் திறந்தான். கண் சிவந்து கோவைப் பழம் போல் இருந்தது.

அவன் கன்னத்தை வருடிவிட்டாள். அவன் அப்படியே அவள் கையைக் கன்னத்தோடு அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

ஒரு பெருமூச்சு அவனிடம் இருந்து வெளிவந்தது.

"இருவரும் அன்றே மனம் திறந்து பேசினோம். இருவரும் விரும்புவதை. அவள் அட்ரசைக் கொடுத்தாள். நானும் என் விசிட்டிங் கார்டைக் கொடுத்தேன்.

"இருவரும் சென்னை என்பதால், தினமும் சந்தித்துக் கொண்டோம். என் அண்ணன் அண்ணியிடம் சொன்னேன். அவர்களுக்கு அவளைப் பிடிக்கவில்லை. என் பிடிவாதம்தான் உனக்குத் தெரியுமே... கடைசியில் என் பிடிவாதமே வென்றது.

"அவள் யாரையும் மதிக்க மாட்டாள். அவள் வீட்டிற்கு நான் சென்றதேயில்லை. அவள் வீட்டை விட்டு வந்து விட்டாள். அவள் வீட்டில் போய் அண்ணன், அண்ணி பேசினர். அவர்கள் வீட்டில் இவளைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லை. அவர்கள் கல்யாணத்துக்கு வந்துவிட்டு, மண்டபத்தோடு போய்விட்டார்கள்.

"இவளும் அழைக்கவில்லை. அவர்களும் கூப்பிடவில்லை. எனக்கு அவள் அருகாமை தந்த மயக்கத்தில் எதுவும் தெரியவில்லை.

"அண்ணியைக் குறை சொல்வாள். பட்டிக்காடு என்பாள். அவளை ஒரு பூ மாதிரி கையாண்டேன். அது அவளுக்குப் பிடிக்கவில்லை. அந்த மென்மை அன்பு, பாசம்... அவள் எதையும் உணரவில்லை."

"அவளுக்குக் குடிப்பழக்கம் இருக்கும் போல். இது எனக்குத் தெரியாது. என்னை அவள் தூங்கவே... விட மாட்டாள். என் மீது அன்பு என்று நினைத்தேன். அப்புறம் தான் தெரிந்தது. அவளுக்கு வெறி என்று. சில மாதங்களிலே.. எனக்கு வெறுப்பு வந்துவிட்டது.

"எதற்கும் ஒரு அளவு, எல்லை இருக்குதில்ல. அதை அவள் மீறினாள். சொல்லவே எனக்குக் கூசுது."

அவன் உடல் விரைத்தது.

"பணம் பணம் என்று தினமும் கேட்பாள். தினமும் வெளியே கிளம்பி விடுவாள்.

"நான் வரட்டும் என்று காத்திருக்க மாட்டாள். அவளுக்கு வெளியில் நிறைய பாய் ஃபிரண்ட்ஸ் இருந்திருக்காங்க. அவன்கள் கூட பார்ட்டி, ஹோட்டல், மகாபலிபுரம் என்று ரூம் போட்டுத் தங்கி ஆட்டம் போட்டிருக்காள்."

இதைச் சொல்லும் போது, அவனுக்கு, அவமானத்தால் முகம் சுருங்கியது.

"நான் ஆபீஸ் போக வேண்டும். இவ கூட சுத்த முடியுமா..? தினமும் வெளியே வா என்றால் எப்படி? எனக்கு வேலைதான் பஸ்ட் என்றேன்.

"இரவும் விழித்திருந்து, பகலிலும், எனக்கு ஓய்வில்லை. அதைப் பற்றி அவள் கவலைப்பட மாட்டாள். அப்படியிருந்தும், அவள் திருப்தி அடையவில்லை என்று எனக்கு இப்போதான் தெரிகிறது.

"எப்போ போன் செய்தாலும் வீட்டில் இருப்பதில்லை. அண்ணிக்கு ஒரு ஹெல்ப் பண்ணுவதில்லை. வீட்டிலும் சாப்பிடுவதில்லை. அவள் போக்கு வீட்டில் யாருக்கும் பிடிக்கவில்லை. அவள் வீட்டில் இருக்கும் போது கூட டிரஸ் ஒழுங்காகப் போடமாட்டாள். வெளியிலும் அப்படித்தான்.

"நான் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். உனக்குப் பிடிக்குது என்றால், இந்த அறைக்குள் மட்டும் போட்டுக் கொள். நான் பார்த்து ரசிக்கிறேன். வெளியே போட்டுக் கொண்டு போகாதே என்றேன்.

''அவள் தினமும் இரவில் வந்து நீங்க என்னத்த ரசிக்கப் போறீங்க. ஆபீஸ் போகாதீங்க. என் கூடவே இருங்க. எனக்குப் பகல்லேயும் நீங்க வேண்டும் என்று, நான் ஆபீஸ் கிளம்பினவனின் சட்டை பட்டனைக் கழட்டினாள்.

''எனக்குக் கோபம் வந்தது. அதை அடக்கிக் கொண்டு, ஆபீஸ் போய்விட்டேன்.

''இப்படியே சின்னச் சின்னப் பிரச்னைகள் எங்களுக்குள் எழ ஆரம்பித்தன. இரவில் மட்டும் அப்படிக் குழைவாள். என் அன்பைப் புரிந்து கொள்ளாமல், அவள் அழகால் என்னை அடிமைப்படுத்தினாள்.

''நான் ஆபீஸ் விசயமாக டூர் போயிருந்தேன். வர ஒரு வாரம் ஆகும் என்றேன். அப்போ இரண்டு நாள் முழுவதும் என் கூடவே இருங்க. இந்த வீடு வேண்டாம். ஏதாவது பெரிய ஹோட்டலில் ரூம் புக் பண்ணிக்கலாம் என்றாள்.

''எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. சண்டை போடக் கூடாது என்று நினைத்து, நான் டாக்குமெண்ட்ஸ் எல்லாம் ரெடி பண்ணணும். என்னால் உன்னோடு இருக்க முடியாது. இந்த வேலை முடிந்ததும், ஒரு வாரம், நாம் இருவரும் வெளியூர் போயிட்டு வருவோம் என்றேன்.

''நான் ஒரு வார வேலையை நான்கு நாட்களில் அவசரமாக முடித்துக் கொண்டு வந்தேன். வரும்போது அப்படிச் சொன்னாளே, நாமும் முகத்தில் அடித்தது போல் பதில் சொல்லிவிட்டோமே... என்று என்மீது எத்தனை அன்பிருந்தால், அவள் தன்னுடன் இருக்கச் சொல்வாள் என்று நினைத்து, அவசரமாக ஓடிவந்தேன்.

''நான் இரவு வரும் போது ஒரு மணி இருக்கும். இவள் ஃபிரண்ட்ஸ் எல்லோரையும் வீட்டுக்கே கூட்டி வந்து, தண்ணி அடித்துவிட்டு, என் படுக்கையிலேயே...'' என்று திணறினான். கண்களை இறுக மூடிக் கொண்டு.

அவனுக்கு அவமானத்தில் உடம்பு ஆடியது. அவள் எழுந்து, அவனை மார்போடு அணைத்துக் கொண்டாள். சேலையில் ஈரம் உணர்ந்து, அவன் தலையைக் கோதி விட்டாள்.



## 19

அவன் தவிப்பு அடங்கச் சில நிமிடங்கள் ஆயின. இன்றே இப்படித் தவிக்கிறானே... அன்று.. அந்த நிலைமையில் அவளைப் பார்த்த போது, எப்படித் துடித்திருப்பான் என்று நினைத்தாள்.

அவன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, மீண்டும் ஆரம்பித்தான். ''நான் எத்தனை ஆர்வமாய், அவளைப் பார்க்கப் பரிசுப் பொருட்களுடன் வந்தேனோ... அந்த நிலைமையில் அவளைப் பார்த்ததும், நான் செத்தே விட்டேன்.''

''எந்த ஒரு ஆணுக்கும் இந்த நிலைமை வரக்கூடாது. எனக்குக் கொதித்தது. என் அறையில் அத்தனை பேரும். எனக்குத் தலையையே சுற்றிற்று.

''நான் கனவிலும் நினையாதது. இது நம் வீடுதானா. இது என் மனைவியா... நான் தினம்.. தினம் ஆராதனை பண்ணியவளா... என்று எனக்குப் புரியவில்லை.

''அவள் மேல் அத்தனை அன்பு வைத்திருந்தேன். அவள் குடும்பத்துக்குச் சரியில்லாதவள் என்று தெரிந்து கொண்டேன். என் அண்ணன், அண்ணி எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். இவர்கள் யார்..? குடும்பம் என்ன..? என்ன பாரம்பரியம் என்று நமக்குத் தெரிய வேண்டாமா...? கண்ணை மூடிக்கொண்டு, கிணற்றில் இறங்கலாமா...?'' என்றனர்.

''நான் அவர்களை அலட்சியம் செய்தேன். நான் நன்றாகப் பட்டுவிட்டேன். அவளுக்கு அந்த நிலைமையிலும் பயமேயில்லை. அ..வ..னை விட்டு விட்டு, என்னிடம் வந்து, டார்லிங் என்று என்னை அணைத்தாள். அவள் குடித்திருந்தது, எனக்கு அப்போதுதான் தெரிந்தது.

''எனக்கு அருவருப்பாக இருந்தது. ஓங்கி ஒரு அறை விட்டேன். இதை அவளே எதிர்பார்க்கவில்லை. அத்தனை பேரும் மிரண்டு ஓடினர். அப்பொழுதே அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினேன்.

''அவள் கத்தி அந்தத் தெருவையே கூட்டிவிட்டாள். எனக்கு ரொம்ப அவமானமாக இருந்தது. இனி என் முகத்தில் விழிக்காதே, ஒரு ஒழுக்கம் கெட்ட கழுதையோடு என்னால் வாழ முடியாது, என்று சொல்லி விட்டேன்.''

அவன் சிறிது மூச்செடுத்துக் கொண்டான். பிரியாவும் கண் கலங்கினாள். அதைப் பார்த்த அவன், அவளை அணைத்துக் கொண்டான்.

''நான் உடனே டைவர்ஸ்சுக்கு அப்ளை பண்ணினேன். அவள் முடியாது என்று சொன்னாள். ஒரு நாள் வெளியில் போகலாம், வா என்று கூட்டிச் சென்றேன். எங்கள் தோட்டத்து வீட்டுக்கு. அவளும் எப்படியும் என்னை மயக்கிவிடலாம் என்ற நினைப்பில், அரை குறை ஆடையோடு வந்தாள்.



''அவளிடம் உனக்கு என்ன குறை வைத்தேன். நகையில் குறையா..? இல்லை, பணத்தில்தான் குறையா..? சாப்பாடு, துணிமணி, வெளியே போய் வரத் தனி கார், பங்களா... இல்லை, நான் உன்னை சந்தோசப்படுத்தவில்லையா...? எதற்கு இப்படி நடந்து கொண்டாய்? அதுவும் நம் வீட்டிலேயே... நம் படுக்கையறையிலேயே... இது உனக்கு நல்லாயிருந்ததா..?'' என்றேன்.

''அவள் எனக்கு இருபத்து நாலு மணி நேரமும் நீ வேண்டும். என்னால் எப்போ... இரவு பத்து மணி வரும் என்று காத்திருக்க முடியாது,'' என்றாள் ஆணவமாக.

''நம் கல்யாணத்திற்கு முன்பே இவர்கள் என் ஃபிரண்ட்ஸ், அவர்கள் முன்னாடி நீ என்னை அவமானப்படுத்தி விட்டாய். உன்னை மான நஷ்ட வழக்குப் போட்டு கோர்ட்டுக்கு இழுக்கப் போகிறேன்,'' என்றாள்.

''உனக்காக நான் அவர்களை இழக்க முடியாது. நான் என் அழகு சுகம் வேண்டும் என்றால்... நீ இதைப் பொறுத்துத் தான் ஆகணும்!'' என்றாள் கர்வமாக.

''எனக்கு வந்ததே கோபம். டைவர்ஸ் பத்திரத்தில் கையெழுத்துப் போடு. என்னால் இனி உன் கூட இந்த வாழ்க்கை வாழ முடியாது.'' என்றேன்.

''அவள் பிடிவாதமாகப் 'போட மாட்டேன்,' என்றாள்.

"அறைக்குள் விட்டுக் கதவைச் சாத்தி விட்டு, பெல்ட்டைக் கழட்டி, விளாசு விளாசு என்று விளாசித் தள்ளினேன். எது உனக்கு அழகு என்று.

"உடம்பு முழுவதும் வரிக்குதிரை மாதிரி பட்டை பட்டையாய்த் தடம். கையெழுத்துப் போடு. இல்லையென்றால் உன் முகத்தில் ஆஸிட் ஊற்றி விடுவேன் என்று மிரட்டிக் கையெழுத்து வாங்கி டைவர்ஸ் பண்ணி விட்டேன்.

"இருந்தாலும் சொந்தங்கள், உறவுக்காரங்க, ஃபிரண்ட்ஸ், அக்கம் பக்கம் உள்ளவர்கள் எல்லாம் விசாரிக்க ஆரம்பித்தனர்.

"என்னால் அன்று நடந்ததை மறக்க முடியவில்லை. நான் என்னை மறக்க, கவலையை மறக்கக் குடிக்க ஆரம்பித்தேன்.

"கொஞ்சம்,கொஞ்சமாய் அதற்கு அடிமையும் ஆகி விட்டேன்.

"அந்த வீட்டில் என்னால் இருக்க முடியவில்லை. பெட்டில் பெட்ரோலை ஊற்றிக் கொளுத்தி விட்டேன். அண்ணன் உடனே இந்த வீட்டிற்கு மாற்றி வந்து விட்டார்.

"இங்கு வந்த பிறகு அந்த நிகழ்ச்சி கண் முன் சிறிது மறைந்தது. ஆனால் மறக்க முடியவில்லை. பல லட்சங்கள் அவளுக்குக் கொடுத்து விலக்கி விட்டேன்.

"அதன் பிறகு தான் உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணி வைத்தனர். நீ சொன்னது போல், நான் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி விட்டேன்.



அண்ணன் பிடிவாதமாக, உன்னை இப்படியே விட்டால் உன் உயிருக்கு ஆபத்து. உனக்குனு ஒருத்தி இருந்தா நீ நேரத்திற்கு வீட்டிற்கு வருவே. பொறுப்பு வரும். இனி குடிக்காதே என்று செய்து வைத்துவிட்டனர்.

"நானும் உன்னைக் கல்யாணத்தன்று தான் பார்த்தேன். உன் அழகு என்னை வெறுக்க வைத்தது. இந்த அழகை வைத்துக் கொண்டுதானே... அவள் அப்படி ஆடினாள். உனக்கு இந்த அழகா என்றுதான் உ..ன்..னை..." அவளை இறுக அணைத்தான்.

"அவளுக்கு மென்மை என்பதே பிடிக்காது. நீயும், பெண்களே அப்படித்தானோ... என்றுதான், அப்படி முரட்டுத்தனமாக நடந்து கொண்டேன்.

"உன்னிடமும் மென்மையாக நடந்து கொண்டால், நீ..யு..ம், அவள் போ...ல்... சாரிடா.. கண்ணா... என் நிலைமை அன்று அப்படி.

"உன்னைத் தப்பாக நினைத்து விட்டேன், கண்மணி. என்னை மன்னிப்பாயாடா... என் செல்லமே..!" என்றான்.

அவன் கொஞ்சலில் அவள் உருகிப் போனாள்.

"உன்னை எப்படி எல்லாம் அடித்தேன். அவளை நினைத்து உன்னை அவளை இது மாதிரி கண்டிக்காமல் விட்டதுதான் காரணமோ... அவள் தப்புப் பண்ண, நானும் அதற்கு உடந்தையோ.. என்று என் மனம் துடியாய்த் துடிக்கும்.

"அதான் சிறு தப்பு என்றாலும் உனக்கு, அப்படித் தண்டனை கொடுத்தேன்."

"நான் சொல்வது புரியுதாடா...? என்..னைப் புரிந்து கொண்டாயாடா... நீ என்னை விட்டுப் போனதும், நம்

படுக்கையில் எத்தனை நாள் கண்ணீர் விட்டேன் தெரியுமா...?

"உன்னை என்னால் மறக்க முடியவில்லை. நான் வீட்டிற்கு வந்ததும். கூப்பிட்டு வம்பிழுப்பேனே... ஏன் தெரியுமா.. உன்னோட பேச. நீதான் என் கூட பேசவே மாட்டாயே...."

பிரியா ஏதோ கேட்க வாய் திறந்தாள். தப்பாக எடுத்துக் கொள்வானோ என்று பேசாமல் இருந்தாள்.

"சொல்லுடா... என்ன கேட்கணும். இனிமே நமக்குள் ஒளிவு மறைவு இருக்கக் கூடாது!" என்றான்.

இருந்தாலும் அவள் தயங்கினாள்.



## 20

"சொல்," என்றான்.

"நா.. நான் உங்களை நாடும் போது.. பிடி..த்து தள்ளி விடுவீங்களே... அது... ஏ...ன்?" என்றாள் மெதுவாக.

அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு சிறிது நேரம் பேசாமல் அமர்ந்திருந்தான்.

அவன் முகத்தை மெதுவாக ஏறிட்டுப் பார்த்தாள்.

"எனக்குச் சொல்லவே கூசுதுடா... அவள், அவளை நான் நாடும் முன் அவளாகவே... வந்து... என்றுமே அப்படித்தான்.

"அதான் நீயாக.. அது போல் வந்தால் எனக்கு வெறி வந்து விடும்."



அவன் சுழித்த புருவத்தை நீவி விட்டாள்.

"அன்று ஒரு நாள் அவள் வந்தாளே... அவள் உன்னை அடிக்கக் கை ஓங்கவும் எனக்குக் கோபம் வந்துவிட்டது. அதான் அடி குடுத்துத் தள்ளிவிட்டேன்."

"என்னை எதற்காக அடித்தீங்க...?"

"அது உன் இடம். அவள் வந்து போ... என்றதும், பயந்து கொண்டு இறங்கினாயே... அப்போது என்ன நிலைமையில் நீ இருந்தாய். அவள் பெட்ஷீட்டை வேற பிடித்து இழுத்தா... நீ கத்துறே. அவளை விரட்ட வேண்டியதுதானே..." என்று முறுவலித்தான்.

"நான் எப்படி, அவள் யாரென்றே தெரியாதே..."

"அன்று இரவு நீ எழுந்திருக்க முடியாமல், பால் குடித்தாயே... அப்போ என் மனம் சுட்டது. அண்ணியிடம் கேட்டேன். உனக்கு அபார்சன் ஆகிவிட்டது என்று. மனம் ரொம்ப வலித்தது. என் குழந்தை, உன் வயிற்றில், இப்போ இருந்தா அது பிறந்திருக்கும்.

"உன் வீடு அப்படி என்று எனக்குத் தெரியாது. பிரியா.. நீயும் போய்க் கொஞ்ச நாள் இருந்து விட்டு வரட்டும் என்று தான் அப்படிச் சொன்னேன். அதை உன்னிடம் சொல்ல என் ஈகோ இடம் கொடுக்கவில்லை."

"நீங்கள் அவள் மட்டுந்தான் என் மனைவி என்று சொல்வீங்க."

"உனக்குக் கோபம் வரட்டும் என்றுதான். அப்பவாவது நீயாக வந்து, என்னிடம் பேசமாட்டாயா..? உன் தேவைகளை என்னிடம் சொல்ல மாட்டாயா... என்றுதான் அப்படிச் சொன்னேன். அவளை அந்த நிமிசமே மனதில் இருந்து தூக்கி எறிந்து விட்டேன்.

"உனக்கு வேற ஏதாவது சந்தேகம் இருக்கா.. இன்னும்?"

"இல்லை" என்று தலையசைத்தாள். அவளைத் தன் மடி மீது படுக்க வைத்துக் கொண்டு ஊஞ்சலை மெதுவாக ஆட்டினான்.

அவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

"என்ன?" என்றான். தான் அன்று நினைத்ததைச் சொன்னாள். இப்படிப் படுக்க வேண்டும் என்று.

'என் செல்லமே..!' என்று அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.